සෙන්තනල්
SENTHANAL

# செந்தனல்

தணல் 2 கனல் 22 2004 மே 29 - யூன் 11 16/=

## சோனியா - பிரதமர் பதவி துறக்கப்பட்டதா? பறிக்கப்பட்டதா?







இந்தியப் பிரதமராக பதவியேற்றுள்ள
மன்மோகன்சிங்

முஸ்லீம் காங்கிரஸின் உரிமைப்
போராட்டத்திற்கெதிரான சதி முயற்சியே இது
- ஹக்கீம்

## உலக சாதனையில் ஒரு தமிழ்மகன்



## தமிழர் தாயகத்தினை மீளக்கட்டியெழுப்ப இடைக்கால நிர்வாகசபை அவசியம்

-தமிழ்ச்செல்வன்.




### சைவ நற்சிந்தனை

## காலத்தோடு நன்றுசெய்

காலம் என்பது மனிதனால் வகுக்கப்பட்ட ஒரு வரைபு. சூரியஉதயங்களுக்கிடையிலான பொழுதினை நாளெனக் கணித்து பருவமாற்றங்களை வைத்து மாதங்களையும் வருடத்தையும் கணித்து மனிதன் காலக் கணிப்பினை உருவாக்கினான். இக்காலத்தினால் மனித வாழ்வில் ஆயுள் கணிக்கப்படுகிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரையிலான வாழ்க்கைப் பகுதியை குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை பருவங்களாகப் பகுத்தார்கள் இப்பருவங்களில் எப்பருவத்திலும் மரணம் எனும் முடிவு வரும் என்பதனை உணர்ந்தார்கள், அதனால் உயிர்வாழ்க்கை என்பது நிலையானதல்ல என்பதனை அறிந்து கொண்டு எதனையும் காலத்தோடு செய்து கொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்தினார்கள். இது உலகச் செயற்பாடுகளுக்கு மட்டுமல்ல உயிர்வளர்க்கும் ஆன்மீகச் செயற்பாடுகளுக்கும் பொருத் தமானதே என்பது ஞானிகளின் கூற்று. இதனாலேயே இறைவனிடத்தும் உயிர்க்களிடத்தும் அன்பு செலுத்துவதனைத் தள்ளிப்போடாதே அதனை உடனேயே செய் என்பதாகக் "காலமுண்டாகவே காதல் செய்துய்மின்" எனச் சம்பந்தப் பெருமான் நமக்கு அருளிச் சென்றார். நன்றே செய் அதுவும் இன்றே செய்.

சைவப்புலவர்
குணபால சிங்கம் (B.A)

### கிறிஸ்தவ நற்சிந்தனை

## கொடுத்தல்

கொடுப்பதில் ஒரு தனிச் சுகம் இருக்கிறது. அது கொடுத்துப் பார்ப்பவர்களுக்கே புரியும். அன்றொரு நாள் எருசலேம் தேவாலயத்தில் பெரிய உண்டியல் வைக்கப்பட்டு இருந்தது. அதில் பலரும் பல தேவைகளுக்காக காணிக்கை செலுத்தி வந்தனர். அந்த நிகழ்வை உற்று நோக்கிய இயேசு, ஏழை விதவைப் பெண் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையும் காணிக்கையாக போட்டதைக்கண்டு கொண்டார் (லூக்: 21:4) இதனை கிறிஸ்து பாராட்டுகிறார். இதிலிருந்து அவளுடைய தியாகம். இறைவனில் கொண்ட நம்பிக்கை. வாழ்வை வீரத்தோடு சந்திக்கும் துணிவு என்பவற்றை காணலாம்.

ஏழைகள் மட்டுமே அதிகமாக இறைவனை நாடுகின்றனர், கொடுக்கின்றனர். இருப்பவர்கள் இன்னும் சேர்த்துக்கொள்ளவே துடிக்கிறார்கள். இதனையே "நிறைய பணம் இருந்தும் மனம் இருள் சூழ்ந்திருக்கும்" என்பர். உலகம் இன்னும் இயங்குகிறது என்றால் ஏழைகள் மனம் விரும்பிக் கொடுக்கின்ற உயர்ந்த காணிக்கை தான். நம்பிக்கையின் வெளிப்பாடுகள் எனலாம். "ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே" என்கிறார் கிறிஸ்து. நாம் இறைவனுக்கு தரும் காணிக்கைகள் நம்பிக்கையும் தாராள உள்ளமும் தியாக உணர்வும் மேலோங்க வேண்டும். தியாகம் இல்லாத காணிக்கை உகந்த காணிக்கை ஆகாது. எனவே நம் திறமைகள், உழைப்பு, நேரம் இவற்றில் இறைவனுக்குத் தருபவற்றில் சிறந்தவற்றை தியாக உள்ளத்துடன் தருவோம்.

ஞா.மனோ
ஆசிரியர் (RC)
67, பொதுக்கிணறு வீதி,
தோணிக்கல்

### இஸ்லாமிய நற்சிந்தனை

## நட்பு

மனிதனின் வாழ்வில் நண்பன்(பி) என்பது இன்றியமையாத ஒன்று. இந்த நட்பு இல்லையென்றால் வாழ்வில் இன்பமில்லை என்று கூடக் கூறலாம். இந்த நட்பு நல்லதாக இருந்தால் அதுவே அவனது விமோசனத்திற்குப் போதுமானதாகும். இல்லையேல் வாழ்வே மோசமானதாகும் இந்த நட்பை நாமேதான் தேடிக்கொள்ள வேண்டும். ஆகவே சிறந்த நண்(பி)பன் யார் என்பதைப் பற்றி அறிஞர் இமாம் அலி (றழி) அவர்களின் கூற்று.

உன்னைப் பார்த்து சிரித்துப் பேசுபவர்கள் பலர் இருப்பார்கள். அவர்கள் அனைவரையும் நீ நம்பி விடாதே! நீ இல்லாத இடத்தில் உன்னைப் பாராட்டிப் பேசுபவனே உண்மையான நண்பன்.

முன்னால் சிரித்துப் பேசி பின்னால் நிந்தித்துப் பேசும் யாரையும் நீ நல்ல நண்பனாகக் கொள்ளக்கூடாது! அவர்கள் நட்பின் ஆற்றலை உணராதவர்கள். அவர்களுடன் நீ நட்புக் கொண்டால் உனது நட்பில் ஆத்மீகம் இருக்காது

மௌலவி: முஜீர்.யு.வஹாப்
எருக்கலம்பிட்டி

## இதய ஒலி

### ஒலியாய் கதிர் ஒளியாய்

செம்மையைச் செப்பிடும் செந்தணலே வாழ்க,

உன் ஒவ்வொரு இதழும் ஒவ்வொரு நிறங்களில் அழகு மெருகூட்டியதாகவும். ஒவ்வொரு சொற்களும் மிகவும் துல்லியமாக அச்சிடப்பட்டு வருகின்றது.

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் சிறு கதைகள் மிகவும் நன்றாக உள்ளன.

நீ இன்னும் நல்ல செய்திகளை வெளியிடவும், மிகவும் சிறப்புடனே வளரவும் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறேன்.

அ.கிருஸ்ணகுமார்
இல. 80 கனகபுரம்
கிளிநொச்சி

### சிந்தைக்கினிய செந்தணலோடு

ஐயாவுங்கள் ஆக்கங்கள் அனைத்தும் இரத்தினச்சுருக்கம். ஒவ்வொருபக்கங்களும் வாசிக்கச் சுவையாகவுள்ளது.

செந்தணலைக் கையிலெடுத்துப் படிக்கத் தொடங்கினால் முழு அம்சங்களையும் படித்து முடித்துவிட்டு இனிஅடுத்த செந்தணல் எப்போது வரும்? என்ற எதிர்பார்ப்போடு எம்மை இருத்திவிடுகின்றீர்கள்!

செந்தணல் இதழை எங்கள் வீட்டில் சிறியவர், பெரியவர், மாணவர் என்று எல்லோரும் ஒருமித்திருந்து வாசிக்கத் தக்க ஒரு குடும்பப்பத்திரிகை செந்தணல் என்றால் அதற்கு மிகையில்லை - தமிழ்ச் சந்தன வாடையை வீசும் செந்தணல் நீடு வாழ்க!

அன்புடன்
பாண்டியூர்
பொன்.நவநீதன்

### ஆசிரியருக்கு

ஏகாதிபத்தியவாதிகளின் தேசச்சதிகாரத்திற்கு, எதிராய் நின்று தகிக்கும் "செந்தணல்" எட்டுத்திக்கும் பரவட்டும். ஏய்க்கும் எத்தரின் நெஞ்சைக் கரிக்கட்டும். சுடர்க செந்தணல். படர்க அதன் பணி.

என்றும் அன்புடன்
கலாபவனன்.

அன்பான என் இனிய ஆசிரியருக்கு என் அன்பு கலந்த வாழ்த்துகள்

எனக்குள் ஒரு ஆதங்கம் இந்த வானத்தில் பறக்கவேண்டும் என்று அதற்கு சிறகு மட்டும் போதுமானதல்ல மனத் தைரியமும் வேண்டும். அந்த தைரியத்தை தந்து விட்டீர்கள் கவிதைக்கு அழகான மெருகூட்டல் படமும் உச்சத்தின் மடியில் பிறந்த குழந்தையாய் ஆக்கி விட்டது. ஏற்றம் கொள்ள என் தாய்குல செந்தணலே வாழ்க பல்லாண்டு.

வாசகன்
பனைஊரான்
த.ஸ்ரீபாலன்

வானம் உள்ளவரை
வாழும் செந்தணலே!
வாழவென் வாழ்த்துக்கள்
நான் வாழும் வரை உன் ரசிகை
மறுக்காமல் ஏற்றிடு என்னை
உன் புகழ் ஓங்க, வளம் ஓங்க
நித்தமும் அடிபணியும்,

இ.சிவசாந்தி
ரெட்பானா.

## சீனக்கடவுள் கன்ஃபூசியஸ்

சுமார் 2500 வருடங்களுக்கு முன் ஆண்பிள்ளைக்காக ஏங்கிய சீன அதிகாரிக்கு எழுபதாவது வயதில் பிறந்த ஞானக் குழந்தையே கன்ஃபூசியஸ். இக்குழந்தை இருபத்திரண்டாவது வயதில் சுயமாக பாடசாலை ஆரம்பித்து ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடின்றி எல்லோருக்கும் கல்வியை போதித்தான். நிறைய அறிவியல் சம்பந்தமான கருத்துக்களையும் ஆத்ம சிந்தனைகளையும் தன்னாட்டு மக்களுக்கு அளித்தான்.


சீன மன்னனின் அன்புக்கு பாத்திரமாகி நாட்டின் முதலமைச்சரானான். எதிரிநாட்டு மன்னர்களின் சதித்திட்டத்தால் அமைச்சர் பதவியை துறந்து தனிமனிதனாய் அரிய சிந்தனைகளை உலகுக்கு அளித்து மறைந்தான். அவற்றில் உறவுகளின் பாலமான கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பு இன்னும் சீனாவில் நிலவிவருகிறது.

இதன் நன்றிக்கடனாய் சீனமக்கள் அவனைக் கடவுளாக கருதி அவனுக்கு ஒரு கோயிலையும் மதத்தையும் உருவாக்கி 2500 வருடங்களாய் வழிபட்டு வருகின்றனர்.



கன்ஃபூசியஸ் ஆலயம்

## பிரமிப்பூட்டும் பிரமிடுகள்



ட்யூடன் கமென்

அதிசயங்களுள் ஒன்றான எகிப்திய பிரமிடுகள் பற்றிய தகவல்களை ஹார்வட் கார்ட்டர் என்ற ஆங்கிலேயரே உலகுக்குக் காட்டினார். அப்படி பிர்மிட்டுகளுக்குள் என்னதான் இருந்தது என ஆராய்ந்தபோதே ட்யூடன் கமென் என்ற பதினெட்டு வயது எகிப்திய மன்னனின் சடலத்தைக் கண்டனர்.

மணற்புயலால் புதைந்து போன பிரமிடுகளை தேடி முப்பது ஆண்டுகளாக அலைந்த கார்ட்டர், உடைக்கப்படாத பிரமிடின் கதவொன்றைக் கண்டவர், அதைத்திறந்தபோது விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்கள், மேசைகள் நாற்காலிகளுடன் அருகே தங்கத்திலான அறை. அதற்குள் ஓர் சவப்பெட்டி அதைத்திறந்த போது தங்கத்திலான இன்னோர் பெட்டி. அதைத் திறந்தால் இன்னோர் சிறிய பெட்டி அப்போதுதான் அவரது மூளையில் சுரீர் என்று மின்வெட்டியது "இத்தனை காலமாக மன்னனின் உடல் கெடாமல் இருக்குமா?" தயக்க மடைந்தாலும் படாரென திறந்தார் மன்னன் ட்யூடன் கமெனின் உடல் ஒரு முகமூடியை அணிந்து கொண்டு சூரியன்போன்று பளபளவெனப் படுத்திருந்தது. அப்போதுதான் பகோரஸ் என்ற எகிப்திய மன்னர்கள் எப்படி அடக்கம் செய்யப்பட்டனர் என்று உலகத்துக்கு ஆதாரத்துடன் கிடைத்தது.

# வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றும் பொருட்டு மாகாணக் குடும்பநல உத்தியோகத்தர்களைப் பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை 2004

மேற்படி நேர்முகப்பரீட்சை சம்பந்தமாகக் கீழ்க்காண்பவற்றை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

யூன் 7ம், 8ம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடைபெற இருப்பதாக அறிகின்றேன். நேர்முகப்பரீட்சையில் பரீட்சாத்திகள் மூன்று வருடத்திற்கான வாக்காளர் டாப்புப் பதிவு சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வாக்காளர் டாப்புப் பதிவு எந்தப் பரீட்சாத்தியாலும் சமர்பிக்க முடியாதென்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாகாண சபைத் தேர்தல்கள் இலங்கையில் தற்பொது நடைபெற இருப்பதால் தேர்தல் ஆணையாளரின் சுற்று நிருபத்திற்கமைய எந்தத் தேர்தல் அலுவலகத்திலும் 14.05.2004 தொடக்கம் 10.06.2004 வரை.

வாக்காளர் பதிவுப் பிரதி பெற்றுக்கொள்ள முடியாதென்பதைத் தாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இது மாத்திரமல்ல விடுவிக்கப்படாத பகுதிகளில் வாக்காளர் டாப்புப் பதிவுகள் சில வருடங்களாக நடைபெறவில்லை என்பதனால் அப்பகுதியிலிருந்து நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சாத்திகளால் மூன்று வருடத்திற்கான வாக்காளர் டாப்புப் பதிவு சமர்பிக்க முடியாமலிருக்கும் மென்பதையும் கவனத்தி லெடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வன்னி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய சனத்தொகை மிக்க கிராமங்கள் பல உள்ளன. வேறு மாவட்டங்களைச் சோந்த மருத்துவ மாதர்கள் இப்படிப்பட்ட கிராமங்களில் பணிபுரிய விருப்பம் கொள்ள மாட்டார்கள். பணியை ஏற்றுக் கொள்பவர்கள் கூட வெளியேறுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டே பணியில் ஈடுடபடுவர். சந்தர்ப்பம் கிடைத்த தும் வெளியேறிவிடுவர். இன்நிலையே தற்போது தொடர்ந்து கொண்டிருப்பதைக் கவனத்திலெடுக்கவேண்டியது அவசிய மாகும். நேர்முகத் தேரிவின் போது பின்தங்கிய பகுதிகளிலிருந்து கூடுதலான குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சிக்கான மாணவிகள் தெரிவாகும் வண்ணம் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் பின்தங்கிய பகுதிகளுக்கு சலுகை முன்னுரிமை கொடுத்துத் தேர்வை நடாத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கௌரவ ஆளுநர் வ.கி.மா
அரசாங்க அதிபர்
மனார்/ வவுனியர்/ முல்லைத்தீவு

# வெளிவிகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை பதவி நீக்க கோரிக்கை

வெளிவிகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடைய கருத்துக்கள் தற்போது நடாத்தி வரும் சமாதான முயற்சிகளுக்குத் தடையாக உள்ளதால் அவரை பதவியிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் தமிழ்த் தேசிய பணிக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் குழு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.அதில் இலங்கைத் தமிழ் சமுதாயமும், சர்வதேச தமிழ் சமூதாயமும் உங்களது துரிதமான இனப்பிரச்சனைத் தீர்வுக்கான முன்னெடுப்பில் அணிமித்த காலச் செயற்பாடுகளை வரவேற்பதோடு உங்களது அண்மைக்கால அனுகுமுறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தெரிவதனையும் குறிப்பிட்டாகவேண்டும் எனக் குறிப்பிடப் பட்டிருந்தது.

1. விடுதலைப்புலிகளைத் தமிழ் சமுதாயத்தின் ஏகபிரதிநிகளாக ஏற்றுக் கொண்டமை.
2. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சு வார்த்தைகளை தொடர உடன்பட்டமை.
3. இலங்கைக்கு வெளியில் ஓர் ஐரோப்பிய நாட்டில் பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும் எனும் விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டமை.

இப்படியாக புதிதாக மாற்றம் பெற்றுவரும் சூழலில் உங்கள் நல்லெண்ணத்தை மிகக்குறைத்து மதிப்பிடும் வகையில் உங்கள் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் தனது அணிமித்த அமெரிக்கா விஜயத்தின் போது, ஒரு வகையில் தேவையற்ற கோரப்படாத கருத்துக்களைத் தெரிவித்தமையும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான விடயங்களைக் கையாண்ட பின்னணியிலும் இச்சமாதான பேச்சுவார்த்தையின் குழுவில் அவர் இடம்பெற உகந்தவர் அல்லர் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

அவர் தொடர்ந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சராக இருப்பது சமாதான முன்னெடுப்பிற்கு தடையாக அமையும் என்பதே எமது நம்பிக்கை. மேலும் சமாதான முன்னெடுப்பின் வெற்றி பரஸ்பரம் நம்பிக்கையை கட்டி எழுப்புவதிலேயே தங்கியுள்ளது.

## யாழ் மாவட்டத்தில் பாடசாலைகள் புனரமைப்பு

சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் நிதியுதவியுடன் யாழ் மாவட்டத்தில் யுத்தத்தின் காரணமாக சேதமடைந்த எட்டு பாடசாலைகள் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தின்ம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த இந்திறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரூ டொக்ப் பல்காசரும், திட்டமிடல் பிரதிநிதி ஸ்கொமிட் ஆகியோருடன் மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் யாழ் மாவட்டத்தின் எட்டுப் பாடசாலைகளின் புனரமைப்பு தொடர்பாக கலந்துறையாடினர்.

அந்த வகையில் தென்மாராட்சி கல்வி வலய சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மட்டுவில் வடக்கு கமலாசினி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு சந்திர மௌலீசா வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், நுணாவில் தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வலிகாமம் கல்வி வலய பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகியவை உட்பட மொத்தம் எட்டுப் பாடசாலைகள் புனரமைக் கப்பட்டு வருகின்றன.

## முதலாம் வகுப்பு ஸ மாணவர்களின் எண்ணிக்கை 40 மட்டுமே

2005 ஆண்டு முதல் முதலாம் வகுப்பிறகு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது வகுப்பிற்கு மாணவர்களசைச் சேர்த்துக் கொள்ளும் போது வகுப்பிற்குரியமாணவர்களின் மொத்த எண்ணிக்கை 40 ஐத் தாண்டக்கூடாது என்று கல்வி அமைச்சின் செயலாளர் டக்ளஸ் தாரா.டி.மெல் தெரிவித்துள்ளார்.

செயலாளர் இது தொடர்பாக நாட்டின் சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார் ஆமறபடி அறிவித்தலை மீறி நடக்கும் பாடசாலை அதிபர்களுக்கு எதிராக ஒழுங்கற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்

## டெங்கு ஒழிப்பு சிரமதானம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் காரைதீவு நேற்று டெங்குநோய் ஒழிப்பு சிரமதானம் பாரிய அளவில் நடைபெற்றது.

பொது அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த 1000க்கு மேற்பட்ட இளைஞர்களும், பொது மக்களும் இப்பாரிய சிரமதானத்தில் பங்கு கொண்டனர். விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் விமல் எடுத்துக்கொண்ட முயற்சியில் இப்பணி இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் போராளிகள் பலரும் சிரமதானத்தில் ஈடுபட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. காரைதீவு தென்புற வீதிகள், பாலங்கள் பொன்றன இச்சிரமதானத்தில் சுத்தமாக்கப்பட்டுள்ளன.

## முஸ்லீம் அரசியலை நாசமாக்குவதற்கே இந்த சதிமுயற்சி -ஹக்கீம்

கடந்த வாரம் அரச ஊடகங்களில் ரவூப் ஹக்கீமிற்கு எதிராக ஒரு பெண்ணை வைத்து கீழ்த்தரமான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இது குறித்து ரவூப் ஹக்கீம் அவர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

முஸ்லீம் மக்களின் அரசியல் அபிலாசைகளை நாசமாக்குவதற்காக அசிங்கமான அரசியலை அரசாங்கம் முன்னெடுக்குமானால் தனி நபராக இருந்தாலும், தொடர்ந்து போராட நான் தயாராக உள்ளேன்.

அரசாங்கம் என்மீது தனிப்பட்ட முறையில் மேற்கொண்ட அசிங்கமான பிரச்சாரத்தினை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் ஹக்கீம் உறுதிபட தெரிவித்துள்ளார்.

முஸ்லீம் காங்கிரஸீன் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீமுக்கும் குமாரிகுரோ என்ற பெண்ணுக்குமிடையில் தொடர்பு இருப்பதாக அரசாங்க ஊடகங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமையும் செய்தி வெளியிட்டிருந்தன. ரவூப் ஹக்கீம் தொடர்பாக குறித்த பெண் தெரிவித்த கருத்துக்களையும் தொலைகாட்சியான ரூபவாஹினி ஒளிபரப்பியிருந்தது. அரச பத்திரிகைகளும் இதனைப் பிரசுரித்தன.

ஆனால் தன்னை ஆசைவார்த்தை காட்டியே எனக்கு அபகீர்தி ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு ஜனாதிபதியும் மற்றும் சில அமைச்சர்களும் கூறியதால் அதற்கமையவே அப்பெண் கூறியுள்ளதாகவும். முஸ்லீம் காங்கிரஸ் எம்.பிக்கான ரிசாத் பதுர்டீன், நஜீப் ஆகியோர் கூறியதாகவும் செய்திகள் பின் வெளியாகியுள்ளன.

-யாணி

## ஜனாதிபதியை சந்தித்தபின்பே சமாதானப்பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்படும்

அரசிற்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கான இறுதித்திகதி குறித்த தீர்மானம் ஜனாதிபதியைச் சந்தித்த பின்பே தெரியவரும் என நோர்வே சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் முன்னர் இருந்ததை விட, தற்போது இரு தரப்பினருக்கும் இடையே கூடுதலானதொரு நெருக்கம் காணப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவர் ஊடகவியலாளரிடம் கருத்துத் தெரிவிக்கையில் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கான விடுதலைப் புலிகளின் சில கோரிக்கைகளுக்கு, அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. அது குறித்து புலிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால் எழுத்து மூலமான சில றுதிமொழிகளை புலிகள் கேட்டிருகின்றனர். ஜனாதிபதியைச் சந்திக்கும் ாது அதற்கான சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.சமாதான பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதில் அரசும் அக்கறையுடன் இருப்பதால், இருதரப்பும் விட்டுக் கொடுப்புகளுக்கு முன்னுரிமை வழங்கும் என எதிர்பார்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## தமிழர் தாயகத்தினை மீளக் கட்டியெழுப்ப இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அவசியம்

தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்ப இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அவசியமாகும். அதன் மூலம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தினை கட்டியெழுப்ப முடியும், என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஜப்பானிய விஷேட தூதுவர் யசூசி அகாஷியிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த யசூசி அகாஷி கடந்த சில தனங்களில் முன்பு இல்ங்கை வந்திருந்த போது கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேசியுள்ளார்.

இதன்போது சமாதான முயற்சி தொடர்பாகவும் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும் கலந்துரையாடப்படும். சமாதானப் பேச்சு வார்த்தையின் தற்போதைய நிலவரங்கள் குறித்து தமிழ்செல்வன் யசூசியிடம் எடுத்துக் கூறியிருக்கிறார். சமாதானம் பேச்சு வார்த்தைகள் விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம்பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

## மட்நகரின் இரும்பு மனிதன் சங்கரதாஸ் மறைவு



எண்ணற்கரிய சாகசங்கள்புரிந்து பல வீரதீரச் செயல்கள் ஆற்றி தன் வழித்தோன்றல்களையும் மாவீரர்களாக்கிய இரும்புமனிதன் சங்கரதாஸ் அவர்கள் 24/05/04 திங்கட்கிழமை கொழும்பு தனியார் மருத்துவமனையில் காலமானார்.

கடந்த 24ம் திகதி திங்கட்கிழமை 4.30 மணியளவில் கிழக்கு மாகாண பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் திரு. தம்பையா (வயது40) அவர்கள் இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இது குறித்து பொலிசார் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

"செம்மையைச் செப்புவோம்"

சூரியன் வெளியீட்டகம்
61, கற்குழி,
வவுனியா
தொலைபேசி : 024-23891
தொலை நகல் : 024-23891

## அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தை

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் விடயத்தில்இன்னும் இடைவெளியிருந்து கொண்டேயிருக்கிறது.

சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சில கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணைக்கம் தெரிவித்துள்ளது. அரசு தெரிவித்த இணக்கப்பாட்டு, உறுதிமொழிகளை எழுத்து மூலமாகப் புலிகள் கேட்டிருக்கிறார்கள்.

இந்த விடயத்தில்விடுதலைப் புலிகள் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளதால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு சங்கடமான நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளான தம்மை தமிழின ஏகபிரதிநிதிகளாக ஏற்க வேண்டும், தம்முடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்ட வரைபின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் இடம் பெறவேண்டும்.

வெளிநாட்டில் பேச்சுக்கள் இடம் பெறவேண்டும். என்ற கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் முன்வைத்து அதனையே எழுத்து மூலமாகவும் கோருகின்றனர்

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியியோ விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதியாக ஏற்க முடியாது என கடுமையாக எதிர்த்து நிற்கின்றது. மேலும் ஜே.வி.பி தனது நிலைப்பாட்டிலிருந்து மாறாமல், ஐ.ம.சு முன்னணியில் அங்கம் வகிக்கும் எந்தவொரு பங்காளிக் கட்சியும் இந்த ஜோசனைக்கு இணங்காது எனவும் கூறுகின்றன.

இவை இப்படி இருக்க எதிர் வரும் நாட்களில் ஜனாதிபதியையும் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்திக்கவிருக்கிறார் நோர்வேயின் சமாதானத் தூதுவர்.

# செல்வம் அடைக்கல நாதன் (பா/உ) அவர்களால் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கு எழுதிய கடிதம்

அ. கீதபொன்கலன், செயலாளர்.

கௌரவ செல்வம் அடைக்கல நாதன் (பா.உ) அவர்களால் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கு, வன்னி மாவட்டத்திற் புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சோதனைச் சாவடிகள் சம்பந்தமாக (15-05-2004) வரையப்பட்ட திகதி கடிதத்தின் தமிழாக்கம்

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த வவுனியா, மன்னார் மக்கள் தங்கள் பகுதிகளிற் புதிதாக அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சோதனைச் சாவடிகள் சம்பந்தமாக மிகவும் குழம்பிய நிலையில் உள்ளனர்.

வவுனியா மன்னார் வீதியில் வைரவ புளியங்குளம் கிராமத்திலும், வவுனியா கண்டி வீதியில் மூன்றுமுறிப்பிலும், வவுனியா பட்டினத்திலும், வவுனியா திருகோணமலை வீதியிலும் புதிதாக அமைக்கப் பட்டுக்கொண்டிருக்கும் சில சோதனைச் சாவடிகளை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

உள்நாட்டு யுத்தம் உச்சக்கட்டத்தில் நடைபெற்ற காலப்பகுதியிற்கூட இவ்விடங்களில் சோதனைச் சாவடிகள் அமைப்பதற்குச் சிந்தனை கொள்ளப்படவில்லை. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் இப்படிப்பட்ட புதிய சோதனைச் சாவடிகள் நிர்மாணிக்கப்படுவது, ஓர் கோரமான, பயங்கரமான நடவடிக்கைக்கு முஸ்தீப்புக்கள் நடைபெறுகின்றன என்ற அச்சத்தை மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளது.

இனப் பிரச்சனையின் உச்சக்கட்டத்தில் வன்னி மாவட்டம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தற்போதைய அமைதிச் சூழல் காரணமாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இடம்பெயர்ந்திருந்த வன்னி மாவட்ட மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியெரத் தொடங்கியுள்ளனர். புனர்நிர்மாணப் புனரமைப்புப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதும், நீர் விநியோகம், கிராமிய மின் இணைப்புகள் ஆகியவை விடுவிக்கப்படாத பகுதிகளிற் கூட நடைபெற்றுக் கொண்டிருப்பதும் பெரும்பாலான மக்களது மீள்குடியேற்றத்துக்கு உந்துசக்தியாய் அமைந்திருந்தன.

புதிதாகச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படுவது நிறுத்தப்படாதவிடத்து, புனர்நிர்மாணப் புனரமைப்பு மீள் குடியேற்ற நடவடிக்கை அத்தனையும் குழம்பும் நிலையை உருவாக்கலாமென அஞ்சுகிறேன். கிராமத்திலுள்ள ஓர் குடும்பத்தின் சிந்தனையிற் குழப்பமான எண்ணம் தோன்றுமாயின் இக்குடும்பம் கிராமத்தை விட்டு வெளியேறும் நிலை ஏற்படலாம். இது அக்கிராமம் முழுவதையும் வெளியேறச் செய்யும் ஓர் நிலைப்பாடாய் அமையலாம். ஒரு கிராமம் வெளியேறினால், இதனால் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெருவெள்ளமாய் வெளியேறும் நிலை ஏற்படலாம்.

அகோர யுத்தம் நடந்த காலப்பகுதியில் எமது மக்கள் அனுபவித்த பயங்கர அவமானமிக்க சம்பவங்கள் திரும்பவும் நடைபெறக் கூடாதென ஆசிக்கிறேன். வன்னி மாவட்ட மக்கள் தாங்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், அடக்குமுறைகள் அவமானங்களை மறந்து ஓர் செழிப்பான புது வாழ்வைப் பற்றிச் சிந்தனை கொள்ள வேண்டுமென இறைவனை வேண்டுகிறேன்.

தாங்கள் உரிய நடவடிக்கையிலிறங்கி, புதிதாக நிர்மாணிக்கப்படும் சோதனைச் சாவடிகளுக்கு ஓர் முற்றுப்புள்ளியை வைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

# அம்பாறையின் தமிழினவரலாற்றுத் தடயம் அழியும் நிலையில்...

வி.ரி சகாதேவராஜா.
காரைதீவு -01

அம்பாறை நகரிற் தமிழர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல இருப்பினும் இன்று இரண்டு சான்றுகள் உயிர்ப்புடன் இருக்கின்றன. ஒன்று அம்பாறை ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயம், மற்றது அம்பாறை தமிழ் மகாவித்தியாலயம்.

இதில் சிங்களமக்களும் பிள்ளையாரை "கணதெய்யோ" என்று வழிபடுவதால் அவ்வாலயம் வாழுகின்றது வாழும். ஆனால் முழுக்க முழுக்கத் தமிழ் மாணவர்களை மாத்திரமே கொண்டிருக்கும் தமிழ் வித்தியாலயத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

1952 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த பாடசாலை ஆக 22 மாணவருடனும் 2 ஆசிரியருடன் ஏனோதானோ என்று இயங்கி வருகிறது. இந் நிலையில் முன்னாள் எம்.பி. குணசேகரம் சங்கர் எடுத்த முயற்சியின் பேரில் அம்பாறை தமிழ் வித்தியாலயம் புதிய அதிபர் கே. பாக்கியராசா (கவிஞர் அக்கரைப் பாக்கியன்) தலைமையிற் புதுப்பொலிவு பெற்று இயங்க ஆரம்பித்தது. பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் சி. தனபாலசிங்கம் மற்றும் ஒரு பாதிரி யாரும் பாடசாலை இயங்குவதற்கு தம்மை அர்ப்பணித்தனர்.

இன்று நிலைமை என்ன? தரம் 1 முதல் தரம் 11 வரை வகுப்புகள், தளபாடங்கள், கட்டிடவசதிகள் உள்ள அதேவேளை மாணவர் தொகை 22 ஆக உள்ளது. அதிபருடன் ஒரு முஸ்லிம் ஆசிரியையும் ஒரு தமிழ் ஆசிரியரும் உள்ளனர்.

ஆனால் உள்ள இடத்தில் சிறப்பாக இயங்க மாணவர் இல்லை என்றகுறை இன்று தலைதூக்கியுள்ளது. அங்கு அம்பாறையிலிருந்து தமிழ் மாணவர் வருவதற்கு இல்லை. அப்படியானால் மாணவர்களை எங்கிருந்து பெறுவதென்பது பிரச்சினை. மற்றது, அங்கு பயிலும் மாணவர்களுக்கு சம்மாந்துறை வலயத்துடன் இணைய வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டுள்ளது. கல்முனையிலுள்ள சிங்கள மகாவித்தியாலயம் அம்பாறை வலயத்தில் இயங்கி வருகின்றது.

மேற்பார்வை செய்யவருவோர் அனைவரும் சிங்கள அதிகாரிகள். அம்பாறை வலயத்திலுள்ள ஒரு சிங்கள பாடசாலைகளுடன் உள்ள ஒரேயொரு தமிழ்ப் பாடசாலை இது என்பது குறிப்பிடத்தக்கது.

அங்குள்ள அதிகாரிகள் எல்லாம் சிங்களவரே எனவே, இப்பாடசாலை சீராக இயங்கவேண்டுமானால் சம்பாந்துறை வலயத்துடன் இணைக்க வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கல்முனையிலுள்ள சிங்கள மகாவித்தியாலயம் அம்பாறை வலயத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே அம்பாறையிலுள்ள தமிழ் வித்தியாலயத்தை சம்மாந்துறையுடன் இணைக்குமாறு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இது ஒரு அபாய எச்சரிக்கை சமிக்ஞை தமிழின உணர்வுள்ள அபிமானிகள் இக்கட்டத்திலும் வாய்மூடி மௌனமாக இருந்தால் இப்பாடசாலை அழிய வேண்டி நேரிடும். சம்பந்தப்பட்டவர்கள் அவசரமாக தலையிட வேண்டும்.

## கல்முனையில் தொடரும் பரீட்சை மோசடி

(வேதசகா)

வருடாவருடம் கல்முனைப்பகுதியில் தேசியமட்ட (க.பொ.த), (உ/த), 5ம் ஆண்டுப் புலமைப் பரீட்சைகளின் போது ஏதோவொரு அசம்பாவிதம் நடைபெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதனை இப்பிரதேசத்திலுள்ள புத்திஜீவிகள் மிகவும் வேதனையுடன் நோக்குகிறார்கள். வேண்டுமென்றே ஒரு கும்பல் திட்டமிட்டு உழைப்பு நோக்கத்துடன் வருடாவருடம் மோசடிகளைச் செய்துவருவதாக கூறப்படுகிறது. இதைக் கவனத்திற் கொண்டு பரீட்சைத் திணைக்களம் மிகவும் கவனமாக செயற்பட வேண்டியதவசியம்.






# பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயருக்கு மர்மப் பொடியால் தாக்குதல்

பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் பாராளுமன்றத்தில் அமைச்சர்கள், எம்.பிக்கள் நடுவிற் பேசிக்கொண்டிருந்த பொழுது திடீரென மர்மப் பொடியினால் தாக்கப்பட்டார். ஆண் உறையில் அடைத்து வீசப்பட்ட அந்தப் பொடி, என்ன பொடி என்று தெரியாத போதும் அவருக்கு எதுவித காயமும் ஏற்படுத்தாமல் அவர் சட்டையிற் கறையை ஏற்படுத்தியது. அது சோள மாவாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதைக் குறித்து பிளேயர் பெரிதுபடுத்தாமல், தனக்கு டிரைகிளினீங் செலவுதான் அதிகமானது எனக் குறிப்பிட்டார். இச்சம்பவம் பாதுகாப்பு ஏற்பாடுகளில் உள்ள குறைபாடுகளைத் தான் குறிப்பிடுகிறது. இதையடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து பத்திரிகைகள் கண்டனம் தெரிவித்து உள்ளன. பிளேயர் மீது பொடி வீசமுடியும் என்றால் இரசாயனத் தாக்குதலையோ, உயிரியல் தாக்குதலையோ ஏன் நடத்தமுடியாது என குரல் எழுப்பியுள்ளன. பாராளுமன்றத்திற் பார்வையாளர் பகுதியில் 5 கோடி செலவில் கண்ணாடித் தடுப்பு போடப்பட்டும் இவ்வாறான அசம்பாவிதங்கள் குறித்து பி.பி.சியின் கடுமையான விமர்சனம் குறித்தும், பத்திரிகைகளின் கண்டனங்களை அடுத்தும் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## உலக சந்தையில் பெற்றோல் விலை உயர்வு

சர்வதேச சந்தையில் பெற்றோல் விலை வரலாறு காணாத அளவு உயர்ந்துள்ளது. ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 41.62 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது. அடுத்தமாதம் விநியோகிக்கப்படவேண்டிய பெற்றோலின் விலைதான் இது. இஸ்ரேல்-பலஸ்தீன சண்டை நெருக்கடி நேரத்துக்கான கையிருப்பு பெற்றோலை அமெரிக்க சந்தைக்கு கொண்டுவர மறுப்பது ஆகியவை காரணமாக இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

## சொல்ஹெய்முக்கு இரண்டாம் திருமணம்

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இரண்டாவது திருமணம் கடந்த சனிக்கிழமை 15.05.2004 ம் திகதியன்று செய்து கொண்டாராம்.

திருமணத்தில் இராஜ தந்திரிகள் மற்றும் அந்நாட்டு அமைச்சர்கள் அரசியல் தலைவர்கள் போன்றவர்களும் கலந்து கொண்டனராம்.

# செவ்வாய்கிரக ஆராய்ச்சியில் 'ஒப்பர்சுனிட்டி' வேகம்

செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருக்கிறதா இல்லையா?, மனிதர் வாழத் தகுதியானதா என்பது குறித்து ஆராய்ச்சியில், அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் ஒப்பர்சுனிட்டி, ஸ்பிரிட் ஆகிய இரண்டு ஆய்வுக்கலன்களை ஆராய்ச்சியில் ஈடுபடுத்தியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் குசேவ் பள்ளத்தில் ஸ்பிரிட் ஆய்வுக்கலன் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அங்கு கடல் இருந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக நாசா அறிவித்திருந்தது.

தற்போது மற்றொரு பள்ளத்தில் ஒப்பர்சுனிட் ஆய்வுக்கலன் ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது. இப்பள்ளத்தில் பல அடுக்குகள் உள்ளதாகவும், இங்கு எரிமலைகள் வெடித்துப் பாறைகளாக படிந்து இருப்பதற்கான அடையாளங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

செவ்வாய்கிரகத்திலுள்ள ஒரு மலைக்கு கொலம்பியாமலை என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த மலை மீதுதான் ஸ்பிரிட் ஆய்வுக்கலன் ஆராய்ச்சியை மேற்கொள்ளவுள்ளது.

ஸ்பிரிட்டில் இருக்கும் கரியசக்தி பற்றரிகள் தொடர்ந்து நன்றாக இயங்கி வந்தால் ஜூன் மத்தியிலே இந்த மலையை ஸ்பிரிட் ஆய்வுக்கலன் எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சதாம் ஹுசைனின் மனிதப்படுகொலைகள்

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அப்பாவி மக்களை கொலை செய்தும், சித்திரவதைக்குட்படுத்தியிருப்பதாக பெரும்பாலான ஈராக்கியர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

சதாம் ஹுசைன் மனிதப் படுகொலைகாரா? ஈராக்கியர்களை சித்திரவதைக்குட்படுத்தினாரா? என்பதை அறியும் பொருட்டு சர்வதேச கருத்தறியும் அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பீட்டின் போதே மேற்படி தகவல் தெரியவந்துள்ளது.

சதாம் மனிதப் படுகொலைகாரர் என்று 84 சதவீதமானோரும், அவர் ஈராக்கியர்களை சித்திரவதைக்குட்படுத்தினார் என்று 83 சதவீதனோரும் தெரிவித்துள்ளனர்.

சதாமின் ஆட்சிக்காலத்தில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்களைக் கொன்று குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது பற்றி ஷபா முஸ்லிம்கள் அவர் மனிதப்படுகொலைகாரரென்று முழுமனதுடன் கருத்து தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் பிடியிலுள்ள சதாம் ஹுசைன், எதிர்வரும் ஜூன் மாதத்தின் இறுதிக்குள் ஈராக்கிய நிர்வாக சபையிடம் கைமாற்றஞ் செய்யப்படவுள்ளார். அதே வேளை இவர் மீதான விசாரணைகள் அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட போவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் மறுமணம்

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் தனது காதலியான கமீலாவை மறுமணம் செய்யப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# இந்தியாவின் 14வது பிரதமராக மன்மோகன் சிங் பதவியேற்றுள்ளார்

இந்தியாவின் 14வது பிரதமராக கலாநிதி மன்மோகன்சிங் 24ம் திகதி பதவியேற்றுள்ளார். சிங்கின் பதவியேற்பிற்கு முன்தினம் ஜனாதிபதியின் வாசஸ்தலமான ராஷ்டிரபதி பவனில் மாலை நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது. 71 வயதான மனமோகன்சிங்கிற்கு ஜனாதிபதி அப்துல் கலாம் பதவிப் பிரமானமும் ரகசிய காப்புப் பிரமானமும் செய்து வைத்தார்.

பிரதமராகப் பதவியேற்றுள்ள மன்மோகன்சிங் பத்திரிகையாளர் மகாநாட்டில், நமது குடியரசு மத நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. அதை வலுப்படுத்தி மக்கள் வாக்களித்து பதவியைத் தந்துள்ளனர். ஏழை மக்கள் பயன்பெறும் பொருட்டு சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பாடுபட மக்கள் அதிகாரம் அளித்துள்ளார்.

வேற்றுமையில் ஒற்றுமைகாணும் இந்தியாவை புதிய மந்திரிசபை பிரதிபலிக்கிறது. இதற்கு முன்பு இப்படியொரு மந்திரிசபை அமைந்ததில்லை. முன்மாதிரியாகச் செயற்பட்டு மக்கள் சக்தியை உணரச் செய்வோம்.

மந்திரி சபை அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. எப்போதும் சிக்கல் ஏற்படத்தான் செய்யும். ஆனால் அதைத் தீர்க்க உறுதியான வழிகளும் உண்டு. எங்கள் ஆட்சி 5 ஆண்டுகள் நிலைக்கும் என்றும் மிக உறுதியாகக் கூறியுள்ளார்.

# சோனியா காந்தியும் பிரதமர் பதவியும்

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி தேர்தலில் வெற்றி பெற்றதும் இந்திய தேச பக்தர்கள் விளித்துக் கொண்டு விட்டனர். இந்தியத் திரு நாட்டை இந்தியர்தான் ஆழ வேண்டும். வேற்று இனத்து வெளி நாட்டவர் இந்தியாவை ஆழக்கூடாது என ஒரு செய்தியை கூறி இந்தியா முழுவதையுமே பரபரப்பாக்கி விட்டுள்ளனர்.

இப்பொழுது சோனியா, காங்கிரஸ் ரசிகர்களிடையே ஒரு பெருங் கேள்வி விடை காணாமல் தெக்கி நிற்கிறது. சோனியா காந்தி வெளிநாட்டவர் என்பதால் ஆட்சி பீடம் ஏறக்கூடாது என்று பிரச்சகையை உருவாக்கியவர் யார்?

சோனியா வெளிநாட்டவர் என்ற பிரச்சனையை ஜனாதிபதி அப்துல்கலாம் தான் எழுப்பியிருப்பார் என்பதற்கு. ஜனாதிபதி மாளிகை முற்றாக அதனை மறுத்துவிட்டது.

இதற்கிடையே சோனியா பிரதமர் பதவியை ஏற்கும்படி என்னை வற்புறுத்த வேண்டாம். நானேதான் பிரதமர் பதவியை விரும்பி ஏற்க மறுத்துள்ளேன் என்று கூறுகின்றார்.

சோனியா காந்தி எதற்காகப் பிரதமர் பதவியை ஏற்க மறுத்தார் என்பதற்கு பலவித காரணங்கள் கூறப்படுகின்றன. காங்கிரஸ் எம்.பிகள் கூட்டத்தில் சோனியா காந்தி பிரதமராகத் தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர். அவர் ஜனாதிபதி அப்துல்கலாமைச் சந்தித்துள்ளார். அப்போது என்ன பேசப்பட்டதென்று தெரியவில்லை, வெளியே வந்ததும் சோனியா காந்தி பிரதமர் பதவியை ஏற்க மறுத்து விட்டாராம்.

சோனியா காந்தியிடம் அப்துல் கலாம் வெளிநாட்டவர் பிரச்சனையை கிளப்பியதால் தான் சோனியா பதவியை ஏற்க மறுத்துவிட்டார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

1955ம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் 5வது பிரிவின்படி பிரதமர் பதவி ஏற்க வெளிநாட்டவருக்கு உரிமை கிடையாது. எனவே உயர் நீதிமன்றத்தை அணுகி அது குறித்து கருத்துக் கேட்கும் படியும் சோனியாவிடம் ஜனாதிபதி கூறியதாகவும் பின் செய்திகள் வெளியாகியுள்ளன. மேலும் இந்தச் சந்திப்பின் போது சோனியாவிடம் ஜனாதிபதி "நீங்கள் இரட்டைக் குடியுருமை பெற்றுள்ளீர்களா" எனக் கேட்டதற்கு சோனியா "ஆம்" பதில் கூறியதாகவும், இரட்டைக் குடியுருமை பற்றி உயர் நீதிமன்றில் விளக்கம் கேட்கும் வரை சோனியாவைப் பதவியேற்க அழைக்க முடியாது, என அப்துல் கலாம் கூறியுள்ளதாகவும் செய்திகள் கூறியுள்ளன.

பரபரப்பை ஏற்படுத்திய இன் நிகழ்வை அடுத்து ஜனாதிபதி மாளிகை பத்திரிகைச் செயலாளர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார். தேர்தலில் காங்கிரஸ் கூடுதல் இடங்களைக் கைப்பற்றியதும் அதன் கூட்டணிக் கட்சிகளையும் கருத்தில் கொண்டு தன்னைச் சந்திக்க வருமாறு சோனியா காந்திக்கு ஜனாதிபதி கடிதம் எழுதி இருந்தார் என்றும் ஜனாதிபதி அப்துல்கலாம் வெளிநாட்டவர் பிரச்சனை பற்றி எதுவும் பேசவில்லை என்றும் கூறியுள்ளார்.

இதுபற்றி சோனியா காந்தியின் மகன் ராகுல் காந்தி கூறியபோது:-

1990ம் ஆண்டு எனது தாயார் காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பு ஏற்றபோது நானும் எனது தங்கையும் வேண்டாம் என்று கூறினோம். உடனே எனது தாயார் காங்கிரஸ் கட்சி மூழ்கிக் கொண்டிருக்கிறது. அதைத் தூக்கி நிறுத்த வேண்டும் என்று கூறினார் அப்போது தூக்கி நிறுத்த வேண்டும் என்று கூறினார் அப்போது பிரதமர் பதவிக்கான கேள்வியே எழவில்லை. நடந்து முடிந்த தேர்தலின் பிரதமர் ஆவதற்கு மக்கள் ஒரு வாய்ப்பு கொடுத்துள்ளனர். தேர்தல் முடிவு வெளிவந்ததும் அம்மா நீங்கள் பிரதமர்' ஆவீர்களா" என்று கேட்டேன். அவர் இல்லை என்று கூறினார். உங்கள் முடிவு எதுவோ அதைச் செய்யுங்கள் என நானும் எனது தங்கையும் கூறிவிட்டோம்.

உங்கள் அன்பால் நான் திக்குமுக்காடிப் போனேன். கடந்த ஆட்சி செய்த தவறுகளை திருத்தவும், நாம் கனவு கண்ட இந்தியாவை உருவாக்கவும் பாடுபடுவேன். ஆகவே நீங்கள் காங்கிரஸ் பிரதமருக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். கட்சிக்கு பணியாற்றிக் கொண்டு எப்போதும் நான் இங்கேயே தான் இருப்பேன். நீங்கள் தான் எனது குடும்பம், ரஜீவ் கனவு கண்ட 21ம் நூற்றாண்டு இந்தியாவை உருவாக்குவேன் எனவும் உணர்ச்சி பொங்க சோனியா காந்தி கூறியுள்ளார்.

# ஈராக்கிலுள்ள துருப்புக்களைத் திருப்பி அழைக்க மாட்டேன் என்கிறது இத்தாலி

ஈராக்கில் அமெரிக்கப் படையினருடன் இணைந்து 3000 இத்தாலிய துருப்புக்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களைத் திருப்பி அழைக்க வேண்டுமென்று அந்த நாட்டின் எதிர்கட்சியான இடதுசாரி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால் இதற்கு மறுப்பத் தெரிவித்துள்ள அரசு, படையினரை வாபஸ் பெறுவதில்லை என்றும் தெரிவித்துள்ளது.

ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினருடன் இத்தாலி, தென்கொரியா, பிரிட்டிஷ் ஆகிய நாடுகளின் படையினர் இணைந்து பணியாற்றி வருகின்றன.

இதனிடையே கூட்டுப்படையினருடன் இணைந்து செயற்பட்ட ஸ்பெயின் துருப்புக்கள் திருப்பி அழைக்கப்பட்டுள்ளன.

# யாழ்ப்பாணத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்தப் போவது யார்?.....

## சமாதான காலத்திலும் போர் நெருக்கடிமிக்க சூழ்நிலையைப் போக்குவதற்கு என்ன வழி?....

- அவதானி

> **கொள்ளைகள், கொலைகள், வாள்வெட்டு கள் என்பவற்றில் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிப்பதற்காக போர்காலத்தைப் போன்று சட்டத்தைக் கையில் எடுத்துச் செயற்படுகின்ற எல்லாளன் படை....**

மொத்தத்தில் யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கு முறையாகப் பேணப்பட வேண்டும். இதற்கு பொலிசாரும், பொது மக்களும், நீதிமன்றங்களும் ஒன்றிணைந்து உறுதியாகச் செயற்பட வேண்டியது முக்கியமாகும். பொது அமைப்புக்களும், பொது மக்களும் ஏன் விடுதலைப் புலிகளும் பொலிசாருக்கும் நீதிமன்றங்களுக்கும் இதற்கான அழுத்தத்தை கொடுக் வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் இப்போது என்ன நடக்கின்றது..? யாருக்குமே தெளிவாகத் தெரியவில்லை. போர் நெருக்கடிகள் நிலவிய காலத்திலும் பார்க்க அங்குநிலைமை இப்போது மோசமாக இருப்பது மட்டும் தெளிவாகத் புரிகின்றது.

சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளன. கொள்கைகள், கொலைகள், ஆட்கடத்தல்கள், வன்முறைகள், பெண்கள் மீதான வல்லுறவு, சமூகச் சீரழிவுச் செயற்பாடுகள், வாகன விபத்து மரணங்கள் என்று அங்கு அதிகரித்துள்ள சட்டம் ஒழுங்கிற்கு விரோதமான சம்பவங்கள் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம்.

யுத்த நிறுத்தம் தொடர்கின்றது. இராணுவத்தினரும், பொலிசாரும் இப்போது யுத்தம் செய்வதில்லை. அவர்கள் சிவில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். விடுதலைப் புலிகளும் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். இருப்பினும் அங்கு வன்முறைகளும். சமூக விரோத நடவடிக்கைகளும் ஏன் அதிகரித்துள்ளன என்ற கேள்விக்குப் பொறுப்புள்ள எவரும் பதில் தரக்கூடிய நிலையில் இல்லை என்பது சோகமானது, கவலைக்குரியது.

ஊருக்கு ஊர், முக்கிய சந்திக்குச் சந்தி இளைஞர்கள் குழுக்களாகச் செயற்பட்டு வருகின்றார்கள். வன்முறைகளில் ஈடுபடுவது என்பது அவர்களுக்கு கரும்பு தின்பது போலிருப்பதாக பொலிசார் கூறுகின்றார்கள். குழுக்களிடையே இடம்பெறுகின்ற மோதல்கள் பற்றியும் பொலிசார் குறிப்பிடுகின்றார்கள். நாற்பதினாயிரம் சிப்பாய்கள் யாழ் குடாநாட்டில் இருக்கின்றார்கள். அவர்கள் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருப்பதை மிகச் சாதாரணமாகக் காணலாம். யுத்த காலத்தைப் போன்று இராணுவத்தினர் தமது கேந்திர முக்கியத்துவம் மிக்க முகாம்கள், தளங்கள் அமைந்துள்ள பகுதிகளில் வீதிகளில் ரோந்து செல்கின்றார்கள்.

கண்ணி வெடிகள். குண்டுகள் வீதியோரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்றும் சந்தேகத்திற்குரியவர்கள் நடமாடுகின்றார்களா, வீதியோரத்தில் இருக்கின்றார்களா என்றும் சோதனையிடும் நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபடுகின்றார்கள்.

இதேவேளை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகப் பொலிசாரும் பெரும் எண்ணிக்கையில் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். வீதியொழுங்கைப் பேணுவதற்காக வீதிப் போக்குவரத்துப் பொலிசாரும் கடமை புரிகின்றார்கள். நீதிமன்றங்கள் இயங்குகின்றன. பொலிசார் அங்கு வழக்குகள் தாக்கல் செய்கின்றார்கள். சந்தேக நபர்கள். குற்றவாளிகள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகின்றார்கள்.

இவ்வளவு செயற்பாடுகள் இருந்தும் குற்றச் செயல்கள் ஏன் அதிகரிக்கின்றன? என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் விசுவரூபமெடுத்துள்ளது.

கொள்கைகள், கொலைகள், வாள்வெட்டுகள் என்பவற்றில் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிப்பதற்காக போர்காலத்தைப் போன்று சட்டத்தைக் கையில் எடுத்துச் செய்ற்படுகின்ற போக்கு, இப்போதைய போர் நிறுத்தற் காலத்திலும் யாழ்பாணத்தில் காணப்படுகின்றது. கடந்த 15 ஆம் திகதி நள்ளிரவு யாழ் ரக்கா வீதியில் இடம்பெற்ற ஒரு வன்முறைக் கொலைசம்பவத்திற்கு எல்லாளன் படை என்ற பெயரில் உரிமை கோரப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்திற் கொல்லப்பட்டவர் ரதன் என்றழைக்கப்படுகின்ற யாழ்ப்பாணம் ஐந்து சந்தியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சந்திரலலித் (22) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் வவுனியாவில் வசித்து வந்தவரென்றும், இயக்கம் ஒன்றின் உறுப்பினராக இருந்தார் என்றும் பொலிசார் தகவல் வெளியிட்டிருக்கின்றார்கள். இவருடைய சடலத்திற்கு அருகிற் காணப்பட்ட எச்சரிக்கைக் குறிப்பு ஒன்றில் இவருடைய கொலைக்கு எல்லாளன்படை உரிமை கோரியிருந்தது.

இங்கு தண்டனை வழங்கப்பட்டுள்ள இவர்கள் யாழ் ஐந்து சந்தியைச் சேர்ந்த சமூக விரோதிகள். யாழ் குடாநாட்டில் நடைபெற்ற கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், பாலியல் வல்லுறவு, சிறுமிகள் மீது வன்புணர்ச்சி, கூலிக்கு ஆட்கடத்தல் போன்ற சமூக விரோதச் செயல்களை செய்ததில் இவர்களே முக்கியமானவர்கள். இன்னும் பலர் இருக்கின்றார்கள். இன்று இச் செயலுக்கான தண்டனையை இவர்களுக்கு வழங்குகின்றோம். மிகுதியானவர்களுக்கான தீர்ப்பை பின்னர் வழங்குவோம். இனி குடாநாட்டில் எவராயினும், சமூக விரோத செயல்களில் ஈடுபடுவார்களேயானால் எமது தண்டனைகளும் தொடரும். இயல்பான, நீதியான வாழ்வுக்காக எல்லோரும் ஒன்றிணைந்து கொள்வோம். நேற்றைய சம்பவத்திற்கும் நாமே உரிமை என அந்தக் குறிப்பிற் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கை என சிவப்பு நிற மையிற் தலைப்பிடப்பட்டிருந்த இந்த குறிப்பு எழுதப்பட்ட அட்டையில் எல்லாளன் படை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது, கொல்லப்பட்டவரின் தலையிற் துப்பாகிக் குண்டு பாய்ந்திருந்ததற்கான அடையாளமாக சூட்டுக்காயம் இருந்தது என்றும், இவருடைய உடலில் மோசமான அடிகாயங்கள் காணப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பல்வேறு குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய வழக்குகளில் இவர் சம்பந்தப்பட்டவர் என பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

இந்தச் சடலத்திற்கு அருகிற் காணப்பட்ட எச்சரிக்கைக் குறிப்பிற்கு அமைய முதல் நாள் நடைபெற்ற ஒரு சம்பவத்திற் தாக்கப்பட்ட ஓர் இளைஞனுக்கான தண்டனையையும் எல்லாளன் படையே வழங்கியுள்ளது என்று கொள்வதற்கும் இடமுள்ளது. இந்தக் கொலைச் சம்பவத்தின் போது ஐந்து இளைஞர்கள் ஹைஏஸ் வான் ஒன்றிற் கடத்திச் செல்லப்பட்டதாகவும், ஒருவருக்கு மாத்திரமே மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும். ஏனைய நால்வரும் படு மோசமாகத் தாக்கப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் தகவல்கள் கசிந்திருக்கின்றன. இவர்கள் அனைவருமே யாழ்ப்பாணம் ஐந்து சந்தியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் வெள்ளிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற ஒரு சம்பவத்திற் பாக்கியநாதன் விஸ்ணுகாந்தன் என்ற இளைஞன் படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். அவருடைய புதிய மோட்டார் சைக்கிள் ஒன்று யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டருக்கருகில் எரிக்கப்பட்டிருந்தது. எரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் பதிவிலக்கத்தைக் கொண்டு பொலிசார் உரிமையாளர்கள் யார் என்பதைக் கண்டறிந்து விஸ்ணுகாந்தனைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியிருக்கின்றார்கள். இவர் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் இவருக்குச் சம்பந்தம் இருப்பதாகவும் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நடை பெற்று வருவதாகவும் பொலிசார் தெரிவித்ததையடுத்து, அவரை இம்மாதம் 28ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரம் உத்தரவிட்டுள்ளார். அடிகாயங்களுக்குச் சிகிச்சை பெறுவதற்காக இவர் உடனடியாகப் பலத்த பொலிஸ் காவலுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றம் மற்றும் யாழ் பொலிஸ் வட்டாரங்களின் தகவல்களின்படி, யாழ் நகரில் பாதாளக் கோஸ்டிகளின் நடவடிக்கைகளை ஒத்தச் செயற்பாடுகளில் இளைஞர்கள் குழுவாகக் குற்றச் செயல்கள், சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இந்தக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிசார் உறுதியற்ற செயல்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றார்கள். சட்டத்தையும் நிதி நிர்வாகத்தையும் நிலைநிறுத்த வேண்டிய பொலிசார் தமது கடமையைச் செய்வதில் என்ன தடை இருக்கின்றது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

பொலிசாருக்கு உள்ள தடைகளை நீக்குவதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள நீதிமன்றங்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலையில் இருப்பதையும் உணர முடிகின்றது. இதன் காரணமாகவே. யுத்தகாலத்தைப் போன்று எல்லாளன் படை போன்ற நிழல் அமைப்புக்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுக்க வேண்டிய சூழ்நிலை அங்கு தோன்றியுள்ளது. இன்றைய யாழ்ப்பாண நிலைமையில்சட்ட விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக எல்லாளன் படை போன்ற அமைப்புக்கள் அல்லது சக்திகளின் துணை அவசியமாகத் தோன்றலாம். ஆனால் நாளடைவில் அந்தப் பாணியைப் பின்பற்றிக் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற, ஆயுத பலம் கொண்ட எவரும் தான் தோன்றித்தனமாகச் செயற்படுவதற்கும் ஊக்குவிக்கப்படலாம் என்ற ஆபத்தும் இருக்கின்றது.

மொத்தத்தில் யாழ்ப்பாணத்தில், சட்டம் ஒழுங்கு முறையாகப் பேணப்பட வேண்டும். இதற்கு பொலிசாரும், பொதுமக்களும். நீதிமன்றங்களும் ஒன்றிணைந்து உறுதியாகச் செயற்பட வேண்டியது முக்கியமாகும். பொது அமைப்புக்களும், பொதுமக்களும் ஏன் விடுதலைப் புலிகளும் பொலிசாருக்கும், நீதிமன்றங்களுக்கும் இதற்காக அழுத்தத்தைக் கொடுக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள குற்றச் செயல்களில் இருந்து நிவாரணம் பெறுவதற்காகப் பொதுமக்கள் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகங்களை நாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தவிர்க்க முடியாத நிலைமையாகும். பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற முறைப்பாடுகளுக்கும் உரிய நடிவடிக்கைகள் எடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் இருக்கின்றார்கள் என்பதும் உண்மையே. அவர்கள் அரசியல நடிவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகவே இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் அதிகரித்துச் செல்கின்ற குற்றச் செயல்கள் சமூக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்கள் பொலிசார் மீது அரசியல் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் உள்ள சட்ட நடைமுறைகளுக்கும் மனித உரிமைகள் செயற்பாடுகளுக்கும் ஏற்ற வகையிற் பொலிசாருக்கும் நீதி நிர்வாகத்திற்கும் எதிராகப் பொது மக்கள் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் சட்டங்களின் உதவியோடு அழுத்தங்களைப் பிரயோகிக்க முன்வர வேண்டும். இதற்கு அங்குள்ள சிவில் அமைப்புக்களும், அரசியல் அமைப்புக்களும் வழிகாட்டிச் செயற்பட வேண்டும். அதன் மூலம் மட்டுமே யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரம் நிலைகுலைந்துள்ளது என்ற உண்மை ஆதாரபூர்வமாக நிலைநிறுத்தப்படும். அதற்கு அரசியல் சார்ந்த ஓர் இடைக்கால மாற்று ஏற்பாடு அவசியம் என்ற தேவையையும் சரியான முறையில் வெளிக் கொண்டு வர முடியும். ■

# புலிகள் மீதான தடையை இந்தியா நீடிப்பு

விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்தியா மேலும் நீடித்துள்ளது. வர்த்தக மானி மூலம் 22ம் திகதி இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஊடுருவி அங்கு சட்ட விரோத நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுவதற்கான வாய்ப்பு உள்ளது.

கொடூரமான தீவிரவாத அமைப்பான புலிகள் வன்முறையையும், அதன் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டையும் கைவிடாத வரை, அதனால் இந்தியாவின் இறைமைக்கு ஆபத்து உண்டு என்று அந்த அறிவித்தல் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாடாளுமன்றத் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரும் திருமலை மாவட்ட எம்.பியுமான இரா.சம்பந்தன் தெரிவிக்கையில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இடைவெளி இனி வரும் காலங்களில் குறையும். காரணம், இந்தியா எமது சமாதான முயற்சிக்கு ஆதரவை நல்கும் என எதிர்பார்க்கிறோம். இம்முறை வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு இலங்கைப் பிரச்சனை தொடர்பான ஓரளவு அனுபவமும், அறிவும் உண்டு. அவர்கள் மத்தியில் ஈழத்தமிழர்களின் பிரச்சனைகளைப் பேசக் கூடிய வாய்ப்பு உள்ளது.

இந்தியாவின் புதிய அரசு இலங்கையில் பேச்சு மூலமான தீர்விற்கு ஆதரவளிக்குமென நம்புகிறோம், என கருத்துக் கூறியிருந்தார். ஆனால் இப்படி எதிர்மறையான ஒரு இந்தியப் பதிலை தமிழ்கட்சிகள் மட்டுமல்ல தமிழ் மக்கள் கூட எதிர்பார்க்கவில்லை.

விஜேஏ

# மலையக தமிழர் மீதான தாக்குதலில் மைல்கல்

## கந்தபொல விவகாரத்தில் இருதமிழர் பழி



தருவது மலைத்தமிழன்

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற பின் சிங்கள பேரின சக்திகள் இந்நாட்டின் தமிழர்கள் மீதான அடாவடிதனத்தின் மூலம் இன ஒழிப்பை மேற்கொண்டு வருகிறது. அதன் உச்சக்கட்டம் தான் 1983ம் ஆண்டு ஜுலை கலவரம். சிங்கள பேரின சக்திகளின் தாக்குதலால் மலைநாட்டுத் தமிழர்களின் பெரும்பான்மையானோர் தாயகமான இந்தியாவுக்கு பயணித்தனர், அது போலவே இந்நாட்டிலிருந்து தமிழர்களை வெளியேற்ற சிங்களப் பேரின சகல சக்திகளும் முற்படுகின்றன.

1983 ஜுலை கலவரம் உச்சகட்டத்துக்கு வந்து அது இந்திய அரசின் கட்டளையால் அமைதிக்கு வந்தும், அதன் பிறகு சிறியளவில் தொடரத்தான் செய்கின்றது. 1994 ஆம் ஆண்டு சந்திரிக்கா அம்மையாரின் பொதுஜனஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. அந்தநேரம் மலையக தமிழர்கள் பெரும்பான்மையானோர் பொ.ஐ.முக்கு வாக்களிக்கவில்லை. இதன் காரணமாக பொ.ஐ.முயை சேர்ந்த காடையர்கள் மலையக தமிழர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதோடு, மலையக தமிழர்களின் உடமைகளையும் அழித்தனர். இது திரைமறைவிலேயே நடந்தாலும் அந்தக் காலத்து அரசான பொ.ஐ.மு அவ்விடயத்தில் கவனமெடுக்கவில்லை. குறிப்பாக இரத்தினபுரி, கேகாலை போன்ற மாவட்டங்களில் அதிகமாக காணப்பட்டது.

இரத்தினபுரி. கேகாலை மாவட்ட தமிழர்கள் அதிகமாக பாதிக்கப்பட்ட தோடு, மலையக தமிழர்களின் வாழிடமான ஆலயங்கள் பலவும் தீக்கிரையாக்கப்பட்டன. ஆனாலும் அந்த தமிழர்களுக்கு எங்கும் நிவாரணம் பூரணமாகக் கிடைக்கவில்லை. அத்தோடு மேற்கூறிய மாவட்டங்களில் மலையக தமிழர்கள் தொழில்வாய்ப்பை இழந்து இடம்பெயர்வையும் மேற்கொண்டனர். இதில் ஒன்று இ.தொ.கா.வோ எந்தவொரு மலையகக்கட்சியோ இவர்களுக்கு குரல் கொடுக்கவுமில்லை, உதவவுமில்லை. அத்தோடு மேற்கூறிய மாவட்டங்களில் தொடர்ந்து தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாமலே போகின்றன.

**இதுமட்டுமல்லாது கண்டி. பதுளை. நுவரெலியா மாவட்டங்களில் 1994க்கு பிறகு மலையக தமிழர்கள் மீதான தாக்குதல் அதிகரித்து கொண்டே வருகின்றது. காலாகாலமாக மலையக தமிழர்கள் சிங்கள காடையர்களாலும் சிங்களஅரசியல் வாதிகளாலும் தாக்குதலுக்குட் படுகின்றனர்.**

இதுமட்டுமல்லாது கண்டி. பதுளை. நுவரெலியா மாவட்டங்களில் 1994க்கு பிறகு மலையக தமிழர்கள் மீதான தாக்குதல் அதிகரித்து கொண்டே வருகின்றது. காலாகாலமாக மலையக தமிழர்கள் சிங்கள காடையர்களாலும் சிங்களஅரசியல் வாதிகளாலும் தாக்குதலுக்குட்படுகின்றனர். மலையக தோட்டப்புறங்களின் எல்லையில் சிங்களபேரின கிராமங்கள் அமைந்துள்ளன. எனவே மலையக தமிழர்கள் சிங்கள கிராமங்களைத் தாண்டியே நகருக்கு செல்ல வேண்டும் எனவே தேர்தலுக்குப் பின்னான காலப்பகுதியில் மலையக தமிழர் நகருக்குச் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது.

அத்தோடு நகர்ப்புற பாடசாலைக்கு செல்லும் மலையக யுவதிகள் மற்றும் நகருக்கு தொழில்புரியச் செல்லும் யுவதிகள் சிங்கள காடையர்களினால் பாதிக்கப்படும் விடயங்களை அடிக்கடி பத்திரிகையிற் காணலாம். எனினும் நியாயம் கிடைக்கவில்லை. அதற்கு எதிராக குரல்கொடுக்க மலையக சமூகத்துக்கு யாருமில்லை.

அதுமட்டுமல்லாது 2000 ஆம் ஆண்டு பண்டாரவளை பிந்துனுவெல புனர்வாழ்வு முகாமில் இருந்த தமிழ் கைதிகள் மீது பாதுகாப்பு படையுடன் காடையர்கள் தாக்குதல் நடாத்தி 27 தமிழ் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிராக தலவாக்கலை நகரில் நடந்த ஆர்பாட்டத்தின் போது இலங்கை ஆயுத படையினரால் தமிழர்கள் கொல்லப்பட்டனர். அது போலவே இன்னும் பல விடயங்கள் நடந்தும் இலங்கை பேரின அரசு மலையக தமிழர்களைப் பாதுகாக்காமல் நசுக்கியது.

இம்முறை பாராளுமன்ற தேர்தலில் ஐ.ம.சு.கூ மலையக தமிழர்கள் வாழ்ந்த பகுதியில்தான் தோல்வியைத் தழுவியது. இதனால் ஆத்திரமடைந்த இந்த பேரின சக்தி இம்முறையும் தாக்கியது. அதிலும் ம.வி.மு இம்முறை அதன் அடாவடித்தனத்தை மலையக தமிழர் மீதே கட்டவிழ்த்து விட்டுள்ளது. அதிலொன்றுதான் கந்தபொல விவகாரம் இதன்போது பொலீஸ் துப்பாக்கியின் இரையாக வீரசாமி ஜெயராம் (44வயது), அழகன் விமலநாதன் (வயது 26) ஆகிய இரண்டு தமிழ் உயிர்கள் பலியாகின. ஆனால் பாதுகாப்பு அமைச்சை தன்வசம் வைத்துள்ள ஜனாதிபதி அம்மையார் என்ன பதில் சொல்லப் போகிறார்.

இந்த விடயத்தில் விளம்பரத்தைத் தேடினாலும் இ.தொ.கா, ம.ம.மு மற்றும் ஏனைய மலையக சக்திகள் அனைத்தும் முன்னின்றது பாராட்டவேண்டும். அத்தோடு மலையக தமிழருக்கான பாதுகாப்பை உறுதி செய்ய இந்த சக்திகள் ஒன்றுபட வேண்டும்.

கந்தபொல விவகாரம் சம்பந்தமான மலையக தமிழர் விடுதலை ஒன்றியம் (M.T.V.O) என்ற அமைப்பு இவ்விடயத்தினை வன்மையாகக் கண்டித்து, இவ்வாறான சம்பவம் மீண்டும் ஏற்படின் மலையகத் தமிழ் சக்திகள் ஆயுதமேந்துவதை தடுக்க சிங்கள அரசால் முடியாது என்றும் தெரிவித்துள்ளது. கந்தபொல விவகாரம் மலையக தமிழர் மீதான தாக்குதலின் முற்றுப் புள்ளியாக இருக்கவேண்டும். இல்லாவிடின் இச்சம்பவம் மலையகத் தமிழ் போராட்டத்தின் பிள்ளையார் சுழியாகட்டும்.

# தமிழர் வரலாறு இலங்கை கல்விக் கொள்கையில் இணைக்கப்பட வேண்டும்.

-எழவான்

இலங்கை நாட்டின் ஆரம்ப காலப் பகுதியில் தமிழ் இனத்தினரே ஆட்சியினை நடாத்தினார்கள் என்பதற்கு பல தொல் பொருட் சான்றுகளை சிங்கள இன அறிஞர்களே நூல்களில் எழுதியுள்ளார்கள். ஆனால் இலங்கையை, பிற்பட்ட ஆட்சிக் காலத்தில் சிங்கள ஆட்சியாளர்கள் தங்களையும் தான் சார்ந்த சிங்கள இனத்தினையும் முதன்மைப்படுத்த எண்ணியே தமிழினத்தின் வரலாற்றுப் பதிவுகளை இருட்டிப்பு செய்துள்ளனர். இது ஒரு இனத்தினை சாகடிக்கும் செயற்பாடாகும். இதனை அந்தச் சமூகம் ஒரு போதும் ஏற்காது. உண்மையினை வெளிக் கொணரவும், தங்களை தாங்களே ஆட்சி செய்யவும் எப்போதும் விரும்பும். இதனை சிங்கள இனவெறியாளர்கள் நன்குணர வேண்டும்.

இலங்கை சிங்கள அரசுகளால் தயாரிக்கப்பட்ட கல்விக்கொள்கையில் பாடசாலை மாணவர்களிடையே பௌத்த மதத்தையும், சிங்கள ஆட்சியையும் வெளிப்படுத்த வேண்டும், என்ற ஒரே நோக்காக கொண்டு வரலாறு என்ற பாடத்தினை சேர்த்து முழுக்க முழுக்க பௌத்தர்களின் வரலாற்றினை இணைத்துள்ளார்கள்.

இதனால் தமிழ் இனத்தின் வரலாற்றுப் பின்னணி மறைக்கப்பட்டதால் தமிழ் மாணவர்கள் தங்கள் இனத்தின் வரலாற்றினை உணர்ந்து கொள்ளாத நிலையில், இனவாத அரசான சிங்கள பௌத்த அரசினுடைய வரலாற்றினை கற்றுக் கொண்டிருப்பது மிகவும் வருந்தத் தக்கதொன்றாகும்.

இலங்கையின் இனத்துவேச ஆட்சியாளர்கள் தங்கள் இனவெறியினை இலங்கையினுடைய கல்விக் கொள்கையிலும் கையாண்டுள்ளனர். இதற்குரிய முழுப் பொறுப்பினையும் சிங்கள அரசே பொறுப்பேற்க வேண்டும்.

இலங்கை மாணவர்களினுடைய கல்விக் கொள்கையினை தீர்மானிப்பதிலும், செயற்படுத்துவதிலும் கூடுதலாக ஈடுபடுத்தப்படுவோர்கள், சிங்கள இனத்துவேச வெறியாளர்களாவர். இந்த வரலாற்றுப் பாடத்தினை இனியும் தமிழ் சமூக மாணவர்கள் கற்றுக் கொள்ளக் கூடாது. இனிமேல் புதிதாக பாடவிதானத்தில் தமிழினத்தின் உண்மைத் தரவுகள் இணைக்கப்படுவதுடன் அந்த சமூகத்திற்கும் பாடவிதானத்தில் உரிய ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும்.

தமிழர்களுடைய கலாச்சாரம், பாரம்பரியம், விழுமியங்களுக்கு ஏற்றாற் போல் தமிழர்களுடைய வரலாற்று பின்னணியினை இலங்கை கல்விக் கொள்ளையினுள் உள்வாங்கப்பட்டு கற்றல் செயற்பாட்டின் நடைமுறையில் கொண்டு வரப்பட வேண்டும். இது நடைபெறாத பட்சத்தில் எதிர்காலத்தில் நடைமுறைக்கு வர இருக்கின்ற நிர்வாகமான வடகிழக்கு இணைந்த நிர்வாக அலகு அரசினுடைய கல்விக் கொள்கையினுள் நிச்சயமாக உள்வாங்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

அப்போதுதான் எங்கள் தமிழினத்தினுடைய வரலாற்றுத் தரவுகளையும். பழைய தமிழ் அரசுகளினுடைய செயற்பாடுகளையும், தமிழன்தான் இலங்கையின் பூர்வீக குடிமகன் என்பதையும் இளம் குழந்தைகளின் மனங்களில் விதைத்து, தமிழினத்தின் உணர்வினை விளங்கிக் கொண்ட குடிமக்களாக வளர்த்தெடுப்பதற்கான பெரும்பணியினை செய்து கொள்ள முடியும்.

சிங்கள அரசுகளினுடைய செயற்பாட்டால் தமிழினத்தை வந்தேறிய குடிகள் என்றும், பௌத்த மதம் தான் முதன்மையானது, சிங்கள இனமே பூர்வீக குடிகள் என்றும் கூறி செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

தாங்கள் அறிந்த உண்மையையே சிங்கள இனம் எங்களுக்கே அப்பட்டமான பொய்யினைக் கூறி எங்கள் இனத்தின் உண்மைத் தரவுகளை மூடி மறைத்து வருகின்றது.

இந்நிலை தொடருமானால் எங்கள் சந்ததியினரும் சிங்கள அரசினால் அமைந்துள்ள வரலாற்றுப் பாடத்தினை உண்மை என நினைத்துக் கொள்ளும் நிலை வரக் கூடும். அத்துடன் எதிர்காலத்தில் வரலாற்று ஆய்வுகள் இடம் பெறும்போது சிங்கள அரசின் வெளிப்பாட்டையே தரவுகளாக இணைக்கும் ஓர் துர்ப்பாக்கிய நிலையும் வரலாம்.

இச்செயற்பாடு ஒரு போதும் தமிழினத்திற்கு வரக்கூடாது வரமுடியாது. இந்நிலையினை உணர்ந்து தமிழினம் தனது வரலாற்றை தனது இளம் சந்ததியினருக்கு ஊட்டும் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும்.

# செய்திக்கதிர்

## இனப்பிரச்சனைக்குத் தீர்வு இரண்டே வார்த்தையில் உள்ளது

இருபது வருடங்களுக்கு மேலாக
இரத்த ஆறு ஓடுகிறது நமது நாட்டில்,
இரண்டு இனங்கள் சேர்ந்து வாழ்வதற்கு
வழி தெரியாமல் தடுமாறுகிறார்கள்.
நமது ஆசான்கள், அறிஞர்கள் பெருமக்கள்
புத்தர் பெருமானின் அடிச்சுவட்டில்
போதனை செய்பவர்கள்........
அகிம்சையும் கருணையும் இரு கண்கள்
என்னும் பாடம் பயில்பவர்கள்
இந்தப் பிரச்சனையை
ஊதி ஊதி எரிய விடுகிறார்கள்.
நாட்டுமக்கள் அனைவரும் சகோதரர்கள்
என்று போதிப்பவர்கள்.
சிங்கள பௌத்தர்கள் மட்டுமே
இங்குவாழ வேண்டும் என
எண்ணுகிறார்கள் – இந்த எண்ணத்தின்
விளைவால் சிறுபான்மை மக்களை
அடக்கி ஒடுக்கி அடிமைகளாக்கிப்
பந்தாடுகிறார்கள்.
சாமபோதனா தண்டம் என்ற முறையில்
தமிழ்மக்கள் தங்கள் உரிமைகளைக்
கேட்டால், முழங்கையைக்
காட்டுகிறார்கள்.
தமிழ் மக்களும், இந்த நாட்டின்
சகல உரிமைகளுக்கும் உரித்துடையவர்கள்,
என்பதை இவர்கள் மறந்துபோனது
ஏன்? நன்றாக எண்ணிப்பாருங்கள்
இந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வு
இரண்டே வார்த்தைகளில்
அடங்கியுள்ளது.
வாழ வாழிவிடு, வாழ வாழிவிடு
இந்தக் எண்ணக் கருவை
அனைவரும் மனதில் இருத்திக் கொண்டால்.
இனப்பிரசினைக்கு இடம் ஏது?

-அன்பன் மட்டக்களப்பு-

## சமாதானத்தைப் பந்தாடுகிறார்கள்.

நமது நாடு விளையாட்டில்
நன்கு முன்னேறியுள்ளது.
கிரிக்கெட், உதைபந்தாட்டம்
இரண்டிலுமே நாம் விண்ணர்கள்.
அதனால்தானோ என்னவோ
நமது நாட்டு அரசியல்
சமாதானத்தையும் பந்தாடுகிறது.
சமாதானம் நமது நாட்டில்
கிரிக்கட் பந்தாகவும், சில வேளைகளில்
உதைபந்தாகவும் ஆகிவிடுகிறது.
யூ.என்.பியும், சுதந்திரக்கட்சியும்
இருகோஷ்டிகள். இடைக்கிடை
ஜே.வி.பியும் கேளாது பங்கு கொள்ளும்
புதிதாக ஹெல உருமய கோஷ்டி
இரண்டு கோஷ்டிகள் ஆடவேண்டிய
ஆட்டத்தைச் சிலவேளைகளில்
நான்கு கோஸ்டிகளும்
சேர்ந்து ஆடுகின்றன.
பல சந்தர்ப்பங்களில்
அழுகுணி ஆட்டமும் இடம்
பெறுகிறது.
அம்பயர், ரெபரி எல்லாரையும்
தூக்கி எறிந்துவிட்டுத்
தாறுமாறாக ஆடுகிறார்கள்
விதிமுறைகளை மீறி ஆடுகிறார்கள்.
அம்பயரோ, ரெபரியோ தலை
நீட்டினால்
அவர்களும் பந்தாடப்படுகிறார்கள்.
பார்வையாளர்கள் கூச்சல் போட்டால்
அவர்களைப் பூ என ஊதிவிடுகிறார்கள்.
கிரிக்கெட்டிலும், கால்பந்தாட்டத்திலும்
சாதனை படைத்த நமது நாடு
சமாதான ஆட்டத்தில்
சாதனை படைப்பது எப்போது?

# பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள முஸ்லீம்களுக்கு சந்தர்ப்பமென்றில்லாமல், உரிமை வழங்கவேண்டும்

மீரா.எஸ். இஸ்ஸடீன்

பல தசாப்பதகாலமாகப் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காணும் முகமாக அராசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறவிருக்கின்ற பேச்சு வார்த்தைகளின் போது முஸ்லீம்களும் தனித்தரப்பாகப் பங்கேற்பதற்கு ஜனாதிபதியும் விடுதலைப்புலிகளும் இணங்க வேண்டும். என்று அக்கரைப்பற்று சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் முன்னாள் கிராமத் தலைவருமான சிரேஷ்ட சட்டத்தரணி அல்.ஹாக் எஸ்.எம் மொஹிடீன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தகவல் தருகையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பொதுத் தேர்தல் காலகட்டத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்ட பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்படும் போது முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி கூட வடக்கு-கிழக்கு வாழ் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணப்படும் என்று கூறினார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூட சில நிபந்தனைகளின் அடிப்படையில் முஸ்லிம் தரப்பினரின் பிரதி நிதித்துவத்திற்குச் சந்தா்பம் வழங்கப்படும் என்று கூறியுள்ளார். அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் கலந்து கொள்ளவிருக்கும் எதிர்காலப் பேச்சுவார்த்தைகளின்போது முஸ்லிம்கள் தரப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பங்குபற்றுவதற்கான சந்தா்ப்பத்தை சலுகையாக அல்லாமல் உரிமையாக வழங்க வேண்டும்.

ஒரு சமூகத்தின் பிரச்சினைக் குத் தீர்வு ஏற்படும்போது அது மற்றுமொரு சமூகத்தின் பிரச்சினைக்கு ஆரம்பமாக அமையக்கூடாது.

நாங்கள் எல்லோரும் மனித நேயப்பண்புகளுக்கு மதிப்பளித்து புதியதொரு மனித சமுதாய விடியலுக்கு ஏற்றவகையில் மனம் விட்டுப்பேசி சகல தரப்பினரும் தத்தமது ஜனநாயக உரிமைகளுடன் வாழ சகல பிரிவினரும் இதய சுத்தியுடன் பணியாற்ற முன் வரவேண்டும். என்றும் சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுப்பதாக அதன் தலைவர் எஸ்.எம் மொஹிடீன் தெரிவித்துள்ளார்.

# தொடரும் கொலைகளால் மீண்டும் மூளுமா யுத்தம் மக்கள் சஞ்சலம்

சிவம் - பாக்கியநாதன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் யுத்த சூனிய பிரதேசமான வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் 14ம் திகதி 11.00 மணிக்கு ஸ்ரீலங்கை படைத்தரப்பிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுமிடையிலான சந்திப்பொன்று இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் ·குழுவினரின் தலைவர் மேஜர் டொன் பியூறு ஹொவ்டே தலைமையில் நடைபெற்றது.

படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக மட்டக்களப்பில் இடம்பெற்ற தன்னாமுனையில் இரு புலி உறுப்பினர்களின் துப்பாக்கிச் சுட்டுக் கொலை, தாண்டலின் வெளியில் இராணுவ புலனாய்வு உத்தியோகத்தரின் கொலை, முதலாவது லேக் வீதியில் இடம்பெற்ற அதிரடிப்படை முகாம் மீதான கிரனைட் தாக்குதல் என்பனவும் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசமான முள்ளாமுனை தாக்கப்பட்ட கொலைச் சம்பவங்கள் பற்றி ஆராயப்பட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டு/அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ், பிரதி விசேட தளபதி ராம், பிராந்திய அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட தளபதி ஜனார்த்தனன், ஜெயந்தன் படையணித் தளபதி ஜெயந்தன், புலிகளின் சமாதான செயலகப் பிரதிப் பணிப்பாளர் பவானந்தனம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இராணுவத் தரப்பில் 23ஆவது படைப் பிரிவுத் தளபதி பிரிகேடியர் வி.விஜயகுணவர்த்தன, 233ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேணல் லக்சிறி அமரதுங்க, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதிவாகரை, விசேட அதிரடிப் படை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்தின ஆகியோரும் கலந்துகொண்டனர். புலிகளும், இராணுவத்தினரும், பொலிசாரும் இணைந்து செயற்படுவது என்றும், 14 தினங்களுக்கு ஒரு முறை கூடி ஆராய்வதென்பதும் சந்தேகத்திற்கிடமானவர்களை போராளிகள் பொலிசாருக்கு அறிவித்தால் கைது செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள மட்டக்களப்பு புதூர் விபுலானந்தா வீதியில் அமைந்துள்ள பைசிக்கிள் திருத்தும் நிலையத்திற்கு முன்பாக 14-05-04 நள்ளிரவு 12.30 மணியளவில் இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினரும் ஒரு பொலிஸ்காரரும் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட வீதி ரோந்தின் போதே இனம் தெரியாதோரால் மேற்படி சம்பவம் இடம் பெற்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அழகரத்தினம் -லிங்கராசா (வயது 34), இராணுவத்தைச் சேர்ந்த சீனி முகம்மது ராசிக் (வயது -24), கெட்டியாராச்சி விதானகமஹே துக்த்மா (வயது 24) திசாநாயக்க பிரியங்கா அபேசிங்க (வயது 30) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

இராணுவம், பொலிசார் இணைந்து நடாத்திய தேடுதலின் போது எவரும் கைது செய்யப்படவில்லை. மட்டு நகரில் அடிக்கடி ஏற்படும் வெடிச் சத்தங்கள் மீண்டும் ஓர் யுத்தம் மூளுமா? என மக்கள் கவலையடைந்து சஞ்சலப்படுவதை அவதானிக்க முடிகிறது.

# செந்தணல் வார இதழ் நடாத்தும் பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை ரீதியான போட்டிகள்

செந்தணல் வார இதழ் தனது ஓராண்டு நிறைவையொட்டி பாடசாலைகளுக்கிடையிலான பின்வரும் போட்டி நிகழ்வுகளை அகில இலங்கை ரீதியாக நடாத்தவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாட்சாலைகள் (பகுதி 2) ல் உள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் சிபார்சுடன் 30/06/2004 ம் திகதிக்கு இடையில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்களுடன் பங்கு பற்றும் மாணவர்கள் விபரத்தையும் இணைத்து அனுப்பி வைக்கவும். இறுதிப்போட்டிகள் ஆடி மாத நடுப்பகுதியில் நடைபெறும்.



**(பகுதி - 1) நிகழ்ச்சி நிரல்**

- கவிதை (எழுதுதல்) - (பிரிவு - 1) 1) பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர்
  (பிரிவு - 2) 2) பதினாறு வயதிற்கு மேற்பட்டோர்.
- சிறுகதை எழுதுதல் - (பிரிவு - 1) 1) பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர்.
  (பிரிவு - 2) 2) பதினாறு வயதிற்கு மேற்பட்டோர்
- பேச்சு - (பிரிவு - 1) 1) பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர்.
  (பிரிவு - 2) 2) பதினாறு வயதிற்கு மேற்பட்டோர்

(போட்டிக்கு முன் தலைப்புக்கள் தரப்பட்டு பதினைந்து நிமிடங்கள் தரப்படும்)

- அபிநயப்பாடல் - பத்து வயதிற்கு கீழ்பட்டோர் (6 -10பேர்) 10 நிமிடம்
- நாடகம் - திறந்த போட்டி
  1) இலக்கிய நாடகம் (25-30 நிமிடம்)
  2) சமூக நாடகம்
- நாட்டிய நாடகம் - திறந்த போட்டி
- வில்லுப்பாட்டு - திறந்த போட்டி (30 நிமிடம்)
- குழு நடனம் (10பேர்) - திறந்த போட்டி (25 நிமிடம்)
- பரத நாட்டியம் (தனி) - திறந்த போட்டி (10 நிமிடம்)
- விவாதம் (6பேர்) - திறந்த போட்டி (30 நிமிடம்)

(போட்டிக்கு முன்பாக தலைப்புக்கள் தரப்பட்டு ஆயத்தம் செய்வதற்கு பதினைந்து நிமிடங்கள் தரப்படும்)

- கிராமியப் பாடல் (தனி) - (பிரிவு - 1) 1) பதினாறு வயதிற்கு கீழ்பட்டோர்.
  (பிரிவு - 2) 2) பதினாறு வயதிற்கு மேற்பட்டோர்

(சுருதிப் பெட்டியுடன் கிராமிய வாத்தியக்கருவிகள் உபயோகிக்க வேண்டும்.)

- தனிப்பாடல் - பத்து வயதிற்குட்பட்டடோர் (5 நிமிடம்)
  (பாரதியார், பலாலியூர் சோமசுந்தரம் பிள்ளை ஆகியோரின் பாடல்கள் மட்டும் பாடலாம்).

(முகபாவனையுடன் கூறுதல் வேண்டும், கையசைவுகள் தவிர்க்கப்படல் வேண்டும்.)

- கதை சொல்லுதல் - பத்து வயதிற்குட்பட்டோர் (3 நிமிடம்)

**(பகுதி - 2)**

- பாடசாலையின் பெயர் .:-......................................
- மாவட்டம் :-......................................
- வலயம் :-......................................
- பங்குபற்றும் போட்டி :- (விபரங்கள் தனித்தனியே குறிப்பிடல் வேண்டும்)......................................
- தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :-......................................
......................................
- (அதிபர்/ஆசிரியர் தொலைபேசி இலக்கமும், தொடர்பு கொள்ளக் கூடிய முகவரியும் :-......................................
......................................

போட்டி விபரங்களை கவனத்திற் கொண்டு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்

- அதிபர் அல்லது பொறுப்பாசிரியரின் முகவரியும், கையொப்பமும் :-
......................................

- போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு, பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
- செந்தணல் பத்திரிகையின் ஓராண்டு பூர்த்தி விழாவில் சிறந்த நிகழ்வுகள் அரங்கேற்றப்படும்.
- இறுதிப் போட்டிகள் கொழும்பில் பாடசாலை ஒன்றில் நடைபெறும்.

தமிழர்கள்வாழ்வு

# ஏமாற்றப்பட்ட தமிழினம்

தொடர் 20

சத்தியா

திரு பிரபாகரன் அவர்கள் ஆயுதக் கையளிப்பைப் பற்றி பேசும் போது போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்டத்தின் நோக்கம் மாறப்போவதில்லை. அத்துடன் தமிழ் மக்களின் எதிர்காலம் பாதுகாப்பு இந்தியாவின் கைகளில் அளிக்கப்படுகிறது என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டார்.

28.07.1987 இல் சமாதானமும் சகஜ நிலையும் ஏற்படுத்துவதற்காக இந்தியா சிறிலங்கா உடன்படிக்கை முரண்பாட்டிலே சம்பந்தப்பட்ட பகுதியினரிடையே நடந்ததல்ல. இருந்த போதும் இந்தியாவினுடைய பிராந்தியப் பாதுகாப்பு நலன்களை உறுதி செய்யும் அதே வேளையில், தமிழர்களின் தலைவிதியையும் தீர்மானித்து. உண்மையில் சிறிலங்காத் தமிழர்களைப் பற்றி செய்யப்படுகின்ற முதலாவது உடன்ப டிக்கை இதுவல்ல. இவ்வுடன்படிக்கையே கடைசியாகவும் இருக்கப் போவதுமில்லை.

இவ்வுடன்படிக்கைகள் தமிழர்களின் பிரதிநிதிகளையோ, தலைவர்களையோ கலந்து அவர்களின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளாமலே செய்யப்பட்டு அவர்களின் தலையில் சுமத்தப்படுகின்றன. எந்தவொரு உடன்படிக்கைகளையும் தமிழர்கள் அவாவை நிறைவேற்றவில்லை. துயரத்தையும் வேதனையையுமே விளைவாகத் தந்தன.



இலங்கை இந்திய ஒப்பந்தமான இராஜீவ் ஜே.ஆர்.ஒப்பந்தம் கைச்சாத்திடப்படல்

**வெறுங்கையாக நின்ற விடுதலைப்புலிகள்மீதும் நியாயமான விடுதலையை நேசிக்கும் தமிழ் மக்களின் மீதும், இந்தக்குழுக்கள் சிறிலங்காவினதும் இந்திய அமைதிப்படையினரதும் ஆசிர்வாதத்தோடு தமது வேட்டையைத் தொடங்கினர்.**

இந்திய இலங்கை ஒப்பந்தம் கூட இத்தகையதே தமிழர்களின் தலையிலே பாறாங்கல்லாக வைக்கப்பட்ட உடன்ப டிக்கையே இது இருந்தாலும் தமிழர்கள் விட்டுக் கொடுத்துத்தான் ஒத்துழைக்க முன் வந்தனர்.

**சித்திரவதைக்குள்ளாக்குவதான காட்டுத்தீ தமிழீழத் தெருவெங்கும் ஆரம்பமாகியது**

உடன்படிக்கை (4:1) வடக்குக் கிழக்கு தமிழர்களின் தாயக நிலம் என ஒப்புக்கொள்ள, உடன்படிக்கை கைச்சாத்தான அடுத்த நொடியிலிருந்தே ஜே.ஆர். ஜெயவர்த்தன, போர் நிறுத்த வாய்ப்பைப் பயன்படுத்தி வடக்குக் கிழக்கில் சிங்களக் குடியேற்றத்தைத் தீவிரப்படுத்த தொடங்கினார்.

போர் நடைபெற்ற காலத்தில் போராளிகளின் ஆயுத எதிர்ப்பால் முடியாமலிருந்த குடியேற்ற முயற்சியை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி கிழக்கில் பெருத்த வேகத்தோடும், முனைப்போடும் செயற்படுத்தினார். தமிழர்களின் மீட்பராக வந்த இந்தியாவிடம் தமிழர்கள் முறையிட்டுப் பார்த்தனர், இந்தியா கண்களை இறுக மூடிக் கொண்டது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பூகோள ரீதியான தொடர்பைத் துண்டிக்கும் இந்த சிங்களக் குடியேற்றங்கள் பற்றி தமிழரின் எதிர்ப்புக்கள் எதுவித பலனையும் கொடுக்கவில்லை சிங்கள ஆயுதப் படைகள் தமது முகாம்களுக்குள்ளேயே இருப்பர் என்று உடன்படிக்கை கூறியது. ஆனால் ஆயுதந்தாங்கிய ஊர்காவலர்களும், சிறப்புக்கொமன்டோக்களும் தமிழ்ப்பகுதிகளில் திரிந்தனர் சட்டவிரோதமாக அரச ஆதரவுடன் நடைபெற்ற கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் பாதுகாப்பு அளித்தனர். வாழ்வில் பாதுகாப்பை இழந்த தமிழ் மக்கள் இந்தியாவிடம் முறையிட்டனர். அது புறக்குடத்து நீராகியது. ஆயுதக்களைவு' என்ற உடன்ப டிக்கைப் பிரிவின்படி விடுதலைப்புலிகள் இந்திய அமைதிப் படையின் பார்வையில், ஜே.ஆரின் பிரதிநிதியான சோபால ஆட்டிக்கலவிடம் ஆயுதங்களைக் கையளித்தனர். ஆனால் முகாம்களுக்குள் போக வேண்டிய அரசின் பொலிசாரும், படையினரும் ஆயுதங்களோடு வெளியே திரிந்தனர். உடன்படிக்கைக்கு கையொப்பத்துடனான ஒப்புதலை அளிக்க மறுத்த விடுதலைப்புலிகளை ஒதுக்கவும் ஒடுக்கவும் நினைத்த "றோ" அமைப்பு தமிழர் நலன்களைத் தமது சுயநலத்துக்காகக் கைவிட்ட ஏனைய தமிழ்க் குழுக்களின் கைகளிலே பாரிய ஆயுதங்களைக் கொடுத்து வீதியிலே தம்மோடு நிறுத்திக் கொண்டனர்.

வெறுங்கையாக நின்ற விடுதலைப்புலிகள்மீதும், நியாயமான விடுதலையை நேசிக்கும் தமிழ் மக்களின் மீதும், இந்தக்குழுக்கள் சிறிலங்காவினதும் இந்திய அமைதிப் படையினரதும் ஆசிர்வாதத்தோடு தமது வேட்டையைத் தொடங்கினர். விடுதலைப்புலி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் நடுத் தெருவில் சுட்டுக்கொல்லப்படுவதும் சித்திரவதைக்குள்ளாக்குவதுமான காட்டுத்தீ தமிழீழத் தெருவெங்கும் ஆரம்பமாகியது இவை உடன்படிக்கையின் உயிர்ப்புநேர்மைக்கும், நோக்கத்திற்கும் ஊறுவிளைவிக்கின்றதென்பதை பல முறை சுட்டிக்காட்டினாலும் அவையாவையும் சாத்தனின்முன் படிக்கப்பட்ட வேதமாக பயனில்லாமற் போனது.

*தொடரும்.*

## அமெரிக்கா இலங்கைக்கு யுத்தக்கப்பல் அன்பளிப்பு

(அலுவலக நிருபர்)

இலங்கை கடற்படையினருக்கு அமெரிக்கா யுத்தக்கப்பல் ஒன்றை வழங்கியுள்ளது. "கறேஜஸ்" என்று அழைக்கப்படும் இந்த யுத்தக் கப்பலை கடந்த 35 வருடங்களாக அமெரிக்கக் கடற்படையினர் யுத்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத் தியுள்ளனர்.

இதனைத் திருத்துவதற்கான செலவினை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. சுமார் 7 மில்லியன் ரூபா இக்கப்பலை திருத்துதற்கு செலவாகும் என கூறப்படுகிறது. ஜூன், ஜூலை மாதப் பகுதியில் இக்கப்பல் இலங்கைக்குக் கொண்டு வரப்படலாம் எனத் தெரிய வருகிறது.

சமீபத்தில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்த வெளி விவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் இந்தக்கப்பலை பார்வைிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## திராய்க்கேணியில் தொடரும் அவலம்

அம்பாறை கரையோரப் பிரதேசத்திலுள்ள திராய்க்கேணி தமிழ் கிராமம் அடிக்கடி வன்செயலுக்கு இலக்காகி வருகிறது. சுற்றிவர ஏனைய இனக் கிராமங்களால் சூழப்பட்ட இக்கிராமம், 1990ல் பாரிய இழப்பைச் சந்தித்தது. 45 தமிழ் மக்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர்.

அண்மையில் ஒரு கோஷ்டி நள்ளிரவு வேளையில் முகமூடியுடன் வந்து திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். இது தொடர்பாக அக்கரைப்பற்றுப் பொலிஸில் மக்கள் முறைப்பாடு செய்ததையடுத்து ஊருக்கு காவல் போடப்பட்டது.

ஒரு வாரகாலம் தொடந்த பீதி தற்போது தணிந்துள்ளது மக்கள் தற்காலிக அமைதி வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அம்/நிருபர்



# தேவை தேவை ஆங்கில அறிவு வேண்டாம் வேண்டாம் ஆங்கில மோகம்

*தொடர்ச்சி...*

இந்திய நாட்டு எழுத்தாளர்களும், முக்கியமாக இரவிந்திரநாத்தாகூர், சரோஜினிநாயுடு, ராஜராவ், ஆர்.கே. நாராயணனி, அனிதா தேசாய், விக்ரமசேத் முல்க் ராஜ் ஆனந், அருந்ததிரோய் போன்றோர். ஆங்கிலத்தில் எழுதி எமது உலகை உலகுக்கு காட்டியவர்கள் ஈழத்திலும் அழகுசுப்புரமணியன், சாந்தன் என தமிழர்களும், புண்ணியகாந்தி, யஸ்மின், ராஜீவ, லக்தா, வற்றிக்பொன்னான்டோ என சிங்களவரும் உள்ளனர். குறிப்பாக ஆங்கிலத்தைப் படித்து உலக அறிவைப் பெறுவது என்பது ஒன்று, ஆங்கில மோகத்துள் அமிழ்ந்து எம் பண்பாட்டையே மறப்பது இன்னொன்று, ஆங்கிலம் படித்தமைக்காக யாரும் சிறப்புரிமை பெறுவதோ, படிக்காதவர்கள் சிறப்புரிமை அற்றவராவதோ, என்ற பேச்சுக்கே இங்கு இடமிருக்கக்கூடாது. இந்நாட்டில் இரு பெரும் பிரிவுகளாக ஆங்கிலம் படித்தவர்க்கம், மற்றும் படிக்காத வர்க்கம் என, பிரிவுகள் இருக்கக்கூடாது. ஆயினும் அந்த அறிவினூடாக நமது தேசத்தைக் கட்டி எழுப்பும் கைங்கரியத்திலேயே நாம் கவனம் செலுத்த வேண்டும், ஆங்கில அறிவு என்ற கருவி மூலம் எம்மால் முடிந்த அளவு எமது சூழலை உயர்த்தப்பாடுபட சம்மந்தப்பட்ட அனைவரும் முன்வர வேண்டும்.

கிராமப்புறங்களில் ஆங்கிலக்கல்வியை முன்னெடுக்க ஆசிரியர்கள் இல்லை. இதனை நிவர்த்திசெய்ய எந்தவிதமான ஆக்கபூர்வமான திட்டங்களும் அரசுகளிடம் இருந்ததில்லை. புதிய அரசாங்கம் ஆங்கில ஆசிரியர்களை உருவாக்கும் திட்டமொன்றை தீட்டி நடைமுறைப் படுத்த முன்வர வேண்டும்.

குறைந்த பட்சம் க.பொ.த. சாதாரணதரம் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்று (C) உயர்தரம் சித்தியாகிய மாணவர்கள் (35) தெரிவு செய்து ஒரு வருட துரித கற்பித்தல் முறையை (Crash Program) மேற்கொண்டு சிறந்த முன் பயிற்சியை வழங்கி பாடசாலைகளுக்கு அனுப்பலாம். பின்னர் 2/3 வருட சேவையின் பின்னர் பயிற்சிக்கல்லூரிக்கு

**பேராயிரவர்**

அனுமதிக்கலாம். இது ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்படவேண்டும்.

அப்படி அல்லாது, ஆங்கில மொழியில் படித்த தலைமுறை வரும் மட்டும் காத்திருப்பது பொருத்தமில்லை ஏனெனில் சிறப்புத்தகைமை பெற்றோர் இரு மாங்காய் அடிப்பது போன்று வேறு தொழிலை நாடிச் சென்று விடுவர். வேற்றுநாட்டு இறக்குமதியாக ஆசிரியர்களை வருவித்தலும் நடைமுறைக்கு ஒவ்வாத விடயம். எனவே ஒரே கல்லில் இரு மாங்காய் அடிப்பது பற்றாக்குறையையும் நீக்கலாம். கல்விக்கல்லூரி ஊடாக 3வருடத்தில் வெளிவரும் ஆங்கில ஆசிரியர் எண்ணிக்கை மிகக்குறைவு. பல்கலைக்கழக பட்டம் பெறும் ஆங்கிலப் பட்டதாரிகள் ஒரு கையளவு எண்ணிக்கையே. அவர்கள் பாடசாலை மட்டக்கற்பித்தலுக்கு இணைவதும் சாத்தியம் குறைந்த ஒன்று தான்.

இந்நிலையில், சாசுவதமான அணுகுமுறையை கடைப்பிடிப்பதன் மூலம் ஆங்கிலக்கல்வியின் முன்னேற்றத்துக்கு வழிகாட்டியவர்கள் ஆவோம். சகல மட்டத்திலும் இது பற்றிய தெளிவும். புரிந்துணர்வும் அவசியம் வேண்டப்படுகிறது.

திக்குகள் எட்டும் செல்வீர் - கலைச்
சொல்வம் அத்தனையும்
- கொணர்ந்திங்கு சேர்ப்பீர்
பாரதியார்.

# இலக்கிய சங்கமம்

## நடீன் கார்டிமருடன் ஓர் உரையாடல்

நடீன் கார்டிமர் தென் ஆஃபிரிக்க எழுத்தாளர். 1991 "My Son's Story" நாவலுக்காக நோபல் பரிசு பெற்றவர். வெள்ளை இனத்தவராயினும், கறுப்பர்களின் அவலங்களையும், போராட்டங்களையும், விழுமியங்களையும் திறந்த மனத்துடன் சித்தரிப்பவர் 'நல்லதொரு நாவல் சிறந்த சமூக ஆவணமாகும்' என்று கருதுபவர். 1950 களில் எழுதத் தொடங்கியவர் இன்றளவும் எழுதி வருகிறார். எழுத்தாளரின் சுதந்திரத்திற்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். 'மானுடத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் மானுடப் பிரக்ஞையை அதன் அனைத்து மர்மங்களுடனும்' வடித்திடும் பேராசை கொண்டவர்.

இவரின் 'மகனுக்கு தந்தை எழுதிய கடிதம்' என்னும் படைப்பு தமிழில் 'ங்' இதழில் (மொழி பெயர்ப்பு திலகவதி) வெளிவந்துள்ளது.

இந்த உரையாடல் 'Interviews With Contemporary Novelists. Diana coopar elark/ Mac Millan, 1986' - நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது . தமிழ் வடிவம் வா.தேவதாஸ்.

டயானா- மற்ற எழுத்தாளர்கள் தென் ஆஃரிக்காவிலிருந்து வெளியேறிவிட, நீங்களோ, தங்கி விட்டீர்கள். "அயல் நாடுகளின் வேர்கள், எவ்வளவுதான் விரும்பத்தக்கதாயிருப்பினும் ஒரு தாவரத்திற்கு உகந்ததல்ல" என்றீர்கள். வெள்ளை இனத்தின் இலக்கிய வடிவங்களை உள்வாங்கிக் கொள்ளாமலேயே கறுப்பர் தம் வளமான வாய்மொழி மரபுடன் சேர்த்துக் கொண்டிருப்பது பற்றியும் பேசியிருக்கிறார்கள். கறுப்பர் பண்பாடு ஒடுக்கப்பட்டதால் கறுப்பர்கள் பாதிக்கப்பட்டனர். அவர் மரபுகளிலிருந்து எதனையும் சுவீகரித்துக் கொள்ளாது போன வெள்ளையரும் இப்போது பாதிக்கப்படுகின்றனர். உங்கள் எழுத்தில் அம்மரபின் காரணமாக நீங்கள் நன்மையடைந்ததுண்டா?

கார்டிமர்- நடையில் இல்லை- தென் ஆஃப்ரிக்காவில் எழுதப்பட்ட இலக்கியம் இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

டயானா- **கேள்வி ஞானத்தில்....?**

கார்டிமர் - நிச்சயமாக, ஆஃப்ரிக்க மரபிலிருந்து எழுந்த வெவ்வேறு அணுகுமுறைகளால் பயனடைந்திருக்கிறேன் . நமது தேவைகளில் நாமெல்லாம் அடிப்படையில் ஒன்றாயிருக்கிறோம் என்றே நம்புகிறேன். ஆனால் இத் தேவைகள், வெவ்வேறு சமூகங்களாலும் வெவ்வேறான வகையிலே, உருவாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. இதனுடன் தொடர்பு கொள்வது செழுமைப்படுத்தும், உதாரணமாக இத்தாலியக் கிராமம் ஒன்றில் வசிக்கும் போது, அங்குள்ள மக்கள், குழந்தைகளை எப்படி வளர்க்கின்றனர். காதல் வயப்படுகையில் இளைஞர்கள் எப்படி நடந்து கொள்கின்றனர், என்பது போன்ற வாழ்வின் சித்திர விசித்திரங்களை காண்பதில் ஒரு வசீகரம் இருக்கிறது. அனைத்தும் ஒன்றையே வெளிப்படுத்துகின்றன. கலைப் பிரிவுகளெல்லாம், பிறப்பது, வளர்வது, பெற்றெடுப்பது, இறப்பது என்பவற்றைத் தாண்டியதான வடிவமொன்றை கண்டெடுத்து வாழ்வில் விளக்க முடியாததை விளக்க முற்படுகின்றன.

**தொகுப்பு: தயாளன் சி.செபனாயகம் . சட்டத்தரணி, கொழும்பு.**

டயானா - Hostages- "The Personal Testimony of a sovie Jew" நூலின் ஆசிரியரான கிரிகரி ஸ்விர்ஸ்கி அரசியலற்ற எழுத்தாளர்கள் அமெரிக்க இலக்கியவாதிகளால் கண்டறியப்பட்டவர்கள் என்றார் என்னிடம். எழுத்தாளர்கள் அரசியல் சார்புடையவர்கள் என்பதை ஏற்பீர்கள் என்றே நினைத்தேன்.

கார்டிமர் - ஆம், நாவலாசிரியரும் சிறுகதையாசிரியரும் தம் சமூகத்தில் ஆய்வுரையை பொதித்துவைக்கின்றனர். கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தீவிர இடது சாரி விமர்சகர்கள். பால்ஸாக்கின் "Human emedy" நாவலுக்கு முக்கியத்துவமளிப்பது அதற்குச் சான்றாகும். பால்ஸாக் அரசியல் ரீதியில் மிகவும் பிற்போக்கான பழமைவாதி. ஆனால் தனது "Human emedy" நாவலிற் தான் அங்கமாயுள்ள சமூகம் குறித்த உண்மையானதும் ஆச்சரியகரமானதுமான சித்திரத்தை தந்தார். அக்காலகட்டத்து பூர்ஸுவா சமூகத்தின் கோளாறு மற்றும் அச்சமூகம் தன் அழிவுக்கான வித்துகளை தன்னகத்தே கொண்டிருப்பது குறித்து தன்னிகரற்ற விவரிப்பை அளித்ததாக இடதுசாரி விமர்சகர்களும் சோஸலிச விமர்சகர்களும் கருதினர். நல்லதொரு எழுத்தாளன் தன் சமூகத்திலுள்ள உண்மையை வெளிப்படுத்தாதிருக்க இயலாது. அதன் காரணமாக உண்டாகும் அரசியல் உணர்தல், அவனை அரசியல் சார்பாளனாக்குகிறது.

- தொடரும்....

## இராவணேசுவரன் இந்திர உலா

### நூல் அறிமுக விழா

22-05-2004ம் திகதி கடந்த சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் பேரறிஞர் ச. பாலசுப்பிரமணியம் எழுதிய "இராவணேசுவரன் இந்திர உலா" என்னும் நூல் அறிமுகவிழா இடம் பெற்றது. இன்நிகழ்சில் பேராசிரியர் சந்திரசேகரன் அவர்கள் தலைமை தாங்கிச்சிறப்பிக்க முதன்மை விருந்தினர்களாக கௌரவ பெ. ராதாக்கிருஷ்ணன் (பா/உ) அவர்களும், கௌரவ மனோகணேசன் (பா/உ) அவர்களும் கலந்து கொள்ள, சிறப்பு விருந்தினராக உயர் திரு. கா. சண்முகலிங்கம் (மேலதிக செயலாளர் - புனர்வாழ்வு அமைச்சு) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## சுவாமி விவேகானந்தர்

**பாத்தும்மா ரைஹனா, திருகோணமலை.**

ஆனால் உலகமறியாத தபோதனராகத் திகழ்ந்து பரமஹம்சரின் தெய்வக் குரலைக் கேட்டார். அதற்குப் பணிந்து பேசும் போது கேட்போர் யாவரையும் பெரும் வியப்பில் ஆழ்த்திவிட்டார். இவரை ஆட்கொண்ட நெடுந்தகையோராகிய இவருடைய குருநாதர் தாம் பேசினார்.

இப்போது பற்பல மடங்கள் உலகம் முழுவதும் தோன்றிவிட்டன. பணத்தை வெறுத்த இராமகிருஷ்ணரின் சார்பில் பணம் வந்து குவிகிறது. நல்ல இடத்திற் திரண்டு வரும் பணம் தக்கபடி விநியோகம் செய்யப்படும். என்ற உண்மையை இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த சந்நியாசிகள் தங்கள் இடையுறா பொதுநல உழைப்பால் மெய்ப்பித்து விட்டார்கள். அன்னார் ஆற்றிவரும் சிறந்த பணிகள் போற்றிப் புகழ்வதற்குரியவை பரமஹம்சர் ஏற்றி வைத்த ஞான தீபத்தை காலப் புயல் தாக்கி அழியாமற் காத்து வரும் அவர்களுடைய தெய்வப் பணியாம் ஒளி, நீண்ட காலக்கூடத்தில் எப்போதும் சுடர் விட்டுக் கொண்டே இருக்கும்.

அனுமனைத் தமக்கு லட்சியமாகக் கொண்ட விவேகானந்தர் பல துறைகளிற் சிறந்து விளங்கிய சான்றோன் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. விவேகானந்தர் இசைக்கலையில் நல்ல தேர்ச்சியுள்ளவர் இந்த இயல்பை இவா் தம் தந்தையிடம் பெற்றார் கல்விக் கடலில் ஆழம் கண்டவர் வெறும் வாசா கைங்கரியம் இவரிடத்தில் இல்லை. தாம் கண்ட உண்மையைத் தம் வாழ்க்கையில் நடத்திக் காட்டிய சான்றோர். இவர் மக்களின் வறுமையை அகற்ற வேண்டும் என்று இடையறாது ஓதுவார். சிக்காகோவில் ஒரு செல்வர் வீட்டில் படுத்துறங்க நேர்ந்தது. அவர் தமக்கு அளிக்கப்பட்ட உயர்ந்த படுக்கையில் அமர்ந்து துயிலாது, தரையில் படுத்தார். துயருறும் தம் நாட்டு மக்களை நினைத்து கண்ணீர் வடித்து அன்றிரவு முழுவதும் கண் அயராது உள்ளம் வெதும்பி மனம் நொந்து போனார். ஏழை மக்கள் பால் இவர் காட்டிய அன்பும் அளப்பரியது.

சாதிப் பிணக்குகளை அறவே வெறுத்தார் எல்லாச் சமயங்களும் ஆண்டவன் அருட் கோவிலுக்கு அழைத்துச் செல்லும் தூய நெறிகளெனக் கண்டார். இவர் ஓர் உண்மையான சீர்திருத்தக்காரர், உயர் ஞானத்தால், சிறந்த பக்தியால் தெய்வப் பணியால் மனிதன் முன்னேறவேண்டும் என்று வற்புறுத்திப்பேசுவார். ஞானயோகம், பக்தி யோகம், கரும யோகம், ராஜ யோகம் ஆகியவற்றைப் பற்றி நூல்கள் இயற்றியிருக்கிறார். இவை சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.

சொல்லின் செல்வர் இவர் என்பதை இவருடைய சொற்பொழிவுகளால் நன்கு உணர்கின்றோம். தம்முடைய காலத்தை இவர் தியானத்தில் கழித்திருக்கக்கூடும். ஆனால் நாடு சீர் குலைந்து போவதை நினைத்து நாட்டுக்குப் பணி செய்ய வேண்டும் என்று உறுதி பூண்டார். அல்லும் பகலும் நாட்டுக்குப் பணி செய்த இந்த ஞான வீரர் 1902ஆம் ஆண்டு ஜுலை மாதம் விண்ணுலகம் எய்தினார்.

அறிவாளிக்குள் சிறந்த அறிவாளியாய், தபோதனர்களுக்குள் உயர்ந்த தியாகியாய், தேசியத் தொண்டராய், அனுபூதிச் செல்வர்களுள் செந்நெறிச் செல்வராய் திகழ்ந்த இப்பெரியாரை ஒரு முழு மனிதர் என்று உலகம் கேட்கச் சாற்றலாம்.

வீரமும், தியாகமும் இவருடைய அறிவுரைகளும் அருஞ்செயல்களுக்கும் ஆதாரம் வானுலகில் இடமில்லை என்று சாற்றிய நம்பண்டைச் சான்றோர்களின் உயர் உபதேசம் தான் விவேகானந்தர் வடிவம் பெற்றது.

- முற்றும

## நூல் விமர்சனம்

# நெஞ்சுறுத்தும் கானல் இரு நாடகங்கள்

நாடகம், வாழ்க்கையை ஒரு அரங்கில் அமைத்து பிரதி செய்து காட்டப்படுகின்ற ஒரு வடிவம். இன்றைய நவீனகால நாடகங்கள் வாழும் காலத்தின் சூழ்நிலை சமுதாயச் சீரழிவுகள் போன்ற யாதார்த்த நிலையினை எடுத்தியம்பக் கூடியன. அந்த வகையின் வரிசையிலேயே நாடகாசிரியர் தே. தேவானாந் அவர்கள் தனது "நெஞ்சுறுத்தும் கானல்", "முடக்கம்" என்ற இரு நாடகங்களை அமைத்திருக்கின்றார்.

ஆசிரியர் தே. தேவானாந்தின் "நெஞ்சுறுத்தும் கானல்" என்ற இந்த நூலானது "நெஞ்சுறுத்தும் கானல்", "முடக்கம்" ஆகிய இரண்டு நாடகங்களையும் இணைத்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

நாடகங்களை நேரில் காணும்போதே காட்சிகள் கண்ணுக்கு விரிய, ஓசைகள் காதிற்கு விருந்தாகும். ஆனால் இங்கு தே. தேவானந் அவர்களின் நெஞ்சுறுத்தும் கானல் என்ற நாடக நூலினை வாசிக்கும் போதே காட்சிகள் எம்மனக் கண்முன் விரிகின்றது. அப்படிச் சிறப்பான முறையிலே நூலினை அமைத்திருக்கின்றார்.

இந்நூலில் இடம் பெறுகின்ற நாடகங்களின் பாத்திரங்கள் தெளிவாகவும் கச்சிதமாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றன. அவர்களால் பேசப்படுகின்ற வார்த்தைகள் படித்தவர் முதல் பாமர மக்கள் வரை அனைவரும் பேசக் கூடியதான நடைமுறை இலகுப் பேச்சுத் தமிழில் ஆக்கப்பட்டுள்ளது.

இந் நாடகங்களின் கருப்பொருள் யுத்த அடாவடித்தனங்களால் தமிழிர்களுடைய வாழ்வும் வாழிடங்களும் சூனியமாகவும், உயிர்பறிக்கும் களமாகவும் அமைந்திருப்பதையும், தமிழர் வாழ்வு நிலை எப்படியிருக்கிறது என்பது பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

நெஞ்சுறுத்தும் கானல் என்ற நாடகத்தில் இடம் பெற்றுள்ள "சிங்கம், நரி" இடம் பெறுகின்ற காட்சியானது தமிழர் இலங்கையில் எப்படி வாழ்கின்றார்கள், அவர்கள் எப்படி சீரழிக்கப்பட்டு ஏமாற்றப்படுகிறார்கள். சிங்கள அரசு பகடைக் காயாக தமிழரை உருட்டி உருட்டி விளையாடுவதை சிறப்பான ஒரு குறியீட்டு விளக்கமாக சித்தரிக்கப்படுகிறது.

அத்துடன் காட்சிகளுக்கு ஏற்றவாறு பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன, அவை இதயத்தை மட்டுமல்ல ஆன்மாவையே உருக வைக்கின்றன. இங்கே ஒரு சில பாடல்வரிகள்,




*வானும் கனல் செரியும்*
*மண்ணும் கனல் எழுப்பும்*
*கானலில் நான் நடந்தேன் - நிழல்*
*காணும் விருப்பத்தினால்,*
*ஊனுடல் அன்றி மற்றோர் நிழல்*
*உயிர்க்கில்லை அங்கே*
*ஆன திசை முழுவதும் - தணல்*
*அள்ளும் பெருவெளியாய்.*

நூல் முழுமையும் வாசிக்கும் வாசகர்களை வாழ்வியலோடு, வாழ்வியல் அவலங்களோடு இணைப்பது மாத்திரமின்றி, வாழ்வது போன்ற ஓர் உணர்வினையும் ஏற்படுத்துகின்றது. இந்நூல் இன்றைய காலத்தவர்க்கு மட்டுமன்றி, எதிர்காலத்தவர்க்கும் நாம் வாழ்ந்த சூழ்நிலைகளை எடுத்துக் கூறும் ஒரு நல்ல இலக்கியப் பதிவாக அமைந்துள்ளது.

A. வாணிஜெயா

**தணலின் நூல்விமர்சனப் பகுதியில்**

உங்கள் நூல்களும் இடம்பெற வேண்டுமாயின் உங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளைச் செந்தணலிற்கு அனுப்பி வையுங்கள்

# கனவுகளும் பலன்களும்

கனவுகள் எவ்வாறு ஏற்படுகின்றன? மனிதனின் மூளையானது விழித்திருக்கும் போது புலனுறுப்புகளின் வாயிலாக எண்ணிலடங்காத் தகவல்களை பதித்து



வைக்கின்றது. இரவில் உறங்கும் போது மூளை அந்த தகவல்களை சாவகாசமாக வகை செய்து ஒழுங்குபடுத்துகின்றது. இவ்வாறு ஒழுங்குபடுத்தும் போதுதான் அவை நமது மனத்திரையில் ஒரு தொடர்ச்சி இல்லாமல் வந்து போகின்றன. இதையே நாம் கனவு என்கின்றோம்.

கனவுகள் எமது வாழ்வில் ஏற்படப் போகும் நிகழ்வுகளை முன்னறிவிப்பதாக நம் முன்னோர் கூறியதோடு, அதனால் ஏற்படும் பயத்தையும் பதட்டத்தையும் குறைக்கவும் தவிர்க்கவும் பல பரிகார முறைகளையும் கூறிச் சென்றுள்ளனர். அந்த வகையில்,

## கனவு என்பது என்ன?

மனிதர்களின் அன்றாட நடவடிக்கைகளில் தூக்கமும் ஒன்று. அது ஓர் உடற்கூறியல் நிகழ்வு, அதாவது இரத்தஓட்டம், உணவுச் செரிமாணம், வளர்சிதை மாற்றங்கள் போன்று தூக்கமும் உடலின் ஓர் இயற்கையான செயற்பாடாகும் மூளை ஆரோக்கியமாக இருக்க தூக்கம் மிக அவசியம்.

அறிவியல் அறிஞர்கள் தூக்கத்தைப் பல நிலைகளில் பிரித்துள்ளனர். அதில் 'அதிவேகக் கண் அசைவுத்தூக்கம்' என்பது ஒருவகை. இவ்வகைத் தூக்கத்தின் போதுதான் பலவகையான மனத்தூண்டுதல்களும், உணர்வுத் தூண்டுதல்களும் ஏற்படுகின்றன.

இவ்வகையான தூண்டுதல்களை நகரும் படக்காட்சி போல் நாம் உணர்வதையே கனவு என்று சொல்கின்றோம். பொதுவாக நம் தொடர்பாகவும் அல்லது நாம் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்ளும் நிகழ்ச்சிபோலவும், மற்றவர்கள் தொடர்பானதாகவும் அல்லது நாம் பார்வையாளராகப் பார்க்கும் நிகழ்வுகள் போலவும் கனவுகள் எமக்குத் தோன்றுகின்றன. இவ்வாறு ஏற்படும் கனவுகளில் தீயகனவும் நல்ல கனவும் இருக்கும். அவைபற்றியும் அதற்கான பலன் பரிகாரம் பற்றியும் அடுத்துவரும் இதழ்களில் பார்ப்போம்.

- வே. தமையந்திரன்.

"நான் சொன்ன டாக்டரைப் பார்த்தீங்களா?" "பார்த்தேன்"

"நான் சொல்லி அனுப்பினேன்னு சொன்னீங்களா?" "ஆமாம்."

"அதற்கு அவர் என்ன சொன்னார்?"

"முதலில் பீஸை வையுங்கள்! அப்புறம்தான் வைத்தியம்னு சொல்லிட்டாரு."



# தணலின் பூவையர் கருத்தாடல் - 14

குரல :-1

## ஒரு குடும்பத்தில் அதிகமாக உழைப்பவர்கள் ஆண்களா? பெண்களா?

குடும்பம் என்பது ஓர் பல்கலைக்கழகம். இப்பல்கலைக்கழகத்தை நிர்வகிப்பது ஒரு ஆணும் பெண்ணும், பல குடும்பங்களில் குடும்பப்பாரத்தை சமமாகத் தோளிற் சுமப்பது இருவருமேயெனினும், அதிக பட்சமான வேலைப் பழுவைத் திணிப்பது பெண்ணிடம்தான் என்பதே உண்மை. கணவன் மட்டும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் பெண்ணுக்கு வீட்டு வேலைகள், பிள்ளைகளைக் கவனிப்பது, கணவனின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், அன்றாட வீட்டுத் தேவைகளை ஒழுங்கு பண்ணுதல், என்று விடிந்தால் இரவு நித்திரைக்குப் போகுமட்டும் அடுக்கடுக்காய் வேலைகள்.

இருவருமே வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் பெண்ணின் நிலை பரிதாபத்துக்குரியது. கண்வன், குழந்தைகள் என அவர்களது தேவைகள். வீட்டு வேலை, சமையல் வேலை, அதனிடையே வேலை செய்யும் அலுவலகத்தில் செய்ய வேண்டிய வேலைகள், தயார்படுத்த வேண்டியவை எவை என்ற சிந்தனைகள் தலையை உருட்டினாலும் வீட்டு வேலைகளைக் கிரமமாக முடிக்க வேண்டும். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்று பம்பரமாய் சுழல்பவள் பெண்தான். அலுவலக வேலை முடிந்ததால் வீட்டில் மாலை வேலைகள் தொடரும். தன் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக கடும் பிரயத்தனம் செய்பவள் பெண்ணே.

ஆணுக்கு ஒரு வேலை தான். அலுவலக வேலை ஒன்றே. வீட்டு வேலையோ பிள்ளைகளை பராமரிப்பதோ கிடையாதே. மொத்தத்தில் குடும்பத்திற்காக அதிகமாக உழைப்பது பெண்தான் என்பது எனது கருத்து

தொகுப்பு: A. ஜெசி

குரல :-2

ஒரு குடும்பத்தில் அதிகமாக உழைப்பவர்கள் போல ஆண்கள் நினைக்கிறார்கள். ஆனால் நிச்சயமாக அதிக உழைப்பில் ஈடுபடுபவர்கள் ஆண்கள் என கூற முடியாது. நிச்சயமாக பெண்களே தான்.

ஆண்களுக்கு வெளி வேலை ஆதாவது தனது குடும்பத்தை கொண்டு நடத்துவதற்கு உரிய வருமானத்தை ஈட்டுவதற்கான உழைப்பு மட்டும் தான் ஆனால் பெண்களுக்கு அப்படி இல்லை வீட்டை பராமரிக்க வேண்டும், பிள்ளைகளை பராமரித்து அவர்கள் நலனில் அக்கறை கொண்டு உடைகள் துவைப்பது, அதை ஸ்திரி போடுவது மூன்று நேர சமையல், சமைத்த இடம், பாத்திரம் சுத்தம் செய்தல் இவற்றை எல்லாம் செய்பவள் பெண்தானே.

ஆண்களுக்கு எப்போதாவது ஓய்வு கிடைக்கும் ஆனால் பெண்களுக்கு அப்படியில்லை என்றுமே அவளுக்கு வேலை தான்.

நாம் தான் அதிகமாய் உழைக்கிறோம் வீட்டில் பெண்கள் என்ன வெட்டி வீழ்த்துகிறார்கள் என கர்வம் கொள்ளாதீர்கள். அப்படியானால் ஒரு நாள் உங்களால் வீட்டு வேலை, சமையல் வேலை இவைகளை செய்ய முடிகிறதா என்று பாருங்கள் உங்களால் முடியவே முடியாது என்னை விட்டால் காணும் என ஓட்டம் பிடிப்பீர்கள்.

அலுவலகம் போகும் பெண்ணாய் இருந்தாலும் அவள் தானகத்தான் இரு வேலைகளையும் செய்கிறாள். ஆகவே ஒரு குடும்பத்தில் அதிகமாக உழைப்பவர்கள் பெண்களே தவிர ஆண்கள் இல்லை என்பதே எனது முடிவு.

யோ. ஹேமலதா. கரவெட்டி.

# கால்கள் கவனம்

பொதுவாகவே ஒரு ஆணையோ அல்லது பெண்ணையோ எடை போட நினைப்பவர்கள் அவர்களது கால் நகங்க



ளைத் தான் பார்ப்பார்கள். இவற்றை அவர்கள் சுத்தமாக வைத்திருந்தால் இவர்கள் மிகவும் சுத்தமாக இருப்பார்கள், எதையும் எப்பொழுதும் கீளினாக வைத்திருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் என்று கூறுவார்கள். சிலரது கால்களைப் பார்த்தால் "ஆஹா என்ன அழகாக இருக்கிறது எனக்கு இப்படியிருந்தால் எப்படியிருக்கும்" என்று ஏங்கிக் கொள்வார்கள்.

கால்களை அழகாக வைத்திருக்க விரும்புபவர்களிற்கு சில ஆலோசனைகள். தினமும் நீங்கள் படுக்கச் செல்லும் போது கால்களை நன்றாக கழுவி விட்டுச் செல்லுங்கள். உங்கள் கால் நகங்களை அழகாக கவனமாக வெட்ட வேண்டும். தினமும் இரவு வேளைகளில் கால்களிற்கு ஒலிவ் எண்ணை அல்லது வேறு ஏதாவது விற்றமின் E உடைய கிறீம் வகைகளை பூசி வந்தால் காலையில் எழுந்து பார்க்கும் போது கால்கள் பளபளப்பாக இருக்கும்.

சிலருக்கு நீரிழிவு நோய் ஒரு பெரும் தொல்லையாகவே அமைந்து விடுகின்றது. இந்த நீரிழிவு நோய் எமது உடலின் கண், இதயம், சிறுநீரகம் என்ற முக்கிய உறுப்புக்களை நோக்கி நகர்ந்தாலும், பெரும்பாலான நீரிழிவு நோயாளிகளைப் பார்த்தீர்களானால் கால்களில் எற்பட்ட புண்கள் ஆறாமல் பெரும் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 60% மானோர் கால்களை இழக்கின்றனர் என்பது கசப்பான உண்மை.

இந்த நோய் உள்ளவர்கள் கால்களை மிகவும் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். கால் நகங்களை கவனமாகப் பார்த்து வெட்ட வேண்டும். தோல் செருப்புக்களை எப்போதும் அணிந்திருத்தல் நல்லது. புதுச் செருப்புகளை அதிக நேரம் அணிய வேண்டாம். காலில் சிறுகாயம் ஏற்பட்டாலும் உடனே மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவேண்டும். அசட்டைத்தனமாக விட்டால் கால்களையே இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவீர்கள். எனவே நீங்களும் உங்கள் கால்களை பாதுகாத்து ஆரோக்கியமாக வாழுங்கள்.

- ஜெயம




# தணலின் பூவையர் கருத்தாடல்-15



## குடும்பத்தில் விவாகரத்து ஏற்பட முக்கிய பங்கு வகிப்பது ஆண்களா? பெண்களா?

தணலின் பூவையர்களே இது பற்றிய உங்களுடைய புரட்சிக் கருத்துக்களை 100 சொற்களில் தணலின் கருத்தாடலுக்கு அனுப்பி வையுங்கள்.



தணலின் பூவையர்
கருத்தாடல்
த.பெ.இல.1601,
கொழும்பு.
தொ.பே.இல. 011-4715168
தொலைநகல் : 011-4715168

# ஹச்சூ..........தும்மல்




நீங்கள் தும்மும் போது, மணிக்குச் சுமார் 550 கி.மீ வேகத்தில் காற்றை வாயிலிருந்து வெளியேற்று கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஒரு தும்மலின் போது, உங்கள் நாசியிலிருந்து ஒலியின் வேகத்தை விடக் கூடிய வேகத்தில் துளிகள் விசிரப்படுகின்றன. (மணிக்குச் சுமார் 1065 கி.மீ வேகம் அப்பப்பா!) இந்த வேகமானது தரையிலிருந்து வீசும் மிக வேகக் காற்றின் வேகத்தை விடப் பல மடங்கு வேகம் கூடியது என்றால் பாருங்களேன்! அமெரிக்காவின் மவுண்ட் வொஷிங்டனில் 1934 ஆம் ஆண்டில், மணிக்கு 371 கி.மீ. வேகத்தில் வீசிய புயல் காற்றின் வேகத்தைப் பல மடங்கு பின்னே தள்ளி விடுகிறது எமது சாதாரணத் தும்மல் பரவாயில்லையே......

ஒரு கொசுருச் செய்தி "யாரோ எம்மை நினைக்கும் போது தும்மல் அதைக் காட்டி விடுகிறது." எனச் சொல்லுகிறார்களே அது வெறும் புருடா. விஞ்ஞான ரீதியில் அதற்கான சான்றுகள் எதுவுமில்லை.

தகவல்: நிஸாம் மிஸ்கின.வெலிமடை.


# பூக்கள் வாடாமல் இருக்க வேண்டுமா?

முதலில் பூக்களை ஒரு தட்டில் வைத்துக் கொள்ளவும். பிறகு நீரால் அலம்பிய ஒரு பாத்திரத்தை அதன் மீது கவிழ்த்து மூடி விடுங்கள். மறுநாள் காலையில் பார்த்தால் அன்று காலையில் பறித்த பூக்கள் போல அப்படியே புதிதாக இருக்கும்.

# கவிதைக் களம்

## கண்ணிரஞ்சலியுடன் சிந்தியுங்கள்

என் ரத்தங்கள்
கொதிக்கின்றன
நரம்புகள் புடைக்கின்றன
குருதியமுக்கம் குதிக்கின்றன.



எண்பத்தி மூன்றில்
மட்டுமல்ல
தொடர்ந்தும்
தமிழர்மீது அவர்களின்
கைவரிசை.

இன்று கந்தப்பளையில்
எம்மிரு சகோதரங்கள்
பலி
ஜெயராய், விமலநந்தன்
உறவுகளுக்காக
கண்ணீர் அஞ்சலியிடுங்கள்.

அது எப்படி
பாதுகாப்பு படையின்
வேட்டுக்கள் தமிழர் மீது
மட்டும்
தவறுதல் குறி அல்ல
தப்பாத குறிதான் அது
என் கண்கள்
கண்ணீரை அஞ்சலியிடுகின்றன.



நான் சிந்திய
கண்ணீரின் ஈரம்
காயுமுன்
மலையகத் தமிழனின்
எதிர்காலத்துக்காக.

ஒரு முறை
சிந்திக்க வேண்டும்

நாளைய நம் தலைமுறையை
காக்க
நாமும் தலைநிமிரவேண்டும்
சகோதரங்களே
சிந்தியுங்கள்.

எஸ்.பி.பாலமுருகன்

## தூரத்து சினேகிதியே

தூரத்து சினேகிதியே - உனக்கு
மணமாலை சூட எண்ணினேன்
என்னால் முடியவில்லை
நீ கரிகாலன் சேனையில் வாகை மாலை
சூடுவதற்காய் சென்று விட்டாய்.

உன்னை எதிர்பார்த்தேன் - நீ வரவில்லை.
யாரோ சொல்லி அறிந்து கொண்டேன் -
நீ
ஆணையிறவில் மாண்ட செய்தி - மண
மாலையாவது சூட எண்ணிய எனக்கு
மலர்மாலையாவது உனக்கு சூட
என்னால் முடியவில்லை.

சிநேகிதியே உன் கல்லறைக்கு - என்
கண்ணீர் மாலைகளைத் தூவி - உன்
பணி தொடர உந்தன் பாதச் சுவட்டில்
எனது பாதங்கள்.

நெல்லையூர் மு.கி. பிரதீபன்.

## மனிதம்

நிலையற்ற மானிடனே,
ஏன் இந்தப் போட்டிகள்
நிலையற்ற தன்மையினை,
ஈரான் பூமி அதிர்ச்சியும்,
அமெரிக்க காட்டுத் தீயும்,
உனக்கு புலப்படுத்தவில்லையா?
இயற்கை என்றோ ஒரு நாள்
விழுங்கும் வரை - நீ ஏன்
மனிதனை பாதிவழியில்
சமாதியாக்குகின்றாய்?

"நாசா"வே வேண்டாம்
செவ்வாய் ஆராய்ச்சி - ஏனெனில்
வேண்டாம் மனித வேட்டை அங்கே
காலன் கடமை செய்ய மறந்தாலும்
தீட்டுவார் சதி உன் அயலவர்,
வேண்டாம், மனிதன் மனிதன் மீது
செலுத்தும் ஆதிக்க வேட்டை
மானிடனே உன்னில் தேடு
உலக ஒற்றுமையை

வரணியூர் ஜெகதீஸ்
யாழ்பல்கலைக்கழகம்.

## கேட்டுப்பார்!

என் ஆசைகள்
ஒவ்வொன்றும் - உன்
அங்கீகாரத்திற்காக
காத்திருக்க - நீயென்
உணர்வுகளை
உதறித்தள்ளுகிறாய்!
என் கனவுகள்
உன் நினைவினை
சுமந்துநிற்க - நீயென்
இமைகளுக்கு
தடையிடுகின்றாய்!
என் கவிதைகளின்
ஒவ்வொரு வரிகளும்
உன்னைச்சுற்றியே
வருகின்றன - நீயோ!
என் கற்பனைகளை
கொச்சைப்படுத்துகிறாய்.
என் இதயத்துள்ளல்கள்
உன் பெயர் சொல்லியே
துடிக்கின்றன நீயோ
என் காதலை
காயப்படுத்துகிறாய்.
அட என் அன்புக்குரியவனே!
நீயென் மனதை
துன்பப்படுத்துவதாக எண்ணி - உன்
மனச்சாட்சியை
அவமானப்படுத்துகிறாய்.
புரிந்து கொள் என் காதலனே!
என் காதல் தோற்கவில்லை.
உன் மனச்சாட்சியே
தோற்றுப்போனது.
கேட்டுப்பார்!
அதுவே சொல்லும்

மு.யாழவன்
திருகோணமலை

## அன்னை



ஈரைந்து மாதம் சுமந்து
இடர்கள் அனைத்தும் தாங்கி
தன்னுயிரில் என்னுயிரை
உருவாக்கி தந்தவள்.


காடுமலை மேடேறி
கஸ்டங்கள் பல கண்டு
பட்டினியில் வாடினாலும்
பாசம் ஊட்டி வளர்ப்பவள்.

எண்ணற்ற இன்பத்திலும்
எல்லையில்லா துன்பத்திலும்
இணையில்லாத அன்பு தரும்.
இதயமே கொண்டவள்.

இளம் மொட்டு
தமீம் சௌபானா
செட்டிகுளம்.

## தந்தைக்கோர் தாலாட்டு

நிலவுறங்கும் நேரத்தில்
நீயுறங்கிப் போனதால்,
விழியிரண்டும் விண்ணப்பிக்கும்
விசாரணை மனுக்களுக்கு
விலங்கிடப்பட,
ஆயுள்கைதியாய்
இதழிரண்டும் பிரியவில்லை.



தேசமெங்கும்
தேன்மழையாய்
தீந்தமிழ் கவிகளும்,
கற்றோர் பேரவையில்
கருத்தாடற் பொழிவுகளும்
கண்ணைக்கவர்ந்து
மனதை நிறைக்கிறது.

என்ன இது!
பேச்சின் இடையிடையே
பேரானந்தக் கைதட்டல்கள்
ஓ...
இன்று தந்தையர் தினமல்லவா?
தவிக்கிறது என் நெஞ்சம்
பலவருஷம் தவமிருந்து
உயிரூட்டி உருக்கொடுத்து
உதிரமதை வியர்வையாக்கி
உழைத்துழைத்தே
உருக்குலைந்த -
என்னுயிர் தந்தையே
எங்கு சென்றாயோ..?
ஏவலர் பணி செய்ய
ஏற்றமுடன் நாம் வாழும் - நிலைகாண
வானுறையும் தெய்வங்கள்
வரமதை தந்திடவே
வாழ்த்துகள் பல கூற
விழி இரண்டும் விரிகிறது.



உன்
நேசங்கள் நெஞ்சை
நையப்புடைக்கின்றன
நீயிருந்த குடிமனையும்
நீரிழந்த பயிராக
குற்றுயிராக குலைந்து கிடக்கிறது.

அன்று
செல்வம் சேரமறுத்தது நம்மை
கண்ணிறை பாசமுடன்
நெஞ்சுநிறை நேசமுடன்
நீயிருந்தாய் நம்மருகில்

இன்று
செல்வம் செல்ல மறுக்கிறது
ஆனால்
நீயில்லை தந்தையே
இதயம்
நெட்டுருகி
உனக்கோர் தாலாட்டுப்பாட
உருகுது உயிர்
விழி திறந்து பார்
கல்லறை தகர்த்து
தூக்கம் கலைத்து விடு தந்தையே!

சங்ரரமதி



# ஒரு மல்லிகை சிவப்பாகிறது



ஈழவாணி

உதிர்வு 6

குண்டூசி விழுந்தாலும் ஓசை எழும் அமைதி நிலவியது.

சாப்பாட்டு மேமைசயில் இன்ஸ்பெக்ரர் ரத்தீஸ், மனைவி முவீனா, ரத்தீசின் தம்பி முனாப்யாரும் யாருடனும் பேசவில்லை. சாப்பாட்டுக் கோப்பையைப் பார்த்தவண்ணம் தலைகள் கவிழ்ந்தே கிடந்தன.

ரத்தீஸின் மனம் அந்தரப்பட்டுக் கொண்டேயிருந்தது

"சீ இவன் என்ன காரியம் செய்திட்டான், அந்தப் பட்டப் பகலில, எவ்வளவு தைரியம் இவனுக்கு இவனுக் கென்ன வேற பெட்ட கிடைக்காமலா,"

ரத்தீஸிற்கு அன்றுமாலை நிகழ்ந்த சம்பவம் இன்னும் மனக்கண்முன்னே தோன்றி கோபத்தை அதிகரித்தன.

பாக்கில் சைப்ரஸ் மரக் கூடல் பின்புறத்தில் இருந்து கேட்ட பேச்சுக் குரலும், தோலைபேசியில் அடிக்கடி கொலை அறிவிக்கும் பெண்குரலும் ஒரே மாதிரியாக இருக்க அவசரமாய் எழுந்து சத்தம் போடாமல் மறைந்து மறைந்து சென்று ரத்தீஸ் பார்க்க, அதிர்ச்சி வாசகம் அவனை உறைய வைத்தது.

அங்கே பெண்ணின் கைகளை வருடி நெட்டி இழுத்துக் கொண்டிருந்தவன் இன்ஸ்பெக்ரர் ரத்தீஸின் இளைய சதேகாதரன் முனாப்.

ரத்தீஸ்க்கு காலும் கையும் நின்ற இடம்விட்டு அசைய மறுத்தது. என்ன செய்வதென்றே ரத்தீஸிற்கும் புரியவில்லை.

ஆனால் "அவள் அந்தக் குரலுக் குரியவள் எப்படி இவனுடன்..... கடவுளே என்தம்பியையும்....." நினைக்கவே உடலெல்லாம் நடுங்கியது அவனுக்கு.

விஷநாகத்தை மடியில் கட்டிக் கொண்டு நிற்பதைப் போன்ற விபரிக்க முடியாத நிலையில் அவன் தடுமாறினான்.

ஏதேர்ச்சையாக திரும்பிய சத்தியா ரத்தீசைப் பார்த்துவிட தன்னிச்சையாகவே அவனிடமிருந்து விடுபட

"என்னடா..." என அனுங்கிய படியே மீண்டும் கையைப்பிடிக்க அவன் இழுத்துக் கொண்டாள் அவள்.

காரணம் புரியாமல் சத்தியாவின் முகத்தைப் பார்த்த முனாப், அவள் பார்வை வெறித்துக்கொண்டிருந்த திசையைப் பார்த்தான்

பார்த்தவன் திகைத்துப்போய் படார் என எழும்பி நின்றான். தொடர்ந்து அவளும் எழும்ப.

இருவரையும் மாறிமாறி வெறித்தத ரத்தீஸ் மள மள வென திரும்பி நடந்தான்.

"இங்கே கொஞ்சம் குழம்பு விடவா" என்று கேட்டபடியே முவீனா சிறிது குழம்பை அவனது கோப்பையில் ஊற்றினாள்.

ரத்தீஸின் சிந்தனை தீவிரமாக இருந்தது எப்படி... எப்படி அந்த போனில் பேசும் வில்லத்தனமான குரலும் இந்த இவளுடைய குரலும் ஒரே மாதிரியாக இருந்ததே, ஆனா அவளோட குரலுக்கும் தோற்றத்திற்கும் கொஞ்சமும் பொருந்தமில் லாமயல்லவா கிடக்கு.


அடக்க ஒடுக்கமா சுரிதார் போட்டு அதற்கும் மேலாய் மார்பை மறைக்க தாவணியால் போர்த்தி.

தலைமயிரை அழகாய் இரட்டைப் பின்னல் பின்னி, பொட்டு வைத்து, ரத்தீசைப் பார்த்தவுடன் எப்படி நாணிக்கூனிக் குறுகி நின்றாள், அச்சம் மடம் நாணம் பயிற்ப்பு எல்லாத்தையும் அவளே வைச்சிரு ந்தவள்போல - இப்பிடியிருக்க முடியுமா?

என்ன ரத்தீஸ் சாப்பாடு அப்பிடியே கிடக்கு, என்ன சாப்பி டக்குள்ள ஜோசன முதல்ல சாப்பிடும்" என அமைதியைக் கலைத்தாள் முவினா

"க்க... க்சும்" செருமிக் கொண்டே முனாப்பைப் பார்த்துக்கேட்டான் ரத்தீஸ்.

***



மோட்பைக்கை ஸ்ரான் பண்ணினாள் சக்தி.

குடியிருப்பு பிள்ளையார் கோயில் சன்னிதானத்தில் நின்று வணங்கியவள் உள்வீதியை வலம்வந்து பிரசாதத்தை எடுத்துக் கொண்டவள், அப்படியோ நேரத்தையும் பார்த்துக் கொண்டு

"நேரம் சரி ஆனால் இன்னும் சிக்னல் விளவில்லையே" என நினைத்துக் கொண்டே திரும்பியவள் ஓர் இளைஞ னோடு முட்டுப்பட்டுத் தடுமாறி நின்றாள்.

"சொறி... சொறி..." என தன்னை அசுவாசப் படுத்தியவள்

"ஏய் நீரா"

"சொறி நானேதான்" என்றான் புதியவன்

"நவீன் நீர் கோயில் கும்பிடவா? காரியசித்தியா? ரண்டாவதண்டால் வெளிய குளத்தப்பாத்துப் போய்க் கொண்டே பேசுவம்" என்றாள் சக்தி.

இருவ சனத்திடை இருந்து விலகி பேசிக் கொண்டே வெளிநோக்கிச் செல்ல,

வலப்பக்கமாக வந்த சைக்கில் சத்தியுடன் பேசிக் கொண்டே நடந்த புதியவனின் கையிலிருந்த டையறியை உரிவிக் கொண்டு வேகமாய் மிதிக்க, மின்னல் வேகத்தில் புதியவன் சைக்கில்காரனை எட்டிக் கொளரில் பிடித்து நிறுத்தி கன்னத்தில் பாளாரென அறைந்து அவனைத் திருப்பியவன்

அப்படியே ஸ்தம்பித்து நின்றான்.

மலரும்...

# துட்டகாமினியும் தேனூரனும்




துட்டகாமினி வலக்கையில் உறுதியாகப் பற்றிய வாளோடு எச்சரிக்கையாகவே தோப்புக்குள் நுழைந்தான்.

மரத்தோப்புக்குள் மறைந்திருந்து "உஸ்...ஸ்" என்று தன்னை அழைத்தது யாராக இருக்கக்கூடும் என்று மனம் அதிவேகமாகக் கணக்குப்போட்டுக் கொண்டிருக்க ஒவ்வொரு அடியையும் மிக எச்சரிக்கையாகவே எடுத்து வைத்தான்.

நீராழிக்குடிலிலே தன்னைச் சந்திக்க வேண்டிய சூரநிமிலன் அல்லது நந்திமித்திரனாக இருக்குமோ என்று ஒரு கணம் அவன் நினைத்தாலும். அவர்களென்றால் எதற்காக ஒளிந்து நின்று அழைக்கப்போகிறார்கள்? என்று துட்டகாமினியின் அறிவு எதிர்க்கேள்வி கேட்டதால் அந்த எண்ணத்தைப் புறந்தள்ளிவிட்டு கண்களை மிகுந்த எச்சரிக்கையோடு காட்டுக்குட் செலுத்தியபடி மரக்கூடலுக்குட் கால் வைத்த துட்டகாமினி அடுத்த கணம் அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் உறைந்து போய்விட்டான்.

'அசையாதே... அழகான உன் தலை கழுத்திலே நிலைக்க வேண்டுமென்றால்..."

பெரிய கிளையடர்ந்த காட்டு மரத்தின் பின்னாலிருந்து குரல் வந்தது. சற்றுத் தலையைத் திருப்பிய காமினியின் பிடரியை வாள்நுனி ஒன்றுதடவியது.

வீரனான காமினி அதற்குக் கலங்காவிட்டாலும். எச்சரிக்கையை ஏற்றவன் போல அசையாமல் நின்றபடியே "யார் நீ?" என்றான்.

மரத்தின் பின்னால் குரல் கரகரப்பாக நகைத்தது.

"மகனே காமினி... நீ வீரனாகவே இருக்கிறாய்..."

"எப்படி அறிந்தாய்...?"

"கழுத்திலே என் வாள் தடவுகிறது"

"அதற்கென்ன...?"

"கொஞ்சம் அசைந்தாலும் உயிரைக் குடித்துவிடும்"

"அப்படியா?"

"அப்படித்தான்... ஆனாலும் உன் முகத்தில் அச்சத்தைக் காணவில்லை. அதனால்..." குரல் சொல்லி முடிப்பதற்குள் துட்டகாமினி வெகு வேகமாக சுழன்று திரும்பினான்.

திரும்பிய வேகத்திலேயே அவனது வாள் மின்னல்போற் சக்கரவட்டமாகச் சுழன்று பிடரியைத் தொட்டுக்கொண்டு நின்ற வாளை மூர்க்கத்தோடு இடித்தது.

ஆனால் காமினி எதிர்பார்த்ததுபோல மற்றவன் வாள் வானத்தில் பறக்கவில்லை. சற்றே அசைந்தாலும் மீண்டும் மிக இலகுவாகச் சுழன்று காமினியின் வாள் நுனியை ஆசையோடு தொட்டுக்கொண்டு நின்றது.

காமினி ஆச்சிரியத்தோடு பார்த்தான். மரக்கூடலின் அடர்ந்த நிழலுக்குள் ஒரு சிறிய குன்று நிற்பதைப்போல அந்த மனிதன் நின்றுகொண்டிருந்தான்.

போர்வீரனுக்குரிய உடையில், கன்னப் பகுதியின் பெரும் பாகத்தை மறைக்கும் அடர்ந்த மீசையோடு கால்கள் நிலத்தில் அகட்டிப் பதித்தவண்ணம் அவன் நிற்பதையும் அவனது விழிகளில் அச்சமின்மை என்பது சுடர்ந்துகொண்டிருப்பதையும் ஐம்பது அகவை மதிக்கக்கூடியவனாக இருந்தாலும் தளராத உடல்வாகு கொண்டவனாக இருப்பதையும் மலைத்த விழிகளால் அளவிட்ட துட்டகாமினி ஒரு மகாவீரனுக்கு முன்னால் தான் நிற்பதை உணர்ந்து கொண்டான்.

"காமினி... என் வாள் நீ எதிர்பார்த்தது போல வானத்தில் பறக்கவில்லை என்பதில் உனக்குக் கவலை... இல்லையா?"

"நீ யார்?"

"காமினி.... உன்னை நான் பாராட்டுகிறேன்."

"எதற்காக?"

"அச்சமில்லாத உன் பார்வை... அற்புதமான சக்கரவட்டச் சூழல். மின்னல் போன்ற வாள் வீச்சு. அதற்காக உன்னைப் பாராட்டுகிறேன்."

"நன்றி" என்றான் துட்டகாமினி. அவன் குரலில் கேலி இருந்தது. அதை மற்றவன் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

"துட்டகாமினியின் வாள் சுழன்றால் எதிரியின் கைவாள் அவன் கரத்தில் தரிப்பதில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பதினாறு அகவைக்குட் பெரும் வீரனான போர்ப்புலமை பற்றியும் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். நான் அறிந்ததுபோலவே நீ இருக்கிறாய்..."

"உம்..." என்றான் காமினி

"மகனே. என்வாளை இன்றுவரை எந்த ஒருவனும் இவ்வளவு வேகத்துடன் பலத்துடன் அசைத்ததில்லை. நீ அசைத்திருக்கிறாய். என்னை மலைப்பிலும் ஆழ்த்தியிருக்கிறாய் உன்னைப் பாராட்டாமல் இருக்க என்னால் முடியவில்லை.

"உன் பாராட்டுக்கு நன்றி, உன்னைப் பார்த்தால் நாகதீபத் தமிழன்போல் தெரிகிறது. நீ யார்? எதற்காக ஆகாஸ சைத்தியப்பக்கம் ஒளிந்து நிற்கிறாய்..." நீட்டிய வாளை சற்றும் அசைக்காமலும் எடுக்காமலும் துட்டகாமினி கேட்டான்.

பதிலுக்கு மற்றவன் மீண்டும் கரகரப்பாக நகைத்தான்.

"மகனே நான் உன்னையோ சொனுத்தார தேரரையோ தேடி இங்கே ஒளிந்திருக்கவில்லை. ஒளிந்திருந்து தமிழர் தலைகளைத் தறிக்கும் ஒரு கோழை நரியைத் தேடி வந்தேன். வந்த இடத்தில் உன்னைப் பார்த்தேன். சொனுத்தார தேரரையும் பார்த்தேன்."

நரி என்று இவன் சொல்வது வேலுசுமணனைத்தான் என்பதை துட்டகாமினி புரிந்துகொண்டான். அதைக் காட்டிக் கொடுக்காமல் "பிறகு...?" என்றான் மெதுவாக

"ஆகாஸ சைத்தியப் படிகளில் இறங்காமல் மாடியிலிருந்து நூலேணியில் இறங்கிய அதிசயத்தைப் பார்த்தேன்... பிறகு... தேரர் மீண்டும் நூலேணியில் ஏறுவதைப் பார்த்தேன்..."

"பிறகு?"

"பிறகென்ன துட்டகாமினியின் வீரத்தைச் சோதித்துப் பார்க்கவேண்டும் என்ற ஆசை வந்தது அதனால் உன்னை இந்தத் தோப்புக்குள் அழைத்தேன்."

"வீரம் சோதனை" என்றதும் துட்டகாமினிக்குள் உற்சாகம் ஏறியது.

'நீ யார் என்பதைச் சொல்லிவிடு இல்லாவிட்டால் வாள்முனையில் உன்னிடம் அறிந்துகொள்வேன்" என்று சீறினான். துட்டகாமினி. மற்றவன் மெல்ல நகைத்தபடியே தன் வாளை இடுப்பு உறைக்குட் சொருகிக்கொண்டான். வெட்டாத விழிகளாற் துட்டகாமினியைத் தீர்க்கமாகப் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சை உதிர்த்தான்.

"நீ வீரனாகப் பேசுகிறாய். ஆனாலும் உன்னோடு வாள்வீச நான் பிரியப்படவில்லை..."

"நீ யாரென்று சொல்லாவிட்டால் இனிமேல் யாரோடும் நீ வாள் வீச முடியாது."

"எப்படி?" என்று ஆச்சரியத்தோடு விழிகளை விரித்தான் மற்றவன்

"நீ வாள் வீசுவதற்குக் கை வேண்டுமே. என் கேள்விக்குப் பதில் வராவிட்டால் உனது இரண்டு கைகளையும் நான் தறித்துவிடுவேன்."

அவன் கரகரப்பாக நகைத்தான்."வீரமகனே காமினி வீரனுக்கு வாய்வீச்சும் கொஞ்சம் தேவைதான். ஆனால் அந்த வீச்சு உன்னிடம் அதிகமாகவே இருக்கிறது."

"வாள்வீச்சும் அப்படித்தான் இருக்கும் பார்க்கிறாயா?" என்ற காமினி திடீரென்று வாளைச் சுழற்றியபடி அவன் மீது பாய்ந்துவிட்டான். இந்தத் திடீர்த்தாக்குதலை மற்றவன் எதிர்பார்க்கவில்லையென்பதால் கொஞ்சம் தடுமாறினான். ஆனால், சற்றுப் பொழுதுக்குட் தன்னைச் சமாளித்துவிட்டு உறைக்குள்ளிருந்த வாள்ள உருவியும் கொண்டான்.

அதற்குப் பின்னர் ஆரம்பமானது ஒரு அற்புதமான வாட்போர்.

நெருக்கமான மரமடர்ந்த இருட்டு அப்பிக்கிடக்கும் அந்தத் தோப்புக்குள் காமினியின் வாளும் மற்றவனது வாளும் ஒரு இலையைக் கூடக் காயப்படுத்தாமல் சந்தித்துச் சந்தித்து மீண்டன.

துட்டகாமினியின் மூர்க்கமான வீச்சுக்கு மற்றவனது வாள் மிக நிதானமாக பதில் சொல்லிக்கொண்டிருந்த அதேவேளையில் அவனது விழிகள் சற்றே சரிந்து கடைக் கண்ணாற் காமினியின் காலசைவுகளைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தன. அந்த அசைவுகளை அவன் மனம் சிலாகிக்கவும் செய்தது.

துட்டகாமினி எதிரியின் வீச்சுப் பலத்தை அளவிட்டு அதற்கு மேலான வேகத்தையும் விரைவையும் தன் வீச்சிற் காட்ட முற்பட்டதோடு பாரியகாட்டு மரத்தை நோக்கி அவனை நெருக்கிபடி முன்னேறவும் செய்தான். ஒவ்வொரு வீச்சின்போதும் தன்வாளின் தாக்குதற் பலமே அதிகமாகுவதையும் எதிரியின் வாள் தளர்ச்சியுடனேயே தனது வாளை எதிர்கொள்வதையும் அவதானித்த துட்டகாமினிக்கு உற்சாகம் பீறிடத்தொடங்கியது. யாராக இருந்தாலென்ன ஒரு தமிழ்வீரன் தன் கைவாளோடு கையையும் இழக்கும் விதி இன்று இருக்கிறது போலும் என்ற ஏளனத்தோடு மற்றவனது வாட்கையைக் குறிவைத்து மின்னலைப்போன்ற வேகத்தில் வாளை வீசிய காமினி அடுத்தவினாடி விறைத்துப் போய்விட்டான்.

வச்சிராயுதமாக மற்றவனது வாள் தன்னுடையதைத் திடீரென்று சந்திப்பதையும் தன்வாள் கையிலிருந்து பிரித்து எறியப்படுவதையும் உயரே கிளம்பி மரக் கிளையிற் தட்டிக் கீழே விழுந்து கொண்டிருப்பதையும் அந்த வாளை மற்றவனது இடக்கை சற்றே அசைந்து அலட்சியமாகப் பிடித்துகொண்டதையும் பார்த்தபோது காமினிக்குத் தன்னைத்தானே நம்ப முடியவில்லை. அமைதியாக வாளைப் பிடித்த மற்றவன் துட்டகாமினியைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"மகனே நீ இளம் வயதிலேயே மகாவீரனாக இருக்கிறாய். அனுபவம் சேரும் போது உன்னை வெல்ல ஒருவராலும் முடியாமற்போகும். ஆனால் போர் செய்யும் போது அகந்தையை மட்டும் விட்டுவிடு வாள்நுனியிலேயே உன் பார்வை குவிந்திருக்கவேண்டும் பலவீனமாகத் தெரியும் வாள்வீச்செல்லாம் பலவீனமானதல்ல இதை நீ புரிந்துகொள்ளவேண்டும்."

துட்டகாமினிக்கு அவமானத்தில் உயிரே போவதுபோல இருந்தது.

"வீரனே... என்னைக் கொன்றுவிடு" என்று நெஞ்சை நிமிர்த்தினான்.

"எதற்காக?"

"நான் வென்றிருந்தால் உன்னைக் கொன்றிருப்பேன்.."

மற்றவன் ஆதரவாக நகைத்தான்.

'காமினி நீ எனக்கு மகன் போன்றவன். மகாவீரன் உன்னைக் கொல்வது, வீரத்தைக் கொல்வதற்கு ஒப்பு. அப்படியே உன்னைக் கொல்ல நான் விரும்பினாலும் அது முடியாது."

"ஏன் முடியாது. இதோ என் மார்பு திறந்திருக்கிறது. கேவலம் ஒரு தமிழனிடம் கண்ட தோல்வியோடு துட்டகாமினி திரும்பமாட்டான்."

'மகனே உன்னைக்கொல்லக்கூடாது என்பது எனக்கிடப்பட்ட உத்தரவு."

"எவரது உத்தரவு"

"மகாமன்னர் எல்லாளரது உத்தரவு..." என்று ஏதோ புனித மந்திரத்தை உச்சரிப்பவன் போல ஒவ்வொரு வார்த்தையாக அழுத்திச்சொன்னான் மற்றவன்.

துட்டகாமினி இந்த வார்த்தைகளால் பிரமிப்படைந்தானென்றால் அடுத்து உதிர்க்கப்பட்ட வார்த்தைகளால் பிரமிப்பின் உச்சிக்கே போய்விட்டான்.

- பொன்பரப்பித்தீவு தொடரும்

## குட்டித்தொடர்........ 4

# காதல் கதை

**எஸ். பி. பாலமுருகன்**

அவளின் கண்களில் கண்ணீர்துளிகள் மின்னுகின்றன. இறங்கவேண்டிய இடத்தில் இருவரும் இறங்குகின்றனர் அவளோ அவனை கவனிக்கவில்லை.

துசாரா, மலையொன்று மணலாய் கரைந்து போன்ற இதயத்துடன் புத்தகங்களை கட்டியணைத்தபடி முன்னே சென்றாள். சொக்லைட் ஒன்றை அவளின் கட்டியணைத்த புத்தகத்துக்கும் நெஞ்சுக்குமிடையே போட்டு, அவளின் காதில் "நான் உனை விரும்புகின்றேன்" என்று சிங்களத்தில் சொல்ல அவள் திரும்பி சரவணனைக் காண ஆயிரம் வோல்ற் மின் தாக்கிய அதிர்ச்சி சந்தோசத்தில் அவனை கட்டித் தழுவி முத்தமிடுகிறாள். இதனை அந்த தேயிலை போர்த்தி மறைக்கிறது.

இருவரின் காதல் சந்திப்புக்கள் தொடர்கிறது. இதனிடையே நாட்டில் இனப்பிரச்சனையும் துளிர்விடுகிறது. சரவணன் துசாராவின் படிப்பிற்கு புத்தகங்கள் எல்லாம் வாங்கி கொடுக்கிறான். துசாரா சரவணனுக்கு சிங்களக் கிராமப்புற உணவுகள் செய்து கொடுக்கிறாள்.

அன்று அவர்கள் துக்கிந்த நீர்வீழ்ச்சி பார்க்க சொல்கிறார்கள். அங்கு இருவரும் அந்த துங்கிந்த சாரல் சாட்சியாக, அந்த காட்டில் தங்களை மறந்து இருவரும் சங்கமிக்கிறார்கள். துசாரா தன்னையே அவனுக்கு அர்ப்பணிக்கிறாள். அன்று அவர்கள் தங்களின் தொடர்பிற்கு வீட்டில் எதிர்ப்பு வந்தாலும் வேறிடம் சென்று வாழ்வோம் என்று முடிவெடுக்கிறார்கள்.




இப்படி இருக்கையில் 1983 இனக்கலவரம் ஆரம்பமாகிறது. துசாராவின் விமானப்படையில் உள்ள அண்ணன் தமிழ் இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்படுகிறான். அவனது மரணம், அந்த கிராமத்தை வெறிபிடிக்க வைத்தது பக்கத்து பச்சை தேயிலை தேசத்தை இரத்த மயானாமாக்கிறது. தோட்டத்து தமிழர்கள் வெட்டிக் குவிக்கப்படுகின்றனர்.

அண்ணனின் மரணத்தால் அவளின் மனதிலும் இனவாதம் இருந்தும் அவளால் சரவணனை வெறுக்கவும் மறக்கவும் முடியவில்லை. அவனே அவளின் உயிர். தேசம் இனத்தீயில் எரிகிறது இனவாதம் மனிதாபிமானத்தைப் புதைக்கிறது. காலத்தின் கட்டாயத்தால் காதலர்களின் உள்ளங்கள் எரிகிறது.

இராணுவம் எதுவும் அறியாத தோட்டத்து இளைஞர்களைப் பயங்கரவாதி என்று கைது செய்கிறது. (தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## குறளும் பொருளும்




குறள்: ''உலகம் தழீஇயது ஒட்பம்: மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு.''

(அதி 43 - குறள்: 425)

பொருள்: உலகத்திலே உயர்ந்தவரை நட்பாக்கிக்கொள்வது சிறந்த அறிவாகும். அறிவில்லாதவர்கள் ஏதாவது ஒன்று நிகழுமுன் மகிழ்வர் நிகழ்ந்தபின் வருந்துவார்கள்.

## மூன்று பன்றிக்குட்டிகள்



ஒரு காலத்தில் மூன்று பன்றிக்குட்டிகள் தங்கள் தாயாருடன் வசித்து வந்தன.

அவை வேகமாகவும் சாதுர்யமாகவும் செயற்படுகின்றனவா என அறிவதற்காக தாய்ப்பன்றி குட்டிகளைப்பார்த்து "நீங்கள் நன்றாக வளர்ந்து விட்டீர்கள் உங்களுக்கெனத்தனியாக வீடுகளை கட்டிக்கொள்ளுங்கள். அதோடு ஓநாய் உங்களைப் பிடித்துச்சாப்பிட்டுவிடும் அதனால் பாதுகாப்பான வீட்டை அமைத்துக்கொள்ளுங்கள்" எனக் கூறி அனுப்பியது.

மூன்றுகுட்டிகளும் ஒன்றாக வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது ஒரு மனிதன் வைக்கோலைச் சுமந்தபடி வருவதைக்கண்ட முதலாவது பன்றிக்குட்டி "எனக்காக வீடு ஒன்று கட்ட வேண்டும் கொஞ்சம் வைக்கோல் தருவீர்களா" என்று கேட்டது. அந்தமனிதனும் கொடுக்கவே அவற்றைக் கொண்டு அழகான வீடு ஒன்றை அமைத்த முதலாவது குட்டி. "இப்பொழுது ஓநாய் என்னைப்பிடித்துச் சாப்பிட முடியாது" எனக்கூறிக் கொண்டது. மற்றைய இருகுட்டிகளும் வீதியில் நடந்து செல்லும் போது மரக்குற்றிகளோடு ஒரு மனிதன் வருவதைக்கண்டதும்

இரண்டாவது பன்றிக்குட்டி "எனக்காக வீடு ஒன்று அமைக்க வேண்டும் கொஞ்சம் மரக்குற்றிகள் தருவீர்களா?" எனக்கேட்க அந்த மனிதனும் கொடுத்தான். அதைக் கொண்டு ஒரு வீடு அமைத்த குட்டி "இப்போது ஓநாய் என்னைப் பிடித்துச் சாப்பிடமுடியாது" எனக் கூறிக் கொண்டது.

மூன்றாவது குட்டி தனியே நடந்து சென்றது. அப்போது செங்கல்லோடு ஒரு மனிதன் வருவதைக்கண்டு எனக்காக ஒரு வீடு அமைக்க கொஞ்சம் செங்கற்கள் தருவீர்களா" எனக் கேட்க அவனும் கொடுத்தான் அதைக் கொண்டு அழகான வீடு ஒன்றைக் கட்டிய குட்டி "இப்பொழுது ஓநாய் என்னை பிடித்துச் சாப்பிட முடியாது எனக் கூறிக் கொண்டது.

ஒருநாள் வைக்கோல் வீட்டிற்கு ஓநாய் சென்று "பன்றிக் குட்டியே நான் உள்ளே வரலாமா" என்றது. பன்றிக்குட்டியோ "வேண்டாம் நான் தாடையில் முடிமழித்துக் கொண்டிருக்கிறேன். நான் உன்னை உள்ளே அழைக்கமாட்டேன்" என்றது. உடனே கோபமடைந்த ஓநாய் "நான் மூச்சுவிட்டால் உன் வீடு விழுந்து விடும்" என்றுகூறி பெரிதாக மூச்சைவிட்டது குட்டியின் வீடு கீழே விழுந்தது உடனே பன்றியைக் கொன்று தின்றது.

அடுத்தநாள் இரண்டாவது குட்டியிடம் சென்று ஓநாய் "குட்டியே நான் உள்ளே வரலாமா" என அழுதுகொண்டே கேட்டது. அந்தக் குட்டியும் முதல் குட்டி சொன்னவாறே சொல்ல கோபமடைந்த ஓநாய், பெரிதாக மூச்சை விட்டது. மரக்குற்றி வீடும் கீழேவிழ பன்றிக்குட்டியை கொன்று தின்றது.

அடுத்தநாளும் ஓநாய் மூன்றாவது குட்டியிடம் சென்று அவ்வாறே கூற குட்டியோ உள்ளே அழைக்கவில்லை அதனால் பெரிதாக மூச்சை விட்டுப்பார்த்தது ஓநாய், ஆனால் செங்கல் வீடு கீழே விழவில்லை.

கடுங்கோபமடைந்தாலும் குட்டியை ஏமாற்ற நினைத்தது ஓநாய் இனியகுரலில் "உனக்காக நாளை ஆறுமணிக்கு தோட்டத்திலிருந்து கிழங்கு பிடுங்கித் தருகிறேன் வா" எனக் கூறிச் சென்றது. அதன் நோக்கத்தை அறிந்த குட்டி 5 மணிக்கே சென்று கிழங்குகளுடன் வீடுவந்து சேர்ந்தது. அடுத்தநாளும் ஓநாய் நாளை ஐந்து மணிக்கு வா அப்பிள் பிடுங்கித் தருகிறேன் என்றது. குட்டி நான்குமணிக்கே சென்று அப்பிளைப் பறிக்கத் தொடங்க வேகமாக ஓநாய் ஓடிவருவதைக் கண்டதும் ஒரே பாய்ச்சலாக அருகில் இருந்த முட்புதருக்குட் புகுந்து ஒளிந்துகொண்டது குட்டி, குட்டியைக் காணாமல் பசியுடன் இருந்து இரவு வந்ததும் தூங்கிப்போனது ஓநாய். பத்திரமாய் வீடு போய் சேர்ந்தது குட்டி.

க.மதீரன் (தரம் 07)
புனித மைக்கல் கல்லூரி,
மட்டக்களப்பு

## நாடுகளும் சுதந்திரம் பெற்றஆண்டுகளும்

| நாடுகள் | ஆண்டு |
|---|---|
| சுவிற்சலாந்து | 1968 |
| பொலிவியா | 1825 |
| அல்ஜீரியா | 1962 |
| ஈராக் | 1932 |
| கென்யா | 1964 |
| சாம்பியா | 1964 |
| கயானா | 1966 |
| உகண்டா | 1962 |

சபா
கிங்ஸ்டன் சர்வதேச
பாடசாலை
வெள்ளவத்தை.

## நாடுகளும் சுதந்திர தினங்களும்

| நாடுகள் | தினம் |
|---|---|
| சிம்பாவே | ஏப்ரல் 18 |
| கொலம்பியா | ஜூன் 20 |
| ஆப்கானிஸ்தான் | ஆகஸ்ட் 19 |
| பிரேசில் | செப்ரெம்பர் 7 |
| உகண்டா | அக்டோபர் 9 |
| உக்ரைன் | ஆகஸ்ட் 24 |
| கீரிஸ் | மார்ச் 25 |

ப.பவித்ரா
தரம் 8
கிளி/புனித திரேசா
பெண்கள் கல்லூரி

## உங்கள் சித்திரம்

T.எனிஸ்மேரி
தரம் 11 O/L
டியன்சின்
தமிழ்மகாவித்தியாலயம்



## விஞ்ஞானியின் பெயரும் கண்டுபிடிப்பும்

1. நியூட்டன் : புவியீர்ப்புக்கொள்கை
2. ஆக்கிமிடீன் : மிதப்பு விதி
3. மிலமிங் : இடக்கைவிதி வலக்கைவிதி
4. போல்றவன் : அணுவைப்பற்றி ஆராய்ந்த முதல் விஞ்ஞானி
5. மெண்டலிவ் : ஆவர்த்தன அட்டவணையை அமைத்தவர்
6. லான்ஸரைனர் : குருதியை நான்கு வகுப்பாக பிரித்தவர்
7. வில்லியம் றோன்ஜன் : ஒளிக்கதிர்களை கண்டுபிடித்தவர்
8. ஸ்னால் : ஒளிமுறிவுவிதி
9. டொரிசெலி : எளிய இரசப்பாரமானியை அமைத்தவர்
10. றொபட்ஹுக் : தேன்வதை அறைகளை ஒத்த அலகுகளினால் அங்கிகள் உருவாகியுள்ளது என்பதை கண்டறிந்தவர்
11. பரடே : மின்காந்தத்தூண்டல் விதி

அ.அனிஸா (தரம் 11 (O/L))
வ/ஆண்டியா புளியங்குளம் முஸ்லிம் வித்தியாலயம்

## பிடித்த பழமொழி

- அழுத பிள்ளை பால் குடிக்கும்.
- ஆழம் அறியாமற் காலை விடாதே
- இக்கரை மாட்டிற்கு அக்கரைபச்சை
- உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
- எட்டாக்கனிக்கு கொட்டாவி விடாதே
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
- கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?

கௌசிகா .ஜீ
தரம் 5
கி.ச.பா, கல்கிசை

## வர்ணம் தீட்டி அனுப்புங்கள் சிறந்தவைக்கு பரிசு உண்டு-17




நீங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 13/06/2004 முகவரி: **வர்ணம் தீட்டற்போட்டி** த.பெ. இல 1601, கொழும்பு.

## உங்கள் சித்திரம்

ம.நிகேதன்.
தரம் 1
கி.ச.பா
வெள்ளவத்தை




### கண்டுபிடியுங்கள் -17

பெயர்:..........
வயது:..........
பாடசாலை:..........
முகவரி:..........

### வர்ணம் தீட்டும் போட்டி-17

பெயர்:..........
வயது:..........
பாடசாலை:..........

## கண்டுபிடியுங்கள் 17



இக்கட்டத்தில் இரண்டு மிருகங்கள் குழப்பப்பட்ட நிலையில் உள்ளன அவற்றைக்கண்டுபிடித்து பொருத்தி ஒட்டி அனுப்பவும்

அனுப்பவேண்டிய இறுதித்திகதி 13/06/2004

# உங்கள் ராசிபலன்கள்

ஜோதிட சக்ரவர்த்தி

தொடர்ச்சி...

ஏ.எம்.ராஜகோபாலன்



## சிம்மம்

**13.04.2004 முதல் 18.08.2004 வரை**
**(மகம், பூரம் உத்திரம் முதல் பாதம் வரை)**

இந்த ராசியினருக்கு சனிபகவான் அனுகூலமாகச் சஞ்சரிக்கிறார். ஆனால் குருபகவானும், ராகுவும் உதவிகரமாக இல்லை. சிம்ம ராசியினருக்கு குரு பூர்வ புண்ணியத்திற்கும், ஆயுள் ஸ்தான த்திற்கும் அதிபதியாகிறார். குடும்பத்திற் செலவுகள் அதிகரிக்கும். சீமந்தம், உபநயனம், திருமணம் போன்ற சுபச் செலவுகள் அதிகமாக இருக்கும். இருப்பினும் வருமானம் நல்லபடி இருப்பதால் பிறர் உதவியை நாட வேண்டிய அவசியம் இராது. சில குடும்பங்களில் உத்தியோக நிமித்தமாகவோ அல்லது குழந்தைகளின் கல்வி சம்பந்தமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காவோ கணவனும் மனைவியும் தாற்காலிகமாகப் பிரிந்திருக்க நேரிடும். நீதிமன்ற வழக்குகளில் எவ்வித முடிவும் ஏற்படாதது கவலையை அளிக்கும். அடிக்கடி உடல்நலன் பாதிக்கப்பட்டு மருந்துகளாலும் சிகிச்சைகளினாலும் சரியாகும். திருமண சம்பந்தமான முயற்சிகளிற் சிறிது முன்னேற்றம் காணலாம்.

வேலை பார்க்கும் இந்த ராசி அன்பர்களுக்கு அமைதி குறைந்த காலகட்டம் இது. எத்தனை பாடுபட்டு உழைத்தாலும் மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்த முடியாது. நியாயமாகக் கிடைக்கவேண்டிய சலுகைகள் கூட மறுக்கப்படும் முக்கியமாக. வெளி நாடுகளில் வேலை பார்த்துவரும் இந்த ராசியினர் அவரவர் பணிகளில் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பது அவசியம். வெளிநாட்டு வேலைக்கு முயற்சி செய்யும் இந்த ராசியினர் கிரகநிலைகளின் படி ஏமாற்றப்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. அத்தகைய முயற்சிகள் அடுத்து வரும் ஐந்து மாதங்களுக்கு ஒத்திவைக்கவும்.

தொழிலதிபர்கள் தேவைக்கு அதிகமாக உற்பத்தி அதிகமாகிவிடாமற் பார்த்துக் கொள்வது அவசியம். நிதி நிறுவனங்களினால் அவ்வப்போது பிரச்சனைகள் ஏற்படும். தொழிற்சாலை அதிகாரிகள், வருமான வரி அதிகாரிகள் போன்ற அரசு அதிகாரிகளாற் தொல்லைகள் உண்டாகும்.

ஒரு சிலருக்கு நீதிமன்றம் செல்லவேண்டிய அவசியமும் ஏற்படக்கூடும். வியாபாரத்துறையில் உள்ளவர்களுக்குச் சரக்குகள் விற்பனை யாகாமல் தங்கிவிடும். விற்பனை குறைவதால் லாபம் குறையும் போட்டிகள் மேலும் மேலும் அதிகமாகும்.

கலைத்துறையினர் தற்போது சற்று சிரமமான காலகட்டத்தில் இருக்கிறீர்கள். புதிய தயாரிப்புகளைச் சில மாதங்களுக்கு நிறுத்தி வைப்பது மிகவும் நல்லது. நடிகர், நடிகையர், இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் பிறதுறை கலைஞர்களுக்கும் சோதனையான நேரம் இது.

அரசியற் துறையினருக்கு கிரகநிலை சாதகமாக இல்லை.

மாணவ மணிகளுக்கு உழைப்பு கடினமாக இருப்பினும், ஆண்டுத் தேர்வில் சிறநத மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெறுவீர்கள். படிப்பிற்தடங்கல் எதுவும் ஏற்படாமல் இருப்பதற்கு பெருமளவில் புதன் உதவுவார். மேல்நாடுகளில் விசேஷக் கல்வி பயின்றுவரும் மாணவமணிகள் அதிகளவில் நற்பலன்களைப் பெறுவார்கள். இருப்பினும் கல்வி அபிவிருத்திக்கு அவை தடையாக இருக்காது.

விவசாயத்துறையினருக்கு விளைச்சல் சுமாராக இருக்கும். சிறு அளவில் தண்ணீர்ப் பற்றாக்குறை தீரும். முயன்றால் நிலத்தடி நீர் கிடைக்கும். கடனுதவி கிடைப்பதிலும் தாமதமாகும்.

பெண்மணிகளுக்கு அடுத்துவரும் சுமார் நாலு மாதங்களுக்கு உங்கள் முக்கியபிரச்சனை குடும்ப நிர்வாகமே. சிலர் கணவரிடமிருந்து பிரிந்து வாழ நேரிடும். கணவன்-மனைவி உறவு சுமுகமாக இருக்காது. வீடு, மனை போன்ற சொத்துகள் வாங்கும் எண்ணம் இருப்பின், ஆகஸ்ட் மாதம் முடியும்வரை ஒத்திப் போடுவது நல்லது. திருமண முயற்சிகளிற் தடங்கல்கள் ஏற்பட்டு அதன்பின்பே வரன் நிச்சயமாகும்.

வேலைக்கு முயற்சி செய்யும் இந்த ராசிப் பெண்களுக்கு ஏதோ ஒரு காரணத்தினால் வாய்ப்புகள் தள்ளிப்போகும்.

**19.08.2004 முதல் 03.04.2005 வரை**

உங்கள் ராசிக்குப் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியான குருபகவான், தற்போது வாக்கு, தனம், குடும்ப ஸ்தானத்தில் அமர்ந்து உங்கள் ராசியின் ருண, ரேக, சத்ரு ஸ்தானத்தையும் தனது சுபபார்வையில் பலப்டுத்துகிறார். பிரிந்திருந்த கணவன் மனைவி இருவரும் ஒன்று சேர்வார்கள். தடைபட்டிருந்த விவாக முயற்சிகளிற் தடங்கல்கள் நீங்கி, நல்ல வரன் அமையும். உத்தியோகம், தொழில், வர்த்தகம் எதுவானாலும், வருமான உயர்வும் ஏற்படும். கலைத்துறை அன்பர்களுக்கு நல்லகாலம் ஆரம்பமாகியுள்ளது. அரசியற் துறையினருக்கு ஆதாயத்தை அள்ளிக் கொடுக்கும் அளவிற்குக் கிரகங்கள் சாதகமாகச் சஞ்சரிக்கின்றன இப்போது மாணவமணிகளுக்கு மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் தீரும். உடல் உபாதைகள் நீங்கிவிடுவதால் பாடங்களில் மனதை முழுமையாகச் செலுத்த முடியும். பெண்மணிகளுக்கு உற்சாகமான மாதங்கள் இவை. வேலைக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு அதிகமாகச் சிரமப்படாமல் மனதிற்குப் பிடித்த வேலை கிடைக்கும்.

### அறிவுரை

இந்த. ராசி அன்பர்கள் தாரண வருட ஆரம்பத்திலிருந்து ஆகஸ்ட் 18வம் தேதி 2004 வரை அனைத்து விஷயங்களிலும் பொறுமையையும், நிதானத்தையும் கடைபிடிக்க வேண்டும்.

### பரிகாரம்

சனிக்கிழமைகளில் உபவாசம், காலையில் ஆதித்ய ஹிருதயம் பாராயணம், சூரிய பகவானை வணங்குதல். மாலையில் ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம் படிப்பது.

ராசி பலன் தொடர்ச்சி அடுத்த இதழில்...

# விண்ணேற்பு விழா

A.மரீனா

"இதோ உலகம் முடியும் வரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்" என்றருளிய தேவமைந்தன். மேய்ப்பனில்லா ஆடுகளாய் சிதறிப் போகவிருந்த தம்மக்களை தமது இணையில்லா அன்பால் ஒன்று சேர்த்து பலப்படுத்தி திடமூட்டி இறையரசை உலகெங்கும் சென்று அறிவியுங்கள் என அருளி தன் பிதாவிடம் சென்ற நாளை, அவரது விண்ணேற்பு விழாவாக அனுசரிக்க திருச்சபை கட்டளை இட்டுள்ளது.

கிறிஸ்துவின் விண்ணேற்பு, அவர் அருளிச் சென்ற வார்த்தைகளும் அவரது இரண்டாம் வருகையையும் நினைவிற் கொள்ளவே கடந்த ஈராயிரம் ஆண்டாக திருச்சபை வலியுறுத்துகின்றது. நாம் கிறிஸ்தவர்கள். கிறிஸ்து (அவன்) ஆகவும் கிறிஸ்து (அவள்) ஆகவும் இருக்கின்றோம். எம்மனங்களில் அவரின் படிப்பினைகள் ஆழப்பதிந்துள்ளதா? அவரின் வார்த்தைகளை வாழ்ந்திருக்கின்றோமா? திருச்சபையின் கட்டளை என்பதால் கடமைக்காகவும் கிறிஸ்தவர் என்ற பெயரை தக்கவைத்துக் கொள்வதற்காகவும் மட்டும்தான் அன்றையநாட்களில் திருப்பலியில் பங்குகொள்கின்றோமா? கொஞ்சம் கிறிஸ்துவின் வார்த்தையை மீட்டுப்பாருங்கள் மனுமகன் நினையாத நேரத்தில் வருவார்.

ஆம் அவரது வருகை இரட்சிக்கவல்ல, தீர்ப்பளிக்க வாளோடு நினையாத நேரத்தில் வரும் கிறிஸ்து நீதிமான்களை அணைக்கவும் பாவிகளை அழிக்கவும் வருவார் கடுதியாய் கரைந்துவிடும் காலம். எனவே தீயதை ஒழித்து நல்லவற்றை நாடி எமக்காய் பாடுகள் பல பட்டு தன்னுயிரை விலையாக்கி இன்றும் எமக்காக பிதாவிடம் இறைஞ்சும் எமது அன்பர் யேசுவின் வழி நடப்போம் வருடாவருடம் விண்ணேற்புவிழா வந்து தான் போகிறது. ஆனால் அவ்விழாவின் நாயகனின் வழிகளை பதர்களாலும் முட்களாலும் நிறைந்துவிட்டு பாதை தெரியாது பரிதவிக்கும் எமக்குப் பெரும் பலமாகவும் அரணாகவும் தூய ஆவியை அனுப்பினார். யேசுவின் தீர்ப்பின் பெரும் நெருப்பிலிருந்து தப்பிக்க, தம்வழியை ஆயத்தம் செய்ய, இருளின் ஒளியாய் தாம் விண்ணேற்படைந்த பத்தாம் நாளே பரிசுத்த ஆவியை எம்மிடம் அனுப்பிவைத்தார். தன் இரண்டாம் வருகையினால் ஏற்படப்போகும் அழுகுரல்களை ஆனந்தமாக்கவே ஆவியானவரை அனுப்பிவைத்தார். ஆவியின் பலமும் தெளிவும் சீடர்கள் மூலம் உலகுக்கு வெளிவந்தது.

தன் மக்கள் மீது பரமபிதா எவ்வளவு அன்பு கொண்டுள்ளார் என்பதைக் காட்டவும் பாவவழிகளில் இருந்து விலகவும் தன் மகனை உலகுக்கு அனுப்பினார். ஆனால் இன்னும் தான் நாம் எமது பாவ வழிகளை விட்டு விலகாமல் இருளின் இரும்புப் பிடிக்குள் இருந்து வெளிவர விரும்பாமல் கண்களை இறுக மூடிக் கொண்டிருக்கிறோம்.

புத்தியில்லா பத்துக்கன்னியர் போல் இல்லாமல் கிறிஸ்துவின் வருகையை எதிர்கொள்ள ஆயத்தம் செய்வோம்.

என்றும் எமக்கு பாதுகாப்பும் அரணுமாய் உள்ள தூய ஆவியானவரின் துணை கொண்டு கிறிஸ்துவின் விண்ணேற்பு பெருவிழாவை தக்க முறையில் அனுசரித்து கிறிஸ்தவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாய் வாழ்வோம்.

# குறுக்கெழுத்துப்போட்டி 15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 ஆ |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 கு |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1 சந்தியாவந்தனத்தில் ஒரு செயற்பாடு
7 இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்று இது
12 பசுவை, உயிரைக் குறிக்கும் ஒரெழுத்து
15 இருக்கையை இப்படியும் அழைப்பர்.
19 கண்ணனுக்கு இதுவும் ஒரு நாமம் குழம்பிவிட்டது
25 ஆயர் குலத்தினை இப்பெயராலும் அழைப்பர்.
28 பொந்தினைக் குறிக்கும் சொல் இது.
33 வயிற்றைக் குறிக்கும் சொல் மாறிவிட்டது.

### மேலிருந்து கீழ்

1 சுகத்தை இப்படியும் கூறுவர்
2 தோழியை இப்படி அழைப்பர்
3 குரங்கிலிருந்து பிறந்தவன் இவன் என்பர்
16 வியாபகத்தன்மை இது.
17 தாமதம் செய் எனும் ஏவள் சொல்
20 பருவத்தைக் குறிக்கும் சொல் இது.

விடைகளை அனுப்பவேண்டிய இறுதித்திகதி 13.06.2004அனுப்பவேண்டிய முகவரி

**தணலின் குறுக்கெழுத்துப்போட்டி 15**
த.பெ. இல 1601, கொழும்பு.

### குறுக்கெழுத்துப்போட்டி 12

வெற்றி பெற்றவர்கள்

1

சி.மணிவண்ணன்
8ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு.

2

பு.பிரமிளா
இராதமையன்கல்
மன்னார் வீதி
வவுனியா.

# கண்டுபிடியுங்கள் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

**முதலாம் பரிசு பெற்றவர்**

வே.மோகன்
வ/கணேசபுரம் ச.வி
கணேசபுரம்

**மற்றும் ஆறுதல் பரிசுக்களை பெற்றுக் கொள்ளும் சிறுவர்கள்.**

சு.மகாலட்சுமி
8ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு
முல்லைத்ததீவு.

த.வேணுகா
த/பிரமண்டு வித்தியலயம்
15/27 குருமன்காடு
வவுனியா.

# வர்ணம் தீட்டும் போட்டி 15ல் பரிசு பெற்றவர்கள்

**முதலாம் பரிசு பெற்றவர்**

ம.சாந்தஸ்வரரூபிணி
ஐயனார்புரம். த.க.பாடசா

**மற்றும் ஆறுதல் பரிசுகளை பெற்றுக் கொள்ளும் சிறுவர்கள்.**


இமானுவேல்
நு/தலவாகலை த.ம.வி

யோ.ஜனனி
வ.இ.ம.ம.வித்தியாலயம்

# சிறுகதை

# 'கிளி ஒன்று' கிளி ரெண்டு

எஸ். பி. லக்குணா, வட்டக்கச்சி.



இடி மின்னலோடு மழை பொல.... பொல வென, பொழிந்து கொண்டிருந்தது. அந்த அடை மழை நடுவே கஜன் நின்று கொண்டிருந்தான். அவ்வழியாக வந்து கொண்டிருந்த கண்ணன் கஜனின் நிலை கண்டு பரிதவித்துப் போனான்.

"டேய்! கஜன்...."

"எத்தனை நாட்களுக்குத் தான் மழையிலும் வெய்யிலிலும் அவஸ்தைப் படப் போகிறாய்?" "காவிகா பதில் சொல்லும் வரைக்கும்!" நண்பன் கண்ணன் கேட்ட கேள்விக்கு மெதுவாக பதிலளித்தான் கஜன்.

அதிர்ச்சியடைந்தவனாய் "என்னடா கஜன் சொல்கிறாய்?" "ஆமடா கண்ணன்." காவிகா இன்னும் பதில் சொல்லவில்லை அவளின் பதிலுக்காகத்தான் நானும் காத்திருக்கிறேன்."

"எந்த மடையனாவது காதல் சம்மதம் வாங்காமல் ஒரு பெண்ணுக்காகக் காத்திருப்பானா?

கஜன் உன்னை நினைக்க அழுகை வரவில்லை எனக்கு சிரிப்புத்தாண்டா வருகுது. இந்த ஊரில் வேற பெண்ணே கிடைக்கலையா? போயும் போயும் அவள் தான் கிடைச்சாளா?"

கண்ணன் சொன்னதைக் கேட்டு கண்ணன் மீது கஜனுக்கு ஆத்திரம் தொண்டை வரை வர "அப்படியெல்லாம் அவளை சொல்லாதேடா எனக்கு காவிகாவை ரொம்பவே பிடிச்சிருக்கு அவளில்லை என்றால் நானுமில்லையடா. காவிகா நிச்சயம் ஒரு நாள் என் காதலை புரிந்துகொண்டு என்னை அவளது காதலனாக ஏற்றுக் கொள்வாள் அது வரைக்கும் எத்தனை வருஷமென்றாலும் காத்திருக்க நான் தயாராக இருக்கேன்."

நம்பிக்கை இழக்காது சொன்ன கஜனைப் பார்த்த கண்ணன், "காதல் காதல் என்று சொல்லி காதலின் பின்னால திரிஞ்சு பொன்னான வாலிப பருவமதை வீணாக கரைத்து விட்டாயேயடா. நீ.....திருந்தவே........ மாட்டாயடா."

"டேய்.....டேய் கஜன் திருந்தணுமடா நீ..."

"கண்ணன் ஏன்டா அப்படி சொல்லிறாய்?"

"அப்ப என்னடா கொஞ்சம் உன் வீட்டு நிலைமையை யோசித்துப் பார்த்தாயா? ஒரு நேர சாப்பாட்டுக்கே கஸ்ரப்படும் உங்க அப்பா படிக்கிற வயசிலே ரெண்டு தங்கைகள். மூன்று உயிர்களையும் காப்பாற்றும் பொறுப்பு உனக்கில்லையாடா.

நீயோ ஊரை சுற்றி திரிகிறாய்..."

கண்ணன் கூறும் வார்த்தைகளைக் கேட்கும் தறுவாயில் கஜனில்லை. அவன் மனமோ கற்பனை வானில் சிறகடித்துக் கொண்டிருந்தது. ஆத்திரமடைந்த கண்ணன் மேலும் அவ்விடத்தில் நிற்காது தன் வீட்டை நோக்கி நடைபோட்டான்.

சித்திரை வருஷம் பிறந்தால் எனக்கும் வழி பிறக்கும் என்று, கஜனும் மனதினுள் நம்பிக்கை விதை விதைத்திருந்தான். நாட்கள் நகர்ந்தது வருடமும் ஓராண்டைக் கடந்தது.

அன்று செவ்வாய்க்கிழமை சித்திரை மாதம் பதின்மூன்றாம் திகதி. புத்தாடை அணிந்து காவிகாவின் வரவை எதிர்பார்த்து காத்திருந்தான். காத்திருந்து காத்திருந்து ஏமாற்றமே கடைசியில் மிஞ்சியது. ஆமாம் அன்றும் காவிகா வரவில்லை கஜனுக்கு அன்றும் காவிகாவை காணாது போனது மனதுக்கு வேதனையைக் கொடுத்தது.

இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் என்னை காக்க வைக்கப் போகிறாளோ தெரியலையே. ஆம் அல்லது இல்லை என்று ஒரு வார்த்தை வாய் திறந்து சொன்னால் ஒரு இஞ்சி நாக்கு என்ன? தேய்ந்தா போகப் போகுது. என்னை அவஸ்தைப் பட வைப்பதே அவளின் வாடிக்கையாகி விட்டதே சீ........ தனக்குத் தானே சொல்லி புலம்பித் தவித்தான் கஜன். ஒரு முடிவு எடுத்தவனாய், நாளைக்கு ஆகட்டும் இரண்டிலொரு முடிவு எடுக்கணும் என்று நினைத்தவன் அன்று சந்தோஷமாக உறங்கச் சென்றான்.

மறுநாளும் வழமைபோல புலர்ந்தது. வழமையாக காவிகா வரும் வழியோரம் கஜனும் காத்திருந்தான். சொல்லிவைச்சாப் போல........ காவிகாவும் துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்தாள். கஜன் அருகே வந்ததும் துவிச்சக்கரவண்டியை நிறுத்திக் கொண்டாள் காவிகா.

"முதலில் கஜன் என்னை மன்னிச் சிடு....... எதற்காக என்னிடம் மன்னிப்பெல் லாம் கேட்கிறாள்? புரியாமல் தவித்தான் கஜன்.

என்ன? என் மீது கோபமா?"கஜனைப் பார்த்து சிறு புன்னகையை வீசினாள் காவிகா. கஜனோ முகத்தை மறுபக்கம் திருப்பி வைத்துக் கொண்டான். "எனக்காக கஜன் நீ பட்ட கஸ்ரங்கள் ஏராளம் இன்று காலை தான் உன்ட நண்பன் கண்ணன் மூலம் அறிந்து கொண்டேன்."

"என் மீது நீ வைத்திருந்த அன்பை நான்தான் சரியாக புரிஞ்சு கொள்ள தவறிவிட்டேன் அதற்காகத் தான் முதலில் உன்னிடம் மன்னிப்புக் கேட்டேன்."

இந்த வார்த்தையைக் கேட்ட கஜனுக்கு சந்தோஷத்தில் மனமெல்லாம் மத்தாப்பூ பூத்தது சூரியனைக் கண்ட செந்தாமரையாய் உள்ளம் பூரிப்படைந்தது.

"சும்மாவா எனக்காக..... நீ... மூன்று வருஷமெல்லா காத்துக்கிட்டு இருந்தே கஜன். உன்னை நினைக்க பெருமையாக இருக்கிறது. உண்மையான காதல் எதுவென்று உன் மூலமாய் நன்றாக தெரிந்து கொண்டேன் ஆ....னா...ல்....... ஆனால், உனது காதலை ஏற்கும் நிலையில் இப்போது நானில்லை!" என்று சொன்னவள் குமுறிக் குமுறி அழத் தொடங்கினாள்.

திடீரென இப்படியொரு பெரிய குண்டை தன் தலையில் போடுவாளென கஜனும் எதிர்பார்க்கவில்லை. காவிகா சொன்னதைக் கேட்டு புரியாமல் விழித்தவனிடம்! "கஜன் எப்பவோ என் முடிவினை சொல்லியிருப்பேன் என்னால் உன்னிடம் சொல்ல முடியாதவாறு சூழ்நிலை தடுத்து விட்டது என்ன? அப்படி என்னை முழிச்சு பார்க்கிறாய். அது என்னவென்று கேட்கிறீயா? ம்.......சொல்லுறன் கஜன்.

"என் தங்கை கல்பனாவும் உன்னை காதலிக்கிறாள்." ஒரு நிமிடம் ஆடித்தான் போய்விட்டான் கஜன்.

"முருகா! இதென்ன புதுக் குழப்பம். நானொன்று நினைக்க வேறொன்று நடக்கிறதே." விழிகளில் நீர் வழிந்தோட கடவுளையே திட்டித் தீர்த்தான். வேதனையால் உள்ளம் வெந்தவனைப் பார்த்து. "கஜன் தயவுசெய்து என் தங்கையை கைவிட்டு விடாதே. கல்பனாவுக்கு நீ கிடைக்கணும் என்றால், அவள் உயிரோடு இருக்கணுமென்றால் என் காதலை தியாகம் செய்தேயாகணும்."

அழுத விழிகளோடு கஜனை பார்த்தாள் காவிகா. கஜனின் கண்களிலிருந்து அருவியாய் கண்ணீர் கன்னத்தால் வழிந்த வண்ணம் இருப்பதைக் கண்டு பதறிய காவிகா! "ஏன்? அழுகிறாய் கஜன். உன் கண்ணிலே ஒரு தூசி பட்டாக்கூட தாங்கமாட்டாத நான் நீ அழும் போது மட்டும் எப்படி அதை தாங்குவேன்."

"காத்திருந்து காதலிப்பதிலும் பார்க்க காதலித்து காத்திருப்பதில் தான் சுகமே உள்ளது என்பதை உணர்த்தி விட்டாய். "கஜன் நீ........... ஷாஜகான் -'மும்தாஜ் காதலிலும் பார்க்க உன் காதல் உயர்த்தியடா. இப்போது தான் எனக்கே விளங்குகிறது."

பேசிய கல்யாணத்திலும் பார்க்க காதல் கல்யாணம் சிறப்பானது, சுவாரஸ்யமான காதலை அனுபவிக்கத் தான் எனக்கு கொடுத்து வைக்கவில்லை உன்னோடு இணைந்து வாழத்தான் பலன் இல்லை என்றாகிவிட்டது."

அப்போதும் கஜனின் மனம் ஒரு நிலையிலேயே இருந்தது. "காவிகா என்னை யார் வேண்டுமானாலும் காதலிக்கலாம் தவறுமில்லை தப்புமில்லை. அதேசமயம் நான் யாரை காலிக்கிறேன் என்பது தான் முக்கியம். உன்னைத்தான் காதலிக்கிறேன் உன்னை மட்டும்தான் கல்யாணமும் முடிக்கமுடியும்.

காவிகா ஏதோ சொல்லவாய் உன்னிய சமயம் கல்பனா அவ்விடம் வந்து நின்றாள். கஜனையும் காவிகாவையும் மாறி மாறிப் பார்த்தாள். இருவர் கண்களும் கலங்கியிருந்தது பிறகு காவிகாவை பார்த்து "அக்கா நீங்களும் கஜனை காதலித்த விசயம் நீங்கள் இருவரும் கதைத்தபோது தான் நானே தெரிந்து கொண்டேன் அதனால் தெளிந்தும் கொண்டேன்."

"அக்கா நீ கஜனை காதலிக்கிறேன் என்று ஒரு வார்த்தை முன்பே சொல்லியிருந்தால் இவ்வளவு நாட்களும் கனவுகளை கண்டிருக்க மாட்டேன். ஆனா நீ....... உன் காதலை விட தங்கையின் காதலை வாழ வைக்க உன்ட ஆசைகளை மனதுக்குள்ளே இத்தனை காலமாய் முடக்கி வைச்சிருக்கே. அம்மா உயிரோடிருந்தாலும் இப்படியொரு தியாகம் செய்திருக்க வாய்ப்பேயில்லை.

"இதற்கு பிறகும் கஜனை நான் காதலித்தாள், தங்கையே தமக்கைக்கு துரோகம் செய்ததாகி விடும்." "அப்படி எல்லாம் இல்லை, கல்பனா நான் சொல்லதைக் கேளு, பேசாதே" வேதனையை நீ தாங்க மாட்டாய் கல்பனா."

"அப்ப நீ மட்டும் எப்படியாக்கும் நீயும் அப்படித்தானே அக்கா."

நான் தான் கஜனை காதலிச்சேனே தவிர கஜன் என்னை காதலிக்கவில்லையே அக்கா, ஆனா நீயும் கஜனும் அப்படியா? நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அல்லவா காதலிக்கிறீங்க!"

"உங்கள் இருவரையும் பிரிக்க நானென்ன இரக்கமே இல்லாதவள் என்றா நினைச்சிங்க. நீங்கள் இருவரும் ஒன்றிணைந்து வாழ முன் கூட்டிய என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்." கண்களால் வழிந்த கண்ணீரை துடைத்து விட்டு. தன் வீடு நோக்கி நடக்கலானாள் கல்பனா. கஜனின் மனதும் காவிகா மனதும் மகிழ்ச்சியில் நாட்டியம் ஆடியது. "கஜன் இனியும் உன்னை காக்கவைக்க விரும்பலை ஐ லவ்யூ கஜன்!"

தன்னிலை மறந்த கஜன். காவிகாவை தன் நெஞ்சோடு கட்டி அணைத்துக் கொள்ள காவிகாவும் மறுக்காமல் தாராளமாக அனுமதி கொடுத்தாள். இருவரும் சித்திரை வருஷ பரிசாக முதல் காதல் முத்தங்களை மாற்றிக் கொண்டனர்.

(முற்றும்)

## சித்திரமும் சிறுகதையும்

# இணைகின்ற ஆத்மா



தேவி குளத்தில் இறங்கி மெதுவாக கால்களை அலம்பினாள், அவளுடைய நெஞ்சு கனத்தது. இன்று ஏப்ரல் 1ம் திகதி, எட்டு வருடங்களிற்கு முன் நடந்த ஒரு சம்பவம் அவளை ஒவ்வொரு ஏப்ரல் 1ம் திகதியும் இங்கு அழைத்து வந்துவிடும்.

கோயிலினுள் ஏறிச் சென்று குமரன் சன்னிதானத்தில் மனமுருக வேண்டினாள். கோயிலை மூன்முறை வலம் வந்தவள் பிரசாதத்தை எடுத்துக்கொண்டு அருகில் இருந்த மணியைத் தட்டி கன்னத்தில் போட்டுக்கொண்டாள்.

கோயில் மிகவும் அமைதியாகவும் சன நடமாட்டமற்ற மரங்களால் சூழ்ந்து குன்றுகள் நிறைந்த பகுதியில் இருந்தது. நேரமும் மாலை 3.30 மணியளவில் இருக்கும், ஊமைக் காற்று ஊ, ஊ என வீசிக்கொண்டிந்தது.

தேவியின் மன அமைதி இந்த சூழ்நிலையால் தடுமாறியது. இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது அவள் தன்னை திடப்படுத்த முயற்றி செய்தாள் ஆனால் அந்தக் காற்று அவளுள் எதையோ கூறுவது போல் இருந்தது.

வேகமாக வந்து படிகளில் இறங்கி செருப்பை மாட்டினாள், நிமிர்ந்து பார்த்தவள் மனதுள் இனம் தெரியாத நிம்மதி ஒன்று காரணம், ஏதிரே ஒரு பெண் மங்கலகரமான ஆடையில் கோயிலை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவள் மனசினுள் "பாவம் இவளுக்கும் என்னைப் போல, ஏதாவது வரவேண்டி நிர்ப்பந்தம் உண்டோ என்னவோ" என நினைத்துக் கொண்டு தன்வழியே நடந்தாள்.

தேவியின் வழியை மறித்து நின்ற புதியவள் கையில் இருந்த ஒரு படத்தையும் முகவரியையும் கொடுத்து "இவளை இந்த முகவரியில் தான் இருந்தவள் உங்களுக்கு தெரியுமா கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கள்" என்றாள்.

படத்தை பார்த்த தேவி, மின்னல் தாக்கி உறைந்து போனதைப் போன்ற அதிர்ச்சிக்குள்ளானாள். நிமிர்ந்து அந்தப் புதிய வளைப் பார்த்தாள், அவள் மந்தகாசப் புன்னகை மாறாமல் இன்னும் நின்று கொண்டிருந்தாள். படத்தை மீண்டும் பார்த்தாள் இரட்டைப் பின்னலோடு பள்ளி உடையில் சிரித்த முகம் மாறாமல் பளிச் சென்று சாந்தி, தேவியின் நினைவு, எட்டு வருடங்களுக்கு பின் நோக்கிச் சென்றது.

சாந்தி, தேவியின் அபிமானம் மிக்க தோழி. பாடசாலை விட்டு ஒவ்வொரு நாளும் இந்த முருகன் கோயில் அமைந்துள்ள குன்றிக்கு வந்து கூழாம்பழம் பறித்து உண்டு விளையாடிவிட்டுச் செல்வார்கள் நிறைய மாணவர்கள் வந்து இப்படி விளையாடுவது வழக்கம். அப்படி விளையாடும் பொழுதே 1996ம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் திகதி தற்செயலாக குன்றிலிருந்து தவறி விழுந்து பிரடி அடிபட்டு சாந்தி இறந்து போனாள்.

ஆக்கம்: குருவிச்சி, கொழும்பு.

அதன் காரமாகவே ஒவ்வொரு ஏப்ரல் 1ம்திகதியும் மறவாமல் இந்தக் குன்றிக்கு வருவாள் தேவி. ஆனால் இவளிடம் எப்படி நிமிர்ந்து அந்தப் புதியவளைப் பார்த்தாள். சாந்தி இப்பொழுது இருந்தால் எப்படி, இருப்பளே அதே யாடையில் இருந்தாள் புதியவள். நீங்க...நீங்க... எனத் தடுமாறியவளை இடைமறித்து நான்தான் சாந்தி தெரியல்ல மறந்திட்டியா? என தோளில் கை வைத்தாள புதியவள். தேவி சுயநினைவை இழந்து கீழே சரிந்தாள் சரிந்தவளின் பிடரியில் இருந்து இரத்தம் குபு...குபு வென ஓடியது. புதிய உருவம் நின்ற இடம் தெரியாமல் மறைந்து போயிற்று. தேவியின் எட்டு வருடப் பிராத்தனையும் அவள் ஆத்மாவோடு அணைந்து கொண்டிருந்தது.

மாபெரும் பரிசுப்போட்டி

செந்தணல்

SENTHANAL

மாபெரும் பரிசுப்போட்டி

# மாபெரும் பரிசுப்போட்டி

பெயர்: ______________________________

வயது: __________ பிரதேசம்: ______________________________

முகவரி: ______________________________

## முகவரி மாற்றப்பட்டமையால் போட்டி இறுதித் திகதி யூன் 30ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**இன்றே பதில்களை அனுப்பி பரிசுகளை வெல்லுங்கள்...**

சித்திரமும் சிறுகதையும், சிறுவர் புதிர்ப்போட்டி, வர்ணம் தீட்டும் போட்டி போன்றவற்றில் இருந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன நீங்கள் செய்யவேண்டியது இதுவரை வெளியான செந்தணல் பத்திரிகையில் இருந்த மாபெரும் பரிசுப் போட்டி என்ற கூப்பன் (25) இருபத்தய்ந்தினை கீழே கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கான பதில்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 30-06-2004. அனுப்பும் குப்பன்கள் எமது பத்திரிகையில் இருந்து வெட்டப்பட்டதாக இருக்க வேண்டும் (Photo Copy) பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பெறுமதிவாய்ந்த மூன்று முதல்பரிசுகள்**

சித்திரமும் சிறுகதையும் (16 வயதிற்கு மேற்பட்டோர்)
சிறுவர் புதிர்ப்போட்டி (9 வயது முதல் 16வயது வரை)
வர்ணம் தீட்டும் போட்டி (6வயது முதல் 16 வயதுவரை)



**கணினி ஒன்று**
**வயலின் ஒன்று**
**ஓர்கன் ஒன்று**

**10 ஆறுதல்பரிசுகளும்**

☞ சி.சி முதல்பரிசு கணினி ஒன்று ☞ பு.போ முதல்பரிசு வயலின் ☞ வ.போ முதல்பரிசு ஓர்கன்

மூன்று பெறுமதிவாய்ந்த முதல் பரிசுகளுடன் (10) பத்து ஆறுதல்பரிசுகளும் வழங்கப்படும். உங்களுக்கும் பரிசு வேண்டுமா செந்தணல் படியுங்கள்.

**கூப்பன்களை அனுப்ப வேண்டிய முகவரி: த.பெ.இல: 1601, கொழும்பு.**

# மாபெரும் பரிசுப்போட்டிக்கான கேள்விகள்

### சித்திரமும் சிறுகதையும் (16 வயதிற்கு மேற்பட்டோர்)

01. கனல் 07ல் இடம்பெற்ற சித்திரமும் சிறுகதையும் படத்தில் உள்ள இரண்டு உயிரினங்களின் பெயர்களைத் தருக?
02. கனல் 07ல் சித்திரமும் சிறுகதையும் கதையில் சிங்கன் எவ்வாறு இறந்தான்?
03. கனல் 08ல் இடம் பெற்ற சித்திரமும் சிறுகதையின் ஆசிரியரின் பெயர் என்ன?
04. கனல் 08ல் சித்திரமும் சிறுகதையும் கதையில் இடம்பெற்ற ரகுராம் என்பவர் யார்?
05. கனல் 09ல் சித்திரமும் சிறுகதையின் தலைப்பு என்ன?
06. கனல் 09ல் சித்திரமும் சிறுகதையில் வருகின்ற இஸ்மயில் என்பவர் ஜேசு படத்தை எத்தனையாம் ஆண்டு யாரிற்கு அன்பளிப்புச் செய்தார்.?
07. "சிதைந்துபோன சிந்தனைப்போராட்டம்" என்ற தலைப்பில் இடம்பெற்ற சித்திரமும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
08. "பழஞ்சோறு" என்ற சித்திரமும் சிறுகதையும் எத்தனையாவது கனலில் இடம்பெற்றது? இதை ஆக்கியவர் யார்?
09. சித்திரமும் சிறுகதையும் பகுதியில் இடம்பெற்ற பழஞ்சோறு எனும் கதையில் முருகேசு எப்படி இறந்தார்?
10. இக்கதையில் முக்கியமாகப் பேசப்படுகின்ற இராணுவ நடவடிக்கை எது?
11. கடமை என்ற சித்திரமும் சிறகதையிலும் வருகின்ற முத்தையாவின் தொழில் என்ன? இக்கதையை ஆக்கியவர் யார்?
12. வசந்தம் தொலைத்த காதலி என்ற கதையில் இடம்பெற்ற வசந்தாவின் மகளுடைய பெயர் என்ன அவளின் (மகள்) தந்தை யார்?
13. நிழலான நிஜங்கள் என்ற கதையில் இடம்பெறுகின்ற ஈசனை, குண்டு போட்டு கொன்ற விமானத்தின் பெயர் என்ன?
14. "மந்திரக் கண்ணாடி" என்ற கதையில் இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட அந்தக் கண்ணாடிப் பெட்டியினுள் இருந்த கண்ணாடியின் நிறம் என்ன அக் கண்ணாடியுள் இருந்த கடிதத்தில் என்ன வாசகங்கள் எழுதப்பட்டிருந்தது?

### சிறுவர் புதிர்ப்போட்டி (9 வயது முதல் 16வயது வரை)

1. கனல் 8இல் புதிர் போட்டியிற் தரப்பட்ட கேள்விகளுள் அறுசுவைகளில் ஒன்று?
2. கனல் 8இல் புதிர் போட்டியில் பரிசு பெற்றவரின் ஊருக்கு ஒரு சிறப்பம்சம் உண்டு இது என்ன?
3. கனல் 10 இல் இத்தாலி நாட்டிற் பண்புடைய நாகரீகம் தோன்றிய நகரம் எது?
4. கனல் 10 இல் இது சிலரது முகங்களில் இயல்பாகவே தோன்றும் சிலர் இதனை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொள்வார்கள் இது புதிர்போட்டியில் தரப்பட்டது அது எது?
5. கனல் 11 இல் புதிர் போட்டியில் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு மாவட்டம் தரப்பட்டது. அது எந்த மாவட்டம்?
6 கனல் 12 இல் கைத்தொழில்கள் மூலம் அபிவிருத்தி அடைந்த ஆசியநாடு ஒன்று புதிர் போட்டியில் இடம் பெற்றது. அது எந்த நாடு?
7. கனல் 12 இல் புதிர் போட்டியில் இடம்பெற்ற ஒரு சொல் மூலிகையாகவும் இந்துமத காரியங்களுக்காகவும் பயன்படுத்தப்படும் அது எந்தச் சொல்
8. கனல் 13 புதிர் போட்டியில் இறைவனது திருமேனிகளில் ஒன்று கூறப்பட்டது அது எது?
9. கனல் 13 புதிர் போட்டியில் இடம் பெற்ற இலங்கையின் பிரபல்யமான யாத்திரைத் தலம் எது?
10. கனல் 14 இல் சூரியனின் இன்னொரு பெயர் புதிரில் வந்தது அது எது?
11. கனல் 7 முதல் 20 வரையான இதழ்களில் இடம் பெற்ற புதிர்போட்டிகளின் விடைகளை வைத்து 50 வசனங்களைக் கொண்ட தரமான கட்டுரை ஒன்றை எழுதவும்.


### வர்ணம் தீட்டும் போட்டி (6வயது முதல் 16 வயதுவரை)

1. கனல் 8இல் வர்ணம் தீட்டும் போட்டியிற் தரப்பட்ட உருவத்தின் ஒத்த கருத்து இரண்டு தருக?
2. வர்ணம் தீட்டும் போட்டியிற் பரிசு பெற்றவர்களின் பாடசாலையும் தரப்பட்டிருந்தது. அந்தப் பாடசாலையின் பெயரில் உலக இரட்சகரின் தந்தையின் பெயரும் இடம் பெற்றது. யார் அந்த இரட்சகர் யார்?
3. கனல் 10வர்ணம் தீட்டும் போட்டியிற் பரிசு பெற்றவரின் பாடசாலையில் ஒரு பேரறிஞரின் பெயரும் வந்தது. அவரின் இயற்பெயர் என்ன?
4. கனல் 10 வர்ணம் தீட்டும் போட்டியிற் பரிசு பெற்றவரின் ஊர்களில் இரு வேறு பொருள் தரும் இரண்டு ஊர்கள் இடம் பெற்றன அவை இரண்டும் எவை?
5. வர்ணம் தீட்டும் போட்டியிற் பரிசு பெற்றவர்களின் பாடசாலையின் பெயர்களில் ஒரு புனிதரின் பெயர் இடம் பெற்றது. அப்புனிதர் யார்?
6. கனல் 11 வர்ணம் தீட்டும் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவரின் பாடசாலையில் பெயருக்கும் செல்வங்கள் ஒன்றுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு அந்தச் செல்வம் எது?
7. கனல் 13 வர்ணம் தீட்டும் போட்டியில் இடம் பெற்ற படத்தில் ஒரு பொழுது போக்கு சாதனம் இடம் பெற்றது அது என்ன?
8. கனல் 14 வர்ணம் தீட்டும் போட்டியில் பரிசு பெற்றவர்களின் பெயர்களில் இரு மதங்களிற்கும் பொதுவான ஒரு பெயர் இடம் பெற்றது. அது எது?
9. கனல் 7முதல் 20 வரையான இதழ்களில் இடம்பெற்ற வர்ணம் தீட்டுவதற்காக சித்திரங்களை வைத்து 15 வசனங்க்ள் கொண்ட கட்டுரை எழுதவும்.

# இலங்கையின் சாதனை வீரர்

## - முத்தையா முரளிதரன்

கிரிகெட் வரலாற்றில் முதன் முறையாக இலங்கைத் தமிழர் ஒருவர் உலக சாதனையை நிகழ்த்திய பெருமையை முத்தையா முரளிதரன் நமது நாட்டிற்கும், நாட்டு மக்களிற்கும் பெற்றுத் தந்துள்ளார்.




இதை விட இன்னொரு மகிழ்ச்சி என்னவென்றால், தமிழ் ஊடகங்களிற்கு வழங்கிய செவ்வியில் அவர் முதன் முறையாக தமிழிற் பேசியுள்ளார். முரளிதரன் ஒரு சாதாரண குடும்பத்திற் பிறந்து கண்டி கட்டுகஸ் தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வி கற்றவர். இவர் பாடசாலைக் காலங்களில் கிரிக்கெட் போட்டிகளிற் பங்குபற்றி சிறந்த பந்து வீச்சாளராக திகழ்ந்தார். அதன் பின் பல போட்டிகளில் தனது திறமையை வெளிப்படுத்தி இன்று உலக சாதனை வீரராக தனது பெயரை நிலைநாட்டியுள்ளார்.

32 வயதேயான முரளிதரன் 89 டெஸ்ட் போட்டிகளில் 520ற்கும் மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். குறைந்த டெஸ்ட் போட்டிகளில் அதிக எண்ணிக்கையான விக்கெட்டுக்களை வீழ்த்திய பெருமையும் இவரையே சேரும். இந்த உலக சாதனை வீரர் கடந்த 21.05.04 வியாழன் அன்று தாய் நாடு திரும்பினார். இவரது வருகையை எதிர்பார்த்திருந்த நாட்டின் மூவின மக்களும் இனபேதமின்றி வீரரிற்கு பலத்த வரவேற்பை அளித்தனர்.

சாதனையைப் படைத்து நாடு திரும்பிய வீரர் விமான நிலையத்திலிருந்து திறந்த வாகனமொன்றில் இலங்கை கிரிக்கட் சபை நோக்கி அழைத்து வரப்பட்டார். வரும் வழியின் இரு மருங்கிலும் பொது மக்கள் இவரிற்கு கோலாகலமாக பலத்த வரவேற்பை அளித்தனர். இதனையடுத்து கிரிக்கெட் சபையில் சாதனை வீரரை வரவேற்கும் வைபவம் இடம்பெற்றது.

கடந்த சனிக்கிழமை காலை 10 மணியளவில் தான் பிறந்த மண்ணான கண்டிக்கு காலடி எடுத்து வைத்தபோது கண்டியின் நுழைவாயிலான பேராதனை பூங்காவிற்கருகில் அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் பயின்ற பாடசாலையான புனித அந்தோனியார் கல்லூரிக்கு திறந்த வாகனமொன்றில் அழைத்து வரப்பட்டார். இதன் போது வீதியின் இரு மருங்கிலும் பாடசாலை மாணவர்கள். பொதுமக்கள் ஆகியோர் இவரிற்கு கோலாகலமாக வரவேற்பு அளித்தனர். இவர்கள் மாலைகள் அணிவித்தும், பொன்னாடைகளைப் போர்த்தியும், தங்களுடைய வரவேற்பை வெளிப்படுத்தினர். இவர் தான் நிகழ்த்திய சாதனையைப் பற்றி கூறும் போது:- "எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது. எதிர்வரும் காலங்களில் இன்னும் சாதனைகளை நிகழ்த்த வேண்டுமென்று மிகவும் ஆவலாக உள்ளேன் என்றார்."

இவர் இன்னும் 3 வருடங்களின் பின்னர் அதாவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் பின் ஓய்வுபெறப் போவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இது பற்றி அவர் கூறுகையில், "இந்த உலக சாதனையை அடுத்து என்னுடைய அடுத்த நோக்கம் உலகக்கோப்பையை கைபற்றுவதுதான். அதைவிட டெஸ்ட் போட்டிகளில் இன்னும் அதிகளவு எண்ணிக்கையான விக்கெட்டுக்களை கைப்பற்றவேண்டும். தூஸ்ரா பந்து வீச்சின் மூலம் தான் மேற்கொள்ள வேண்டிய அவசியமொன்றில்லை. சாதாரண பந்துவீச்சின் மூலமே என்னால் செய்ய முடியும். ஓய்வு பெறுவது பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை ஏனென்றால் அதற்கு இன்னும் 3 வருடங்கள் இருக்கின்றது. அதன் பின்னர் தான் கூறமுடியும் என்றார். இறுதியில் அவர்தான் சாதனை நிகழ்த்த உறுதுணையாக இருந்த தனது பெற்றோர், முன்னாள், இன்னாள் கிரிக்கெட் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள். மற்றும் பலரிற்கும் நன்றி கூறினார்.

# விளையாட்டுச் செய்திகள்

## அவுஸ்ரேலியா பயணத்தை முரளி புறக்கணிக்கக் கூடாது

**-ஷேன் வோர்ன்**



அவுஸ்திரேலியா கிரிக்கட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன் டெஸ்ட்போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை சாய்த்தவர்கள் வரிசையில் முன்றாவது இடத்தில் இருக்கின்றார். இவர் இதுவரை 517 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

அவுஸ்ரேலியா-சிம்பாவே டெஸ்ட் தொடர் ரத்து செய்யப்பட்டதை தொடர்ந்து இவர் நாடு திரும்பியுள்ளார். இத் தொடர் நடைபெற்றிருந்தால் இவர் முரளிதரனின் சாதனையை முறியடித்திருக்கலாம்.

தூஸ்ரா பந்து வீச்சில் சர்சையை கிளம்பியது அவுஸ்திரேலியா இந்தப் பிரச்சனையை தொடர்ந்து எதிர்வரும் ஜுலை மாதம் நடக்கவிருக்கும் போட்டியில் கலந்து கொள்ளும் இலங்கை அணியில் முரளிதரனிடம் பெறமாட்டார் என்றும், அந்த பயணத்தை தான் புறக்கணிப்பதாகவும் கூறியிருந்தார். ஆனால் இப்போட்டியில் முரளி கட்டாயம் இடம்பெற வேண்டும் என ஷேன் கருத்து தெரிவித்துள்ளார். இது குறித்து கூறுகையில் இப்போட்டியை முரளி புறக்கணிக்கக்கூடாது. அவுஸ்ரேலியா ரசிகர்கள் முரளியின் பந்து வீச்சை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

900 விக்கெட்டுக்களை வீழ்த்தக் கூடிய வலிமை முரளியிடம் இருக்கின்றது. இவருடைய புகாரிற்கு அவரே முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

## சக்லைன் முஷ்டாக்கிற்குப் பதில் சஹீர்கான்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் சஹீர்கான் கடந்த சில மாதங்களாக காயம் காரணமாக விளையாடவில்லை. இதனால் அவர் அவுஸ்திரேலியா, மற்றும் பாகிஸ்தான் தொடர்களில் பங்கேற்கவில்லை. இவர் சிகிச்சைக்காக தற்போது லண்டனில் உள்ளார். இதனால் இவர் அங்கு நடைபெற உள்ள கவுண்டி போட்டிகளிற் பங்குபற்ற உள்ளார்.

அடுத்த மாதம் பெங்களூரில் நடைபெற உள்ள வேகப்பந்து வீச்சாளரிற்கான பயிற்சி முகாமிற்கு இந்திய கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்துள்ளது. அதற்குள் இவர் தான் முழுமையாக உடல் தகுதி பெற வேண்டும் என்ற முடிவு செய்துள்ளார். ஸ்ரே அணிக்காக விளையாடும் பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஷ்டாக்கிற்கு பதிலாக சஹிர்கான் விளையாடவுள்ளார்.

## டெஸ்ட் போட்டிகளில் கெய்ன்ஸ் சாதனை

அண்மையில் இங்கிலாந்திற்கும் நியுசிலாந்திற்கும் இடையிலான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வீரர் கிறீஸ் கெய்ன்ஸ் அதிக சிக்சர்களை அடித்தவர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார். இவர் அடித்த அதிகூடிய சிக்சர்கள் 86 ஆகும். இவர் இதன்மூலம் மே தீவுகளின் ஜாம்பவான் விவியன் ரிச்சாட்சின் சாதனையை (84) முறியடித்தார்.




## பதில்கள்

? **திருசூலியாரே! படிக்கும் போது என்ன சிந்தனை இருக்க வேண்டும்?**

செந்தில்குமரன். வவுனியா.

! முதலில் இந்த மாதிரியான கேள்வி கேட்கும் சிந்தனையை விட்டு விட்டு ஒழுங்காகப் படிக்கப்பாரும்.

? **திருசூலியாரே! ஒரு ஆணின் வெற்றிக்கு பெண்தான் காரணம் என்றால், பெண்ணின் வெற்றிக்கு அவளேதானே காரணம். இதிலிருந்து உங்களுக்கு என்ன தெரிகிறது?**

இ. றோசலின். நானாட்டான்.

! ஆண் வெறும் கருவியாக மட்டும் தான் இருக்கின்றான். அந்தக் கருவியை இயக்கும் கர்த்தாவாக பெண் தான் விளங்குகின்றாள். கர்த்தாவாக மட்டுமல்ல ஒரு கருவியை உருவாக்கக் கூட பெண்ணால் முடியும்

? **திரிசூலியாரே! நிம்மதி எப்போது எம் மிடத்தில் தோன்றும்?**

செந்தில்குமரன். வவுனியா.

! மூளையால் மட்டுமே எப்பொழுதும் பேசாமல், இதயத்தாலும் பேசிப்பாருங்கள் நிம்மதி உங்களைவிட்டுப் போக மாட்டேன் என அடம்பிடிக்கும்.

? **திரிசூலியாரே! பெண்களின் ஆடைக் குறைப்புப் பற்றி?**

J. ஜெபநேசன். மன்னார்

! அவர்களும் என்ன தான் செய்வது வருமான வரி ஏறிக்கொண்டே போனால் எதிலாவது சிக்கனத்தை கடைப்பிடிக்கத்தானே வேண்டும்.

? **கோயிலுக்கு போகும் தமிழ் பெண்கள் இறைவனை வணங்க போகவில்லை பெஷன் சோ காட்டப் போகிறார்கள்?**

கார்த்திக். கொழும்பு.

! அதையும் பார்க்கவென்று உங்களைப் போல் சிலபேர் போகிறீர்கள் தானே. (நீர் முதலில் கடவுளை வணங்க முயற்சி செய்யும்)

? **ஆண், பெண் இருவரும் நண்பர்களாக பழகும் போது அதை பார்க்கும் சமூகம் கதை கட்டுகிறது இப்படியிருக்கையில் ஆண், பெண் நண்பர்களாகப் பழகினால் பிழையா? இதற்கான பதிலை எதிர்பார்க்கிறேன் திரிசூலியாரே!**

மு. தவா. வவுனியா.

! யார் சொன்னார்கள் பிழை என்று. மனச்சுத்தியாக இருக்கும் மட்டும் மற்றவர்களைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாதேயும்.

? **அபிமான திரிசூலியாரே! அந்தஸ்தைப் பார்த்துப் பழகுபவர்களை பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

V. S, வவுனியா.

! உங்களிடமிருந்து எதையோ பெற்றுக் கொள்ள நினைக்கிறார்கள்.

? **நாங்கள் இரண்டுபேர் அதாவது உயிர் என்று சொல்லலாம். எங்களுடைய (S.V) நட்பு 3 வருடமாக அன்பாக இருக்கின்றோம். ஆனால் பயமாக இருக்கின்றது. ஏன் என்றால் நாட்டில் யுத்தம் மீண்டும் தொடங்குமா? தொடங்கினால் எங்களுடைய நட்பு பிரிந்து விடுமா? திரிசூலியாரே கூறுங்கள். உங்களுடைய கருத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்?**

S.V. வாணிசுகந்தா. வவுனியா.

! நட்பை யாராலும் பிரிக்க முடியாது இதற்கு யுத்தம் விதி விலக்கல்ல.

? **சீதனம் வேண்டுதல் மரணதண்டனைக் குரியது என சட்டம் வந்தால்?**

கோ. சரண். மாத்தளை.

! அப்படி ஒரு சட்டம் வந்தால் அதை விலைக்கு வாங்க என சிலர் இருப்பார்கள் தானே நீர் எப்படி.

? **தளபதி கர்ணாவின் தோல்வி..... ஏன் இவ்வளவு விரைவில்?**

ர. திலீபன். மட்டக்களப்பு.

! உண்மை ரொம்ப நாளைக்கு உறங்குவதில்லை.

? **திரிசூலியாரே! நான் முதலில் காதலித்தவர் என்னை விட்டுவிட்டு வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துவிட்டார். ஆனால் அவரை நான் மறந்து விட்டேன். அவருக்கு இப்போது ஒரு பெண் குழந்தையும் இருக்கின்றது. அவர் என்னுடன் கதைப்பதற்கு முற்படுகின்றார் அதற்கு என்ன காரணம்?**

பு. நளினி. வவுனியா.


! அவரால் இன்னும் உங்களை மறக்க முடியவில்லை.

**உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**திருசூலியன் பதில்கள்**

**த.பெ.இல: 1601, கொழும்பு -03.**

# திரை








## துளித்துளியாய்



நதியா அம்மா வேடத்தில் நடிப்பதற்காக 15 லட்சம் ரூபாய் கேட்கிறாராம் இறுதியில் 10 லட்சத்திற்கு ஒத்துக் கொண் டுள்ளாராம்.



பத்திரிகைகளிற்கு பேட்டி கொடுக்கக் கூடாது என்று மனேஜா் சொன்னதால் நிருபா் களைக் கண்டதும் ஓடுகிறாராம் சோனியா அகா்வால்.



மீனாவிற்குத் தூக்கம் என்றால் ரொம்பப் பிடிக்கும். இதனால் இவா் தூங்கும் போது யாா் எழுப்பினாலும் திட்டுத்தான் வாங்குவாா்களாம்.




திருமதி. விஜயகாந்

விஜயகாந்திற்கு ஆங்கிலம் பேச வராதாம். இப்பொழுது அவா் படப் பிடிப் பிற் கு வெளிநாடுகளிற் கு செல்வதால் ஓய்வுநேரங்களில் மனைவி பிரேமலதாவிடம் தான் ஆங்கிலம் கற்றுக்கொள்கிறாராம்.

## “ஜக்கு பாய்”

ரஜனியின் அடுத்த பட அறிவிப்பு கிடைத்துவிட்டது படத்திற்குப் பெயா் சூட்டியிருக்கிறாா்கள் "ஜக்குபாய்" என்று வித்தியாசமாக இருக்கிறதல்லவா? படத்தை K.S.ரவிக்குமாா் தான் இயக்குகிறாா் இசை A.R.ரகுமான் கதாநாயகி ஏனைய நடிக நடிகைகள் இன்னும் தெரிவாகவில்லை, மகாராஷ்டிராவில் வாழ்ந்து வந்த தீவிரவாதி ஒருவனை, சாமியாராக வாழ்ந்து வருகின்ற சாந்த ஜக்குபாய் என்கிற பெண்மணி சந்திக்கின்றாா். இந்த தீயவனை நல்லவனாக்கும் பணிகளிற் தீவிரமாகிறாா். இறுதியில் அவன் எப்படி நல்லவனாகிறான் என்பதே மீதி. இதுவே இப்படத்தின் சுருக்கம். இதில் ரஜனிக்கு அப்பா மகன் என்ற இரட்டை வேடம். இது தான் ரஜனி படம் பற்றி பரபரப்பாகப் பேசப்படும் கதைச் சுருக்கம். ஆனால் படம் ரிலீசாகிய பிறகுதான் உண்மைக் கதை என்னவென்று புரியும்.





'காதல் FM' மணிகண்டன் - ஷிவானிசிங்



பிரசாந்



'ஏய்' சரத்குமாா் - வடிவேலு



'ஜெய்சூா்யா'வில் அா்ஜுன் - லைலா

## சினி(மா)விமா்சன பத்துவரிக் கவிதை



வாசகா்களே!

இங்கு தரப்பட்டுள்ள திரைப் படக் காட்சி பற்றிய உங்களது சினிமா விமா்சனக் கவிதைகளை 10 வரிக்குள் வடித்தனுப்புங்கள். சிறந்த 5 கவிதைகள் “சினி(மா) கவி” பகுதியில் இடம் பெறும்.

அனுப்பவேண்டிய முகவரி :

“சினி(மா) கவி”
த.பெ.இல. 1601
கொழும்பு.

இறுதி திகதி : 13-06-2004



'சதுரங்கம்' ஸ்ரீகாந்த் - சோனியா

## நட்சத்திரப் பதில்

*சினிமா ரசிகா்களே*

உங்கள் உள்ளம் கவா்ந்த இளம் பாடகா் காா்த்திக் அடுத்தடுத்த செந்தணல் இதழில் உங்களைச் சந்திக்கவுள்ளாா். நீங்கள் கேட்க விரும்புபவற்றை ஒரு தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்பவும். தபாலட்டைகள் மாத்திரமே சோ்த்துக்கொள்ளப்படும்.

த.பெ.இல: 1601
கொழும்பு.

## “அட்டகாசம்” படத்திற்கு ஷாலினி ரெக்கமென்டா?

அஜித்தின் அடுத்த படமான அட்டகாசம் படத்தில் கதாநாயகியாக பூஜா நடித்துவருகின்றாா். அவரிற்கு அஜித்தின் மனைவி ஷாலினி ஏற்கனவே ப்ரெண்டாம். இதனால் ஷாலினிதான் இந்தப் படத்தில் அஜித்திற்கு ஜோடியாக நடிப்பததற்கு ரெக்கமென்ட் பண்ணி னாராம் என்று செய்திகள் வெளியாகி வருகின்றது. இதுபற்றி அவா் தெரிவிக் கையில் ஷாலினிக்கு பெங்களூரில் சில ப்ரெண்ஸ் இருந்தாங்க அவா்களைப் பாா்க்க பெங்களூா் வருவாங்க. அவருடைய பெங்களூா் ப்ரெண்ஸ் எனக்கும் ப்ரெண்ஸானதால ஷாலினியின் பழக்கம் கிடைத்தது. எனக்கு சினிமாவில வாய்ப்பு கிடைத்த போது ஷாலினியின் நம்பரை வாங்கிப் பேசினேன். ஏன்னா எனக்கு சினிமா பற்றி தெரியாது. தமிழ் தெரியாது. தமிழ் நாடு தெரியாது. ஷாலினி எனக்கு ரெக்கமண்ட் பண்ணலை சரண் சாா் தான் இப்படியொரு ரோல் இருக்கு பண்ணிறியா என்று கேட்டாங்க அதன் மூலமாதான் இந்த வாய்ப்பு கிடைத்தது.



## ஆட்டோகிராப் அனுபவம் பற்றி

### கோபிகா




சேரன் சாரின் பாரதி கண்ணம்மா, பொற்காலம், பாண்டவா்பூமி ஆகிய படங்களை நான் ஏற்கனவே பாா்த்திருக்கிறேன். அவரே இயக்கி காதாநாயகனாக நடித்த "சொல்ல மறந்த கதை" படத்தையும் பாா்த்திருக்கிறேன். திறமையான டைரக்டா், திறமையான நடிகரும் கூட. நான் நடித்த முதல் தமிழ் திரைப்படமே ஒரு அனுபவம்மிக்க டைரக்டரின் இயக்கத்தில் என்பதை நினைத்தால் எனக்கு பெருமையாக இருக்கிறது. அவா் சொல்லித் தந்ததை அப்படியே நான் நடித்திருந்தேன். அதே போல அந்தப் படத்தில் நடித்ததிற்கு பாராட்டுக்கிடைத்தது. அந்தப் பாராட் டெல்லாம் சேரன் சாரையே சேரும்.

## சினி(மா) விமா்சனக் கவிதை

வில்லனைத் தேடி வீராப்புடன்
வீறு நடைபோடும் நாயகனே
வீணான சபலம் எதற்கு
வீரத்துடன் போராடு
வீண் வம்புகளுக்கு இடமளிக்காதே
வேகமாக விரைந்து ஓடு
துணிந்து நில் தொடா்ந்து செல்
தோல்வி கிடையாது.

**கந்த.ஞானமுத்து**
**கைதடி மேற்கு.**



மனிதம் இல்லா
மனிதனை விட
அறிவில்லா..
ஐந்தறிவு ஜீவன்
உசத்தி தான்
அரவணைத்துக் கொள்வதில்!

**ரஜனி சந்திரலிங்கம்**
**எட்டாம்பிட்டிய**
**பதுளை.**

வாழும் கலை..!
ஊமை விழிகள் சொன்ன
உண்மையின் கதை...
உணா்வின் வெளியில்
கண்ட கடவுளின் நிலை...
நட்பின் கருவில் விழுந்த
இன்னொரு விதை...
நாளைய உலகிலும்
இது வாழு கலை..!

**சி.ஹனா**
**யாழ் -பல்கலைக்கழகம்**

மனிதங்கள் மரணிக்கும்
சுடுகாட்டு மண்ணில்
பிறந்த இவனுள்
மனிதாபிமானமிருக்கு
மனிதனாகப் பிறந்த - மனித
விலங்குகளிடம் துளி
மனிதாபிமானமுமில்லை
மயானப்பிறவி பிதாமகன்
மனிதாபிமானத்தை சொல்லிவிட்டான்

**எஸ்.பி.பாலமுருகன்**















சமூகத்தில் இசையை வளர்போம் எனும் தலைப்பில் கடந்த 29-02-2004ம் திகதியன்று, வவுனியாவில் இயங்கிவருகின்ற "மியூசிக் சென்டர்" இசைக்குழுவினர் வியத்தகு இசை நிகழ்ச்சி ஒன்றினை நடத்தியிருந்தனர்

இவ் "மியூசிக் சென்ரர்" மூன்று வருடமாக இயங்கி வருகின்றது. இந் நிகழ்வு மூன்றாவது வருடாந்த மாணவர் இசை நிகழ்ச்சியாகும். இவ் இசை நிகழ்சிகள் ஹோட்டல் றோயல் பாக்கில் இடம்பெற்றது.

சுமர் 50க்கும் அதிகமான மாணவர்கள் மாறி மாறி மேடையை ஆக்கிரமித்து இசை சிந்தும் பட்டாம் பூச்சிகள் போல பாடி ரசிகர்களை இசை வெள்ளத்திற் திக்கித் திணறடித்திருந்தனர்.



இந் நிகழ்வில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு சி.இரகுநாதப் பிள்ளை அவர்கள் மங்கள விளக்கேற்றுவதையும் அவரருகில் மியூசிக் சென்டர் இயக்குனரும் ஆசிரியருமாகிய திரு.எம்.ஈஸ்ரஸ்சான்ஸ் அவர்கள் தலைமைதாங்குவதையும் படத்திற் காணலாம். அத்துடன் மியூசிக் சென்டர் மாணவர்கள் பாடிக்கொண்டிருப்பதையும் படத்திற் காணலாம்.

படம், தகவல், P.கல்பணா









அண்மையில் நுவரெலியா கந்தப்பளையில் நடைபெற்ற தமிழர்கள் மீதான வன்முறையை எதிர்த்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 19ம் திகதி காலை பாராளுமன்றத்திற்கு முன்பாக கறுப்புப் பட்டியணிந்து அரசாங்கத்திற்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு நிற்பதைப் படத்தில் காணலாம்

## வெடிக்கும் எரிமலை




ஆயிரத்துதொளாயிரத்து தொண்ணூற்றொன்றில் பிலிப்பைன்ஸ் நாட்டில் மரணஓலம் விண்ணை முட்டியது. ஆம் அந்த நாட்டிலுள்ள எரிமலை வெடித்துச் சிதறியது அதனைத் தொடர்ந்து கடும் காற்றுடன் பேய் மழை பெய்தது. இதனால் 350 பேர் பரிதாபமாய் உயிரிழந்தனர். அந்த அகோரக் காட்சியையே இங்கு காண்கிறீர்கள்.

## சித்திரமும் சிறுகதையும்




**நீங்களும் எழுதலாம்**

இப்படத்திற்குப் பொருத்தமான குட்டிக்கதையினை 250 சொற்களுக்கு மேற்படாதவாறு எழுதி அனுப்புங்கள் சிறந்த கதை பிரசுரிக்கப்படுவம். அனுப்ப வேண்டிய முகவரி: த.பெ.இல. 1601, கொழும்பு



## கடத்தல் மன்னன்

ஒரு கடத்தற் காரன் எப்படி இருப்பான் எப்படிச் செயற்படுவான் என்று எத்தனையோ சினிமாக்கள் மிகத்துல்லியமாய் படம் பிடித்துக் காட்டியுள்ளன. ஆனால் அத்தனை சினிமாக்களையும் மிஞ்சி விட்டது போதைப் பொருட் கடத்தற்காரன் பேப்லோ எஸ்கோபார் வாழ்ந்த வாழ்க்கை.

கொலிம்பியா நாட்டைச் சேர்ந்த எஸ்கோபார் தன் நாட்டை மட்டுமல்ல, அமெரிக்கா ஐரோப்பா ஆகிய கண்டங்களையும் ஆட்டிப்படைத்தவன். பக்கத்துநாடுகளில் பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை குத்தகைக்கு எடுத்து போதைப் பொருள் செடியை பயிரிட்டு உலகம் முழுமையிலும் ஒரு பக்காவான பிஸினஸாக நடத்தியவன். அவன் அனுப்பும் போதைப் பொருளால் அமெரிக்கர்களின் வாழ்க்கை குட்டிச்சுவராக, கொலிம்பிய அரசு அவனை சிறையிலடைத்தது. தப்பித்துப் போன அவனை 1993ஆம் ஆண்டு ஒரு பெரிய இராணுவப்பட்டாளமே சுற்றி வளைத்து சுட்டுக்கொன்றது.






இப்பத்திரிகை பெரஹெரமாவத்த, கொழும்பு-03ல் அமைந்துள்ள சூரியன் வெளியீட்டகத்தினற்காக இல. 315, ஜம்பட்டாவீதி, கொழும்பு 13ல் அமைந்துள்ள ஈ குவாலிட்டி கிரபிக்ஸில் அச்சிட்டு 29-05-2004 அன்று வெளியிடப்பட்டது.